www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 11/00
ஏப்.13–19,1997

# வாரமலர் தினமுரசு

200

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு

# சந்திரிகாவுக்கு பிரபா அனுப்ப விரும்பிய பரிசு

# தலை நகரில் சரணடைந்த புலி



பரிசு மழை

200 அதிஷ்டசாலிகள்

கூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பகிர்ந்து கொள்வோம்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இது
இருநூறாவது படிக்கட்டு!
உங்கள் பேரன்புடன்
தடுமாறாது
'முரசு' முன்னேறி வந்திருக்கிறது!

சிறு குறை கண்டாலும்
உடனடியாக-
உரிமையுடன் மடல் எழுதி,
தவறைச் சரிசெய்யும்
வாசக நெஞ்சங்களின்
ஈடுபாடு பிரமிக்கச் செய்கிறது!

'முரசு' மேல்
மாறாக் காதல் கொண்ட
உங்கள் அன்புக்கரங்களின்
அரவணைப்பில்
மெய் சிலிர்க்கிறது!
உற்சாகம்
உள்ளமெங்கும் ஊற்றெடுக்கிறது!

கடந்து வந்திருப்பது
கடுகளவு தூரம்தான்!
எனினும் பத்திரிகைப் பணி
மலையளவு சுமைதான்.
அதனை சுகமான சுமையாக
நினைக்க வைத்ததும்,
நிமிர்ந்து நிற்க வைத்ததும்
நீங்கள் தந்த பலம்தான்!

வாசக நெஞ்சங்களின்
நம்பிக்கைக்கு மாத்திரமே
'முரசு' என்றும் விசுவாசமாயிருக்கும்!

வாசகர்கள் புத்திசாலிகள்!
வாசகர்கள்தான் எஜமானர்கள்!
அவர்களே நீதிபதிகளுமாவர்!
முரசின் எஜமானர்களான நீங்கள்
வித்தியாசமான புத்திசாலிகள்!

'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில்
ஒரு திகதி தவறுதலானாலும்,
சினி விசிட்டில்
ஊர்வசியை குஷ்பு என்றாலும்
'எக்ஸ்ரே' கண்களால்
கண்டு பிடித்து விடுகிறீர்கள்!
அன்போடு தொடுக்கும்
மடல் அம்புகளால்
புரட்டி எடுத்துவிடுகிறீர்கள்!

'முரசு'
தானாக விரும்பினாலும்கூட
தவறு செய்ய முடியாதளவுக்கு
கனிவோடு கலந்த கண்டிப்பான
நீதிபதிகளாக நீங்கள் இருக்கிறீர்கள்!

'முரசு' என்றென்றும்
உள்ளதை உள்ளபடி சொல்லும்!
உண்மையைச் சொல்ல முடியாமல்
அதிகாரக் கத்தரி நீளுமானால்
'முரசு' மௌனமாக இருக்கும்;
பொய்களுக்கு புகலிடம் தராது!

எனினும் தணிக்கைக் காலத்திலும்
'முரசு' முடிந்தளவுக்கு
உண்மைகளை உரைத்தது
என்பதை நீங்கள் அறிவீர்கள்!

முதலாம் முரசில்- முரசத்தில்-
பத்திரிகை உலகில்
"முரசு முத்திரை பதிக்கும்!
முரசின் பாணியே மேலோங்கும்!"
என்று நான் குறிப்பிட்டிருந்தேன்!
அது தம்பட்டமா,
சரியாகிவிட்ட கணிப்பா?
என்பதை தீர்மானிக்கும்
நீதிபதிகளும் நீங்கள்தான்!

வாழ்த்தியவர்கள்-
வாரியணைத்தவர்கள் மட்டுமல்ல,
வசைபாடியவர்கள்கூட
முரசின் வளர்ச்சிக்கு
தம்மையறியாமல் உதவியிருக்கிறார்கள்!

கல்லடிபடுவதுகூட
காய்க்கும் மரத்துக்குப் பெருமைதான்!

முரசின் விமர்சனங்கள்
தங்கள் முகத்திரையைக்
கிழிக்கும் வலிமையானவை
என்பதை அங்கீகரிப்பதால்தானே
அவர்கள் எரிந்து விழுகிறார்கள்!
முரசுக்கு அது பெருமைதானே!

முரசின்
சாதனைகளும்-பெருமைகளும்
கூட்டு முயற்சியின் அறுவடை!

முரசின் ஊழியர்கள்-
செலுத்துகின்ற உற்சாக உழைப்பும்,
நிருபர்கள்-மற்றும் முகவர்களின்
சுறுசுறுப்பான பங்களிப்பும்
வாசக நெஞ்சங்களின்
வசீகரமான ஊக்குவிப்புக்களும்
இணைந்த கூட்டு முயற்சி!

எனவே-சாதித்தவற்றுக்காக
சந்தோசங்களைப் பகிர்ந்துகொள்வோம்!
நேர்ந்த தவறுகளை
எதிர்காலத்தில் திருத்திக் கொள்வோம்!
உங்கள் பலத்தில்-உங்கள் அணைப்பில்
முரசு தொடர்ந்து முன்செல்லும்!

அனைவரையும் ஆரத்தழுவிக்கொண்டு,
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## அழைப்பு

உலகம் கெட்டது, உலகம் மாயமானது, என்று கூறுகின்றவர்களை நாம் காணுகின்றோம். ஆனால் அகிலத்தையும், அண்டசராசரங்களையும், மனுக்குலத்தையும் உருவாக்கிய இறைவன் தான் படைத்தவைகள் யாவும் நல்லது என்று கண்டார்.

தேவன் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. (ஆதி 1:31)

உலகத்தை ஆண்டு கொள்ளுகின்ற, சீர்ப்படுத்துகின்ற பொறுப்பை கடவுள் நமக்குத் தந்திருக்கின்றார். ஆனால் நாம் உலகத்தை அலங்கோலப்படுத்தி வைத்திருக்கின்றோம். இதனால் தான் உலகம் கெட்டதாகவும் மாயமானதாகவும் தெரிகிறது.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். (ஆதி 6:5,6)

மனஸ்தாபப்படுகின்ற கடவுள், பொல்லாத தன்மைகள் மாறவும், அக்கிரமமும் அநீதியும் அழிவுகளும் மாற்றுவிக்கப்படவும், நல்ல எண்ணங்களும் சிந்தனைகளும் தோற்றுவிக்கப்படவும், ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கின்றார். அழைப்பின் அவசியத்தை உணர்ந்து அலங்கோலமான அவனியில் அவலங்கள் நீங்க உழைப்போமாக.

சகோ. எஸ். யேசுநாதன், தளவாய்-செங்கலடி.



## ஸக்காத் நிறைவேற்றப்படாவிட்டால் மழை தடுக்கப்படும்!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஹதீஸை ஹஸரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

எந்த சமுதாயத்தினரில் விபச்சாரமும், மானக்கேடான செயல்களும் ஒளிவு மறைவின்றி பகிரங்கமாக நடைபெறுமோ, அப்பொழுது அவர்களுக் கிடையில் முன்னர் எப்பொழுதும் கேள்விப்படாத புதிய புதிய நோய்களும் வியாதிகளும் உற்பத்தியாகி விடும். மேலும் எந்த மக்கள் அளவையிலும் நிறுவையிலும் மோசடி செய்வார்களோ அவர்களின் மீது பஞ்சம், கஷ்ட ஜீவனம், இன்னும் அரசனின் கொடுமை இவையெல்லாம் சாட்டப்படும்.

இன்னும் எவர்கள் ஸக்காத் கொடுப்பதனைத் தடுத்துக் கொள்வார்களோ அவர்கள் மீது மழை தடுக்கப்பட்டுப் போகும். கால் நடைகள் மட்டும் இல்லையானால் ஒரு சொட்டு மழைகூடப் பெய்யாது. (ஏனெனில் கால்நடைகள் அல்லாஹ்வின் படைப்புக்களாகவும் எவ்வித குற்றமற்றதாகவும் இருப்பதால் அவைகளின் பொருட்டால் ஒரு சிறிது மழை பெய்யலாம்) இன்னும் எந்த ஜனங்கள் உடன்படிக்கைக்கு மாறு செய்வார்களோ அவர்கள் மீது மற்றைய கூட்டத்தினர் சாட்டப்படுவார்கள். அவர்கள் இவர்களுடைய சொத்து செல்வங்களைக் கொள்ளை அடிப்பார்கள். மேலும் எந்த மக்கள் அல்லாஹ்வின் சட்ட திட்டங்களுக்கு மாற்றாக சட்டங்களை பிறப்பிப்பார்களோ அவர்களுக்கிடையே யுத்தமும் போரும் மூண்டு வரும்.

(ஆதாரம்: தர்கீப்) எம்.என்.எம். அனஸ், அக்குறணை.

## கவிதைப் போட்டி இல.197



### பரிசுக்குரிய கவிதை

**எப்போது சமாதானம்?**

இரண்டைந்து மாதங்கள் கருவாக்கியதை
இரண்டொரு கணத்தில் பிணமாக்கி,
இரண்டு கரத்தில் சுமையாக்கி,
இரண்டினத்தாரும் புதைகுழி தேடினால்
எப்போது சமாதானம்?

எஸ். சிந்துஜா- வெள்ளவத்தை, கொழும்பு-6.

**நிவாரணம்?**

நம்பலாம்;
தாமதமாகாது...
விசாரணைக் கமிசன்
உருவாக!

எஸ். பிரபா-பதுளை.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**உறங்க(கு)இடம்.**

எலக்ஷன் ரூட் எடிபலயால்
எனைப்பிரிந்த தேவியே!
எட்டடி நிலத்திற்காக
ஏந்தி அலைகிறேன்!

ரி.வி. செல்வன்-இராகலை,
ஹல்கிரணோயா.

**எங்கே ஓடுவது?**

ஓடவிரட்டினார்கள்;
ஓடி வந்தோம் வன்னிக்கு!
பொல்லாத மலேரியா
போய்ப் போய் வருகிறது!
எங்கும் மருந்து இல்லையாம்!
இனி எங்கே கொண்டு ஓடுவது-
இடுகாட்டுக்கா? சுடுகாட்டுக்கா?

எம்.ஏ. பார்த்தசாரதி-மல்லாவி.

**தினசரி நிகழ்வு**

இடுகாடு இப்போது
நடு ரோட்டில்-
மலிந்துவிட்ட யுத்தத்தால்!
மடியுதுபார் மனிதமங்கே!!
கோரயுத்தம் மடியாதோ?!!

வடிவேல் சுரேஸ்கண்ணா-
மட்டக்களப்பு.

**தொங்கும் உயிர்**

தொடரும் இந்தப் போர்வெறியில்,
தொங்குகின்றதெமது உயிர்;
வாழ்விழந்து வருந்துமெம்மை,
வாழவைப்பார் யார்தானிங்கு..?

ஏ.எஸ். மரைக்கார்- மண்டலக்குடா,
கல்பிட்டி.

**எத்தனை நாளோ?**

யுத்த வெறி யீன்ற
செத்த உடல் சுமக்கும்
பித்துப் பிடித்த நிலை
எத்தனை நாளோ இன்னும்!

செல்வி சுவர்ணா விநாயகமூர்த்தி-
பரமநயினார் கோயிலடி, ஆரையம்பதி.

**இது ஒரு விளம்பரம்**

தற்காலிகக் கருத்தடைக்கு
தரமான வில்லையுண்டு;
நிரந்தர தீர்வுகாண-எங்கள்
'ஒப்பரேஷன்' உயர்ந்த முறை!


சதா கணபதி- அதிகாரவத்தை,
உடபுஸ்ஸல்லாவ.

**ச்சீ...!**

இது விரக்தியின் விளிம்பல்ல;
எம்
பொறுமையின் எல்லை;

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல.200



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 19.04.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.200
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

காதிலை பூ கந்தசாமியார் தந்த அகராதி அருமையாக இருந்தது. தீர்வுப் பொதி என்றால் 'கண்ணுக்கும் தெரியாத, கைக்கும் எட்டாத மாயவஸ்து' என்று அர்த்தம் சொன்னாரே! அபாரமய்யா!

ஏ.எம். ஜிப்ரி, கொழும்பு-11.

○✳■

'கனவு மெய்ப்பட வேண்டும்' இனிய விருந்து. நாயகி சுமதி இப்போதே எம்போன்றோரின் அன்புக்கு உரியவளாகிவிட்டாள். கனவு மெய்ப்பட காத்திருக்கிறோம்.

செ. விஜயகுமாரி, ஆ. சொரூபி
திருகோணமலை.

○✳■

கார்லோஸின் புகழை ஒரே தாண்டாகத் தாண்டிவிடுவார் போலிருக்கிறது பூலான்தேவி? பூலானின் மனதிலும் காதல் மலர்ந்துதான் இருக்கிறது. பாலை நிலத்திலும் பூக்கும் சக்தி காதலுக்கு மட்டும்தானோ?!

ஜே. முகம்மட், குருநாகல்.

○✳■

சுஜாதா சூப்பர் ஜொள்ளுடன் எழுதிய தொடராக்கும் காயத்ரி! சும்மா சொல்லக்கூடாது; வெய்யிலுக்கு ஏற்ற ஜில் ஜில்லேதான். காதிலை பூ கந்தசாமியாருக்கு ஒரு எச்சரிக்கை! இரகசிய பரிபாஷைகளை வெளியிட்டு எம் தகவல் தொடர்புகளுக்கு இடையூறு செய்துவிட்டார்.

ஆர். ராகவன், கொழும்பு-05.

○✳■

அன்பின், இனிய முரசே!

நீ சுமந்து வரும் கவிதைப்போட்டி, அரசியல் தொடர், ரசிகனின் 'இலக்கிய நயம்', பூலானின் தொடர் கதை, 'சினிவிசிட், சிறுகதை, இராமாயணத் தொடர் அனைத்தும் மிகவும் அருமை. உன்னை ஏந்தியவுடன் பூலானின் தொடர் கதையைத்தான் முதலில் பார்ப்பேன்.

வீரையா ஜெயந்தி, தலவாக்கல.

○✳■

இனிய முரசே!

நீ தரும் தொடர்கள் எதுவுமே சோடை போவதில்லை. காலத்திற்கு ஏற்றவாறு வாசகர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறாய். உன் ஒவ்வொரு கணிப்பும் உறுதி செய்யப்பட்டது போல் தோன்றுகிறது. 'முரசம்' தந்த 'தன்வினை தன்னை சுடும்' ஆசிரியர் மடல் அனைவருக்கும் ஒரு படிப்பினையாக அமைந்தது.

சுபாசினி கமலப்பா, மட்டக்களப்பு.



அன்புடையீர்,

நான் 'தினமுர'சின் நீண்டகால வாசகன்! சவூதியிலும் நம்மவர்கள் மத்தியிலும் அதன் மகிமையை நான் உங்களுக்கு எழுதித் தெரியவேண்டியதில்லை! இலங்கையிலிருந்து வரும் எம் நண்பர்களிடம் நாம் கேட்கும் முதல் கேள்வி 'தினமுரசு' கொண்டு வந்தீங்களா? என்பதுதான்!

அதிலும் முரசுவில் வரும் கவிதைப் போட்டி சூப்பர். அதுவும் கவிதைப் போட்டி. தர்ஷிக்கா கனகசிங்கத்தின் கவிதை சூப்பர். டபில்சூப்பர்.

ஏ.பிரகாஷ், சவுதிஅரேபியா.

○✳■

முரசில் வெளியாகும் சிறுகதைகள் யாவுமே முத்தானவை. சுஜாதாவின் காயத்ரி ஆரம்பமே அசத்தல்.

திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

○✳■

அன்பு முரசே!

நீ தாங்கி வரும் அற்புதனின் அரசியல் தொடர் மறைத்து வைகக்ப்பட்ட கசப்பான உண்மைகளை தெரியப்படுத்துகிறது. உனது வசீகரமான அரசியல் தொடரில் இந்தியப்படை திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகளை தக்க சமயத்தில் தவறாமல் தரவேண்டும்.

முரசின் நேர்த்தியான பணி மேலும் விரிவடைந்து சிறப்படைய என் தமிழ் இன்ப வாழ்த்துக்கள்.

அ.அச்சுதன், சேனையூர்-06, மூதூர்.

○✳■

### புள்ளடி போடவில்லை

முரசின் தேர்தல் கணிப்பு மட்டுமல்ல, தேர்தலுக்குப் பின் ஒலித்த 'எச்சரிக்கை மணி'யும் மிகவும் நன்று. தமிழ் பேசும் மக்களின் விரக்தியை தேர்தல் வாக்களிப்பும் உணர்த்தியுள்ளது. நானும், என் மனைவியும் வாக்களிக்கவே செல்லவில்லை. யார் மீது நம்பிக்கை வைப்பது? இப்படி நினைத்து புறக்கணித்தோர் பலர் இருக்கிறார்கள்?

எஸ். செந்தில்நாதன், கொழும்பு-07.

### நடுநிலை என்றால்.....

தமிழில் வெளிவரும் அரசியல் விமர்சனங்களில் இரண்டு போக்குகளை நாம் அவதானிக்க முடியும். அரசாங்கத்தை மனம்போன போக்கில் விமர்சித்து அதன் ஊடாக தம்மை நடுநிலையாக காட்டிக்கொள்ளும் போக்கு நீண்ட காலமாக இருக்கிறது. விடுதலைப் புலிகள் தரப்பிலான தவறுகளோ, பலம், பலவீனங்களோ அவர்கள் விமர்சனத்தில் இடம்பெறாது. இன்னொரு போக்கினர் புலிகளை கண்ணை மூடிக்கொண்டு விமர்சிப்பர். புலிகளின் தரப்பு நியாயங்களோ, பலமோ அவர்கள் பார்வைக்கு எட்டுவதில்லை. இவை நடுநிலையல்ல. நழுவல் போக்கேயாகும். இந்த இரு போக்குகளையும் தவிர்த்து சரியான திசையில் முரசின் விமர்சனங்கள் தொடரவேண்டும் என்பதே என் அவா. முரசால் முடியும்!

எம்.ஜே. எட்வோட், ஒன்ராறியோ- கனடா.

○✳■

கூட்டணியினர் 'பல்டி' அடிப்பதில் கைதேர்ந்தவர்கள் என்பது கடந்தகாலச் சரித்திரம். மீண்டும் ஒருமுறை அதனை நிரூபித்துள்ளனர். 'முரசு' கொடுத்த சூடு சரிதான்.

ஆர். தில்லைச் சந்திரன், மருதானை.

என் இனிய முரசே,

'ஏமாந்த புரத்திலிருந்து காதில பூ கலைக்கல்லூரியின்' மூலம் நீ சுமந்து வந்த அல்வா சூப்பர்! அண்ணன் கந்தசாமி, அவ்வப்போது தேவையானவர்களுக்கு அல்வா கொடுக்கின்றார். அண்ணன் தயாரிக்கும் தொப்பியை அளவானவர்கள் அணிந்து கொள்வார்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. வார்த்தைகளில் வர்ணஜாலங்காட்டும் அவருக்கு எனது பாராட்டுக்கள்.

அருமைத்துரை- பரமேஸ்வரன், நவிண்டில்.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* கோபால்- நாதன், பொத்துவில்-03.
* புனிதா வேலுப்பிள்ளை, கலவான.
* யோ. கிருஷ்ணமோகன், காரைதீவு-08.
* ஏ. முவாரக், சிராஜ்நகர்.
* ஜெ. இஸ்மாயில், கந்தப்பொல.
* என். நவரஞ்சன், மண்டூர்-01.
* ச. காங்கேயன், ஈச்சிலம்பற்று.
* கே.எஸ். வாணிமைந்தன், கொஸ்லாந்தை.
* எல். சபீனா சல்மா, அக்கரைப்பற்று-06.
* வே. சசிகலா, வெரல்லகம.
* வி.எம். லாபீர், படல்கும்புர.
* மா. ஜெயந்தி, அன்புவழிபுரம்.
* அமிர்டீன் கே. முகமட், திருகோணமலை.
* செல்வி கஸ்தூரி சின்னராஜா, கொட்டாஞ்சேனை.
* பாத்திமா ஜெஸ்லியா, மருதமுனை-03.
* குமணகுமார், பிரான்ஸ்.
* சு. சுந்தரமூர்த்தி, கல்முனை.
* எஸ். கலா, குவைத்.
* ஜி. ஸிந்துஜா, யாழ்ப்பாணம்.
* அருளானந்தம் பிரமிளா, திருமலை.
* சே.மு. முபைதீன் பதுறுநிஸா, புதிய காத்தான்குடி.
* வே. முத்துலிங்கம், ஸ்காப்ரோ-கனடா.
* றினோஸியா, வாரணை வீதி,திஹாரிய.
* ஏ. விஜயானந்த், களுவாஞ்சிக்குடி.
* ம. சூரியகுமார், ஜெர்மன்.
* இரா. குமரேசன், அவுஸ்திரேலியா.
* பி. சந்திரகுமார், ஏ. யோகராசா, சுவிற்ஸர்லாந்து.
* பே. கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06.


படிப்பகம்

www.padippakam.com

# புலிகளுடன் பேசுவதற்கான உடன்பாடு?

## வெளிநாட்டமைச்சர் கதிர் மறுப்பு!

"ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணிலுக்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்பாடு புலிகளுடன் பேசுவதற்காகச் செய்யப்பட்டதல்ல.

புலிகளுடனான பேச்சுக்கும், இந்த உடன்பாட்டுக்கும் இடையே ஒரு தொடர்பும் கிடையாது. சில பத்திரிகைகளில் தவறான செய்திகள் வெளியாகி இருந்தன.

அரசாங்கம் ஒரு தீர்வு யோசனையை முன்வைத்துள்ளது. அத் தீர்வு யோசனைக்கு எதிர்க்கட்சியின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவையாகும். அதனை முன்னிட்டே ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே ஒரு உடன்பாடு தோன்றியிருக்கிறது." இவ்வாறு வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த உடன்பாடு ஏற்பட்டதின் பின்னணியிலான சில முக்கிய விபரங்கள் வெளியாகியுள்ளன.

மேலும் விபரங்கள், தகவல்களைத் திரட்டிக்கொண்டு, வரும் வார முரசில் முழுமையான கண்ணோட்டம் வெளியாகும்.

# இராணுவத் தீர்வுக்கு பேச்சுவார்த்தை!

# அரசியல் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கை!

## அரசின் போக்கு குறித்து புலிகள் தெரிவிப்பு!

"சிறீலங்கா அரசு இராணுவத் தீர்விலேயே நாட்டம் காட்டுகிறது. இராணுவத் தீர்வுக்கு பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கை என்பதே அரசின் நிலைப்பாடாகும்." இவ்வாறு புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ளவரை பேச்சுக்களுக்கு ஏற்ற சூழ்நிலை இருக்கப்போவதில்லை, என்று பிரபாகரன் கூறியதையும் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை மீண்டும் நினைவூட்டி இருக்கிறது.

இராணுவ ஆதிக்கத்தின் கீழ் அரைகுறைத் தீர்வை தமிழ் மக்களிடம் திணிக்கவே அரசு விரும்புகிறது. அதனால்தான் இராணுவ முனைப்பில் ஆர்வம் காட்டுகிறது, என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்வதேச அரங்கில்

இதேவேளையில், சர்வதேச அரங்கில் இலங்கை அரசின் இராணுவத்தீர்வு முனைப்பை அம்பலப்படுத்தும் பிரசாரங்களில் ஈடுபடவே புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

இலங்கை அரசால் தற்போதைய குறைந்தபட்ச அரசியல் தீர்வு யோசனையைக் கூட திட்டமாக முன்வைக்க முடியவில்லை.

இந்நிலையில் தாம் எதிர்பார்க்கும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட தீர்வுக்கு அரசு எப்படி முன்வரமுடியும்? என்பதே புலிகளின் கேள்வியாகும்.

இந்நிலையில் "ஆளும் தரப்புக்கும், எதிர்க் கட்சிக்கும் இடையில் உடன்பாடு காணப் பட்டுவிட்டது. இனிமேல் பிரச்சனைக்குத் தீர்வுகாணப்பட்டுவிடும்" என்று அரசாங்கம் வெளியுலகில் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது.

### எத்தகைய தீர்வு?

எத்தகைய தீர்வுக்கு ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் இணக்கம் காணப்போகின்றன? தீர்வில் எப்படி ஒத்துழைக்கப் போகின்றன? என்று தெரியாத நிலையில் உடன்பாடு பற்றிச்செய்யப்படும் பிரசாரங்கள் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் மற்றொரு தலையிடியாக அமைந்துள்ளது.

தீர்வு யோசனைகள் தொடர்பான இழுத்தடிப்புக்களைப் பற்றிய பிரசாரத்திற்கு எதிர்க்கட்சியையும் இணைத்துக் கொண்டு அரசாங்கம் பதிலளிக்கக்கூடிய வாய்ப்பாகவே இது அமைந்துள்ளது.

அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியாக உள்ள அதன் 'இமேஜ்' மேலும் உயர்த்தவே இந்த உடன்பாடு உதவுகிறது. இராஜதந்திர ரீதியில் புலிகளின் பிரசாரத்தை அரசு எதிர்கொள்ளவும் அரசு தனது இராணுவ முனைப்பைத் தளர்த்தாமல் புலிகளை பேச்சுக்கு வரச் செய்ய சர்வதேச நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவும் இந்த உடன்பாடு பயன்படும் என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உண்மையில் எதிர்க்கட்சியைவிட அரசாங்கத்திற்கே இந்த உடன்பாடு மிகச் சாதகமானதாகும். அதனால்தான் அரச வெகுஜன தொடர்பு சாதனங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, புலிகளும் ஆளும் தரப்பு, எதிர்க்கட்சி உடன்பாடு பற்றி தமது கருத்தை பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஏனெனில் இந்த உடன்பாட்டின் பின்னணியில் பிரிட்டிஷ் பிரதியமைச்சர் இருக்கிறார். எதிர்வரும் மே 1ம் திகதி பிரிட்டனில் நடைபெறும் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியின் செல்வாக்கை உயர்த்த இதனை அவர் பயன்படுத்துகிறார். இல்லாவிட்டால் இந்த உடன்பாட்டின் பின்னணியில் அவர் இருந்த செய்தியை அவரே ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்.

### பிரிட்டிஷ் தேர்தல்

வெளிநாட்டு விவகாரங்களில் பிரிட்டிஷ் ஆளும் கட்சியின் திறமையை பிரிட்டன் வாக்காளர்களுக்குத் தெரிவிக்க இதனை ஒரு நல்ல சந்தர்ப்பமாக பாவித்துள்ளார் பிரிட்டிஷ் பிரதியமைச்சர்.

இவ்வாறான நேரத்தில் இதற்கு எதிராக புலிகள் கருத்துத் தெரிவித்தால் பிரிட்டனில் நெருக்கடி ஏற்படும். எதிர்வரும் பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் மீண்டும் கன்சர்வேட்டிவ் கட்சி வெல்லக்கூடிய சாத்தியம் இருக்கிறது. எனவே அக் கட்சியின் நலனுக்கு மாறாக புலிகள் செயற்பட்டால், பிரிட்டனில் தொடர்ந்து செயற்பட தடைகள் வரலாம். எனவேதான் புலிகள் மௌனமாக உள்ளனர். ஊகங்களை மறுக்கவும் இல்லை, ஏற்கவும் இல்லை.

"பிரிட்டனில் உள்ள புலிகள் இயக்கத்தினரை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பேச அழைத்தால்கூட புலிகள் மறுக்கமாட்டார்கள். ஆனால் அது இரகசியப் பேச்சாக இருக்காது," என்று புலிகளின் இலண்டன் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இரகசியமாகப் பேச பிரிட்டிஷ் பிரதியமைச்சரும் விரும்ப மாட்டார். ஏனெனில் பகிரங்கமாக பேசுவது மூலம்தான் தேர்தல் பிரசாரத்திற்கு சாதகம் இருக்கும். எனவே பிரிட்டிஷ் அமைச்சரின் முயற்சியில் மர்மங்களுக்கு இடமில்லை.

# "யாழில் 'றோ' உளவாளிகள்"

## புலிகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு!

புலிகள் இயக்க சர்வதேச பிரமுகரான லோரன்ஸ் திலகர் வன்னிக்கு வந்த செய்தியையும், திரும்பிச் சென்றதையும் முரசு வெளியிட்டமை தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து பல்வேறு ஊகங்களும், அவற்றின் அடிப்படையிலான செய்திகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. அச் செய்திகள் அப்பட்டமான கற்பனை என்று இந்திய வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் மறுத்துள்ளன.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான ஜெயின் கமிஷன் விசாரணையில் தமிழக முதல்வர் கருணாநிதி புலிகளுக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். புலிகளுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று நிரூபிப்பதில் கரிசனம் கொண்டுள்ளார்.

புலிகளுக்கு மருந்து அனுப்புவதற்காக தமிழ்நாடு சென்ற அவுஸ்திரேலிய தமிழ்ப் பெண்மணி உட்பட இலங்கைப் பிரமுகர்கள் பலரைக் கைது செய்ய உத்தரவிட்டதும் கலைஞர் கருணாநிதிதான்.

இந்நிலையில் அன்ரன் பாலசிங்கம் தமிழ் நாட்டுக்குச் சென்று சிகிச்சை பெற்றார் என்பது வேடிக்கையான செய்தியாக உள்ளது.

புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் தற்போது வன்னியிலேயே தங்கியுள்ளார்.

இதேவேளை, இந்திய 'றோ' உளவுப் பிரிவு தொடர்பாக சமீபத்திலும் புலிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

01.04.97 அன்று புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில், இந்திய றோ உளவு அமைப்பைச் சேர்ந்த இருவர் சமீபத்தில் யாழ் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சூரியநாராயணன், புதுடில்லி ஜவகர்லால் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.டி.முனி ஆகியோரையே புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சர்வதேச செய்தியாளர்கள் யாழ் செல்ல அனுமதிக்காத சந்திரிக்கா அரசு அவர்கள் இருவரையும் யாழ் செல்ல அனுமதித்தது: இரத்தினக் கம்பள வரவேற்பு கொடுத்தது. அவர்கள் இருவரும் இராணுவ உயரதிகாரிகளுடனும், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பேச்சு நடத்தியுள்ளனர், என்று புலிகள் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

# தமிழ் நாட்டில் இரு முகாம்கள்

## கலைஞரின் நிலைக்கு கண்டனம்!

தமிழ்நாட்டில் சென்னிமலையில் ஈழத் தமிழினப் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் பழ. நெடுமாறன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

"தமிழக அரசியலில் எதிர்காலத்தில் இரண்டு முகாம்கள் உருவாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான கட்சிகளின் முகாம் ஒன்றும், எதிரான கட்சிகளின் முகாம் ஒன்றும் எதிரும் புதிருமாக மோதவேண்டிய நிலை உருவாகும்!" என்று நெடுமாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அவர் தனது உரையில், "ஈழத் தமிழர்களுக்கு எங்கள் ஆதரவு உண்டு: ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கோ, அதனை முன்னின்று நடத்தும் விடுதலைப் புலிகளுக்கோ எங்கள் ஆதரவு இல்லை என்று கலைஞர் கூறுவது சரியல்ல. தமிழீழ மக்களையும், புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது," என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் உள்ள சென்னை அம்பேத்கார் அரச சட்டக்கல்லூரி மாணவர்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவாக உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். மறு மலர்ச்சி தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

**வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும்**
**முரசின் தித்திக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

# தாக்குதலில் பொதுமக்கள் காயம்!

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பல்கலைக் கழகத்துக்கும் தபால் கந்தோருக்கும் இடையில் படையினர் சென்று கொண்டிருந்த போது புலிகள் கைக்குண்டுகளை வீசினார்கள்.

கைக்குண்டு வீச்சால் படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. வீசப்பட்ட கைக்குண்டுகள் வெடித்ததில் பொது மக்கள் நான்குபேர் காயமடைந்தனர்.

ச.பிரியா (23) பல்கலைக்கழக 2ம் வருட வர்த்தக மாணவி, பெ.ஜெயராணி (24) 2ம் வருட வர்த்தக மாணவி, ந.புஸ்பராணி (25) திருநெல்வேலி, சி.ஈசன் (23) கொக்குவில், ஆகியோரே காயமடைந்தனர்.

# பேசாலையில் பதற்றம்!!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரம் தற்போது மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பி வருகிறது. பகல் வேளைகளில் அதிகமான மக்கள் நகரில் நடமாடித் திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

1990 ஆம் ஆண்டைப் போன்ற நிலை இங்கு ஏற்பட்டு வருகின்றது. புதிய புதிய வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

நகரில் ஏராளமான லொறிகள் காணப்படுகின்றன. உயிலங்குளம் பஸ்சேவை மூலமாக தினமும் ஏராளமான மக்கள் மன்னார் வருகின்றனர். இதனால் வியாபார நிலையங்களும் சுறுசுறுப்புடன் காணப்படுகின்றன.

இதேவேளை பேசாலை நகரம் பதற்ற நிலைக்குள்ளாகியுள்ளது. திடீர் திடீரென கடைகள் இழுத்து மூடப்படுகின்றன. நகரில் சன நடமாட்டம் குறைந்து காணப்படுகின்றது.

எந்த நேரமும் எதுவும் அசம்பாவிதங்கள் நடைபெறலாம் என எண்ணி மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். கடந்த 07.04.97 அன்றும் மக்கள் பீதியுடன் காணப்பட்டனர். கடைகள் யாவும் மூடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. மன்னார் நகருக்கு நேர்மாற்றமாகவே பேசாலை நிலைமை காணப்படுகிறது.

# மட்டக்களப்பில் புலிகளின் காவல்துறை

மட்டக்களப்பு-பதுளை வீதியில் செங்கலடிச் சந்தியிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள இலுப்படிச்சேனையிலேயே புலிகளின் கிழக்குமாகாண நடவடிக்கை இணைப்புக் காரியாலயம் இயங்கிவருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் புலிகள் அங்கே தமது பொலிஸ் பிரிவான காவல்துறை நிலையத்தையும் திறந்து கருமமாற்றி வருகின்றனர். முன்னர் மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலையில் இயங்கிய இக் காவல்துறை நிலையம் புலுக்குணாவ விஷேட அதிரடிப்படை முகாம் தாக்கப்பட்டதையடுத்து படையினர் காட்டுப் பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையினால் புலிகள் தமது காவல் துறை நிலையத்தை இலுப்படிச்சேனைக்கு மாற்றியுள்ளனர். இலுப்படிச்சேனையில் பால் சபை இருந்த கட்டிடத்திலேயே புலிகளின் காவல் துறை-பொலிஸ் நிலையம் இயங்கி வருகிறது.

பொதுமக்களிடமிருந்து நாளாந்தம் கிடைக்கும் கணிசமான முறைப்பாடுகளை புலிகள் விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒற்றைக்கண் சிவா பலி

புலிகள் இயக்கத்தின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர் ஒற்றைக்கண் சிவா. இவரை காத்தான் என்று அழைப்பார்கள்.

யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் ஒற்றைக்கண் சிவா நடமாடுவதாக படையினருக்குத் தகவல் கிடைத்தது. நீண்ட நாட்களாக படையினர் தேடுதலில் ஈடுபட்டு வந்தனர்.

இடுப்பில் நான்கு, ஐந்து கைக் குண்டுகளுடன்தான் சிவா நடமாடுவது வழக்கமாம். கடந்தவாரம் எதிர்பாராத விதமாக படையினரின் சுற்றி வளைப்பில் சிக்கிக் கொண்டார். படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒற்றைக்கண் சிவா பலியானார்.

ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு தற்கொலைசெய்துகொண்ட பாக்கியச் சந்திரன் ஒற்றைக்கண் சிவராசன் என்று அழைக்கப்பட்டமை தெரிந்ததே.

# அறுவடைக்கு படையினர் அனுமதி

## முஸ்லிம்கள் மீளக் குடியேறுவர்?

மன்னார் மாவட்டத்தில் புதிதாக இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் காணப்படும் நெல் வயல்களில் பெரும்போக அறுவடையை மேற்கொள்ள பாதுகாப்புப்படையினர் கடந்த வாரம் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து முருங்கன், உயிலங்குளம், இசை மாலைத்தாழ்வு பகுதிகளில் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம் மாதம் மழை பெய்யும் காலமாகையால் துரிதமாக அறுவடை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முறை இப்பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெற்செய்கை பண்ணப்பட்டிருந்தது. அநேகமான இடங்களில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, முசலி, நானாட்டான் பகுதி உ.அ.அ. பிரிவுகளில் ஏற்கனவே வாழ்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கு முன்னோடியாக முசலி பகுதியைச் சேர்ந்த இரு முஸ்லிம் அரச ஊழியர்கள் கடந்த 06.04.97 அன்று தமது பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அறிந்து திரும்பியுள்ளனர்.

# தபால் சேவை நிறுத்தம்

வன்னிக்கான தபால் சேவையை சிறீலங்கா அரசு நிறுத்தியுள்ளது. "வன்னி வாழ் மக்களை உலகத் தொடர்புகளில் இருந்து துண்டித்து தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

அரசின் மனிதநேயமற்ற போக்கால் வன்னியில் எழுந்துள்ள பயங்கரமான நிலை குறித்து உலகம் அறியமுடியாமல் உள்ளது." இவ்வாறு விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 27ம் திகதி முதல் தபால் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

# ஊரடங்கும்-மாடு களவும்

யாழ் குடாநாட்டில் ஊரடங்கு அமுலில் உள்ள இரவு நேரங்களில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை வலிகாமம் பகுதியில் ஊரடங்கு நேரத்தில் ஆடு, மாடுகள் திருடப்படுகின்றன. ஊரடங்கு நேரத்தில் மக்கள் வெளியே நடமாடுவதில்லை. அந்த நேரத்தில் திருடர்கள் தம் கைவரிசையைக் காண்பிக்கின்றனர்.

அவ்வாறு திருடப்படும் ஆடு, மாடுகள் மறுநாளே இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன. அராலிப் பகுதியில் எட்டுமாத கர்ப்பமான பசுமாடு ஒன்றை திருடிச் சென்று இறைச்சிக்காக வெட்டியுள்ளனர்.

# ஹெலி வாங்க புலிகள் திட்டம்

## கொழும்பு ஆங்கில ஏடு தகவல்

விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரன் விமானப்படை அணி ஒன்றை நிறுவியுள்ளார். மேற்கு நாடு ஒன்று புலிகளுக்கு ஹெலிகளை விற்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புச் செய்தியாளர் ரோஸ் டெனிஸ் 'சண்டே லீடர்' பத்திரிகையில் எழுதியுள்ள கண்ணோட்டம் ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

அரச படைகளை எதிர்த்துப் போராட தாக்குதல் ஹெலிகளைப் புலிகள் வாங்கலாம். 'பெல்' ரக ஹெலிகளை வாங்கப் பேச்சுக்கள் நடப்பதாகவும் தெரியவந்துள்ளது.

விமானப்படைக்கு ஆண்களையும், பெண்களையும் புலிகள் சேர்த்துள்ளனர். அவர்களுக்கு வன்னிக்காடுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இலங்கை விமானப்படையினரின் சீருடை போன்றதே அவர்களின் சீருடையும் ஆகும்.

தெரிவு செய்யப்பட்ட சிலர் மேற்கு நாடுகளில் பயிற்சி பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கை விமானப்படையிலும் பார்க்க நவீன விமானங்களை வாங்க புலிகள் கண் வைத்துள்ளனர் என நம்பப்படுகின்றது.

வானவெளியில் புலிகள் நடத்த எடுத்துள்ள முயற்சியைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறியுள்ளார்.

# புலிகளின் நிதி வசூல் பட்டியல் நீள்கிறது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நிருவகிக்கும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பிரமுகர்கள், அரச- தனியார் துறை உத்தியோகத்தர்கள், வெளிநாடு சென்று தொழில் புரியும் குடும்பங்கள் மற்றும் கொந்தராத்துக்காரர்கள் வர்த்தகர்கள் ஆகியோருக்குப் புலிகள் கடிதங்களை அனுப்பி வைத்து சந்திப்புக்களை நடத்தி நிதி வசூல் செய்வதைச் சமீப சில காலங்களாகத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அவரவர் வகிக்கும் நிலைமைகளைப் பொறுத்துப் புலிகள் வசூலிக்கும் நிதித் தொகை மாறுபடுவதாக விசாரணைக்குச் சென்று வந்தோர் தெரிவிக்கிறார்கள். ஆனால் வழக்கத்துக்கு மாறாக புலிகள் கேட்கும் நிதித் தொகை அதிகமாக இருப்பதாகவும் அதை எதுவித மறுதலிப்புமில்லாமல் குறித்த தவணையில் செலுத்திவிட வேண்டிய இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் அவர்கள் மேலும் புலம்புகிறார்கள்.

இது இவ்வாறிருக்க: படையினருடன் இணைந்து செயற்படும் சில இயக்கத்தவர்கள் தமது ஆதிக்கத்தின் கீழுள்ள பகுதி மக்களிடம் முடிந்தளவு இயன்றவற்றைக் "கறந்து" கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. "புலிகள் கேட்டால் மறுக்காமல் காலடிக்குச் சென்று கொடுக்கிறீர்கள். உங்களுடன் இருக்கும் எங்களுக்குத் தரத்தயக்கம் காட்டுகிறீர்கள்!" என்பது இவர்கள் ஞாபக மூட்டும் செய்தி.

கிழக்குமாகாணப் பயணிகளிடம் பாதுகாப்புத் தரப்பினர் தாராளத் தன்மையுடன் வசூலிக்கும் அன்பளிப்புப் பொருட்களையும் கொடுப்பனவுகளையும் பற்றி மக்கள் ஏற்கனவே சலிப்படைந்துள்ளது தெரிந்ததே.

# இரத்தம் வழங்க கோரிக்கை

வன்னிப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பி வந்த அநேகர் இரத்தச் சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு இரத்தம் தேவைப்படுவதாகவும், எனவே பொதுமக்கள் இயன்றளவு இரத்ததானம் செய்வதற்கு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து யாழ் செல்வோரைத் தங்கவைப்பதற்காக யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள 'சீநோர்' தொழிற்சாலைக் கட்டிடம் நிரந்தர அகதிமுகாமாக மாற்றப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக சீநோர் கட்டிடத்தின் கூரைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் மழை பெய்தபோது அங்கு தங்கியிருந்த அகதிகள் மழையில் நனைந்தனராம்.

# பாவிக்க முடியாத பீரங்கிக் குண்டுகள்

## 350 கோடி ரூபா நஷ்டம்!

இலங்கைக் கடற்படையின் பாவனைக்கென கடந்த ஜனவரி மாத மத்தியில் சீனாவிலிருந்து 700 தொன் எடையுள்ள பீரங்கிக் குண்டுகள் வந்து சேர்ந்தன.

கடந்த 3 மாதங்களாக குண்டுகளைக் கொண்ட பொதிகள் கொழும்புத் துறைமுகத்தை விட்டு நகர்த்தப்படாமலுள்ளன. தற்போது கடற்படைக்குச் சொந்தமான படகுகளிலுள்ள பீரங்கிகளில் இக்குண்டுகளைப் பயன்படுத்த முடியாத நிலையுள்ளதாகத் தெரியவருகிறது.

30 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தக் கூடியவை என்ற உத்தரவாதத்துடன் சீனா விடமிருந்து இவை கொள் முதல் செய்யப்பட்டன.

இக்குண்டுகள் பாவனைக்கு உதவாதவை என்பதனால் கடற்படைத் தளபதி அப்பொதிகளைப் பாரமெடுக்காமல் சீனாவுக்கே திருப்பி அனுப்பிவிடலாமென நினைத்தாராம்.

ஆனால் நட்பு நாடான சீனாவுடன் நெருக்கமாக உள்ள இராஜ தந்திர உறவுகள் பாதிக்கப்படக்கூடும் என்பதனாலும், இக் குண்டுகளைக் கொள்வனவு செய்வதற்கான கடன் பத்திரங்கள் யாவும் பூரணப் படுத்தப் பட்டுவிட்டமையினாலும்– ரூ350 கோடி வீண் விரயமாவதை அரசாங்கத்தால் தடுக்க முடியாமற் போய்விட்டது என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# மே மாதத்தில் குடிநீர் விநியோகம்

(கல்முனை நிருபர்)

சம்மாந்துறை மக்களின் துயர் துடைக்க 1993ல் ஆரம்பிக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத் திட்டம் 1997மே மாதமளவில் நீர் வழங்கும் வேலைகளை ஆரம்பிக்கும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், சம்மாந்துறை கரைவட்டக்கல் சந்தியில் நிருமாணிக்கப்பட்டுள்ள சுமார் (80,000) எண்பதினாயிரம் கலன் நீரைச் சேமிக்கக் கூடிய 450 கியூபிக் மீட்டர் கொண்ட தாங்கிக்கு நீரைவழங்கும் சுத்திகரிப்பு சாதனத்துக்கான வேலைகள் இன்னும் முடிவுற வில்லை என்றும், தற்பொழுது முடிவுற்று இருக்கும் கல்முனையிலுள்ள சாதனம் மூலம் சம்மாந்துறைக்கு உடனடியாக நீரை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் கூறினார்.

கல்முனை நீதிமன்றம் அருகே, இலங்கையில் உள்ள மிகப் பெரிய நீர்த்தாங்கிகளில் ஒன்றாக- அமையும் கல்முனை நகரத்துக்கு நீர் வழங்குந் தாங்கி 105 அடி உயரத்தில், 60 அடி விட்டத்தில் நிறுவப்படுகின்றது என்றும், அதில் 260,000 இலட்சம் கலன் நீரை சேமித்து வைக்கலாம் என்றும் அது 1150 கியூபிக் மீட்டர் கனவளவு கொண்டது என்றுங் குறிப்பிட்டார்.

2.4 பில்லியன் ரூபா செலவில் நிருமாணிக்கப்படும் கல்முனை குழாய் நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் நிலத்துக்கடியில் குழாய் பதிக்கும் வேலைகள் முடிவுறுந் தறுவாயில் உள்ளன. கல்முனைத் தாங்கியில் இருந்தவாறே அருகிலிருக்கும் நற்பிட்டி முனைக் கிராமத்துக்கு நீர் வழங்குவதற்காக 450 கியூபிக் மீட்டர் கொண்ட சுமார் 80,000 கலன் நீரைச் சேமிக்கக் கூடிய தாங்கி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது, காரைதீவு போன்ற கிராமங்களுக்கும் நீர்வழங்குந் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது எனவுங் குறிப்பிட்ட அவர், கல்முனைத் திட்டத்தை "குமுதி எஞ்ஜீனியரிங் கொம்பனி" யும், சம்மாந்துறைத் திட்டத்தை "வன்னியராச்சி கொம்பனி"யும் பொறுப்பேற்று செய்து கொண்டிருக்கின்றன எனவுந் தெரிவித்தார்.

# 'ரெலிகொம்' நிலையத்தின் மழுப்பல்!

## கிழக்கில் சீர்கெட்டுள்ள சேவை!

(ஏறாவூர் நிருபர்)

'முரசி'ல் வெளியான கிழக்கில் தொ(ல்)லைத் தொடர்பு" என்ற தலைப்பில் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உண்மையை வெளிப்படுத்திய செய்திக்கு மறுப்புத் தெரிவித்து மழுப்பலான பதிலொன்றைத் தந்திருந்தார் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தின் மாவட்டப் பரிசோதகர்.

'கிழக்கு மாகாண மக்கள் தொலைத் தொடர்புச் சேவையைப் பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகளையும், சீர்கேடுகளையும் யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. அது இரகசியமுமில்லை.

கடந்த மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தினர் 200 தொலைபேசி இணைப்புக்களை வழங்கியிருப்பதாகவும் மக்கள் சேவையின் மகிமையை உணர்ந்து எதுவிதமான மேலதிக நேரப்படி கூடப் பெறாமல் கடமையாற்றுவதாகக் கூறும் அவர்; மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது எங்ஙனம் பொருந்தும்?

சுமார் ஒரு இலட்சம் பேருக்கு மேற்பட்டோரைக் கொண்டுள்ள ஏறாவூர் நகர், செங்கலடி நகர மக்களுக்கு இதுவரை ஒரு பொதுத் தொலைபேசிப் பெட்டிகூட பொருத்தப்படவில்லை. இதேபோல 75 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதி நகர மக்களுக்கும் இதுவரையில் ஒரு பொதுத் தொலைபேசிப் பெட்டிகூட வைக்கவில்லை.

ஓட்டமாவடியில் பொதுத் தொலைபேசிப் பெட்டி அமைப்பதற்கு ஏற்பாடாகியிருந்த வேளையில் 1995 ஆம் ஆண்டு ஏதோ காரணங்களைக் காட்டி அங்கு இணைப்பு வழங்கப்படாத நிலையிலிருந்த தொலைபேசிப் பெட்டியை அப்புறப்படுத்தி விட்டார்கள்.

ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள 07 ஆம் இலக்கத் தொலைபேசித் தொடரிலிருந்து வெளியிடங்களுக்கோ அல்லது வெளியிடங்களிலிருந்து அப்பகுதிகளுக்கோ தொடர்பு கொள்ள முடியாத நிலை இருந்து வருகின்றது. "ரெலிகொம்" நிலையத்தில் பதிவு செய்து அங்கிருந்தே தொடர்புகளைப் பெற வேண்டியுள்ளது.

50 வருடங்களுக்கும் மேலாக ஏறாவூரில் இயங்கி வரும் புகையிரத நிலையத்திற்குத் தொலைபேசி இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், பிரதி அமைச்சரிடமும் பலமுறை எடுத்துக்கூறியும் பலனேதும் இல்லை. அந்நிலையத்தில் ஏற்கனவே (10 வருடங்களுக்கு முன்னர்) வழங்கப்பட்டிருந்த தொலைபேசியைப் பொருத்தக்கூடக் கடந்த 06 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மட்டக்களப்பு-ஏறாவூரில் அமைந்துள்ள உப தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் ஒரு பழைய பற்றரியே பாவினையில் உள்ளது. அதை மின்சாரமில்லாத வேளையில் ஆகக்கூடியது 24 மணித்தியாலங்களுக்கே பாவிக்க முடியும்.

மின்சாரத் தடையேற்படும் வேளையில் ஏறாவூரிலிருந்து வெளியிடங்களுக்குத் தொலைபேசி இணைப்பைப் பெறமுடியாதுள்ளது. இதேவேளை ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் பல வருடங்களாகத் தொலைபேசிக்கு விண்ணப்பித்த நூற்றுக் கணக்கானோர் ஏமாந்து போய்க் காத்துக் கிடக்கின்றார்கள்.

தொலைபேசிச் சீர்கேடுகளுக்கும், தமக்கும் சம்பந்தமில்லை என்று தட்டிக்கழிப்பது பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு எவ்விதம் பொருந்தும்? இவர்கள் திருந்தாவிட்டால் பரவாயில்லை. தொலைபேசிச் சீர்கேடுகளையாவது திருத்திக்கொள்ளட்டும்.

# "அதிகாரி பலி"

யாழ்ப்பாணத்தில் வடமராட்சியில் உள்ள அல்வாயில் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் தம்மால் சுட்டுக் கொல்லப் பட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

21.03.97 அன்று இச் சம்பவம் நடைபெற்றது என்றும், பலியானவரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடமராட்சியில் 28 வயதான வல்லிபுரம் மனோரவி (பொலிகண்டி), 18 வயதான அந்தோனிப்பிள்ளை ரவிதரன் (கொத்தாவத்தை) ஆகியோர் காணாமல் போயுள்ளனர். சீருடை தரித்தோரால் அவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த இருவரையும் தாம் கைது செய்யவில்லை என்று இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

# தப்புத் தாளங்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் அறிவிப்பாளர்கள் பற்றாக்குறை ஏற்படும் போது பகுதிநேர அறிவிப்பாளர்கள் வருடாவருடம் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு.

சென்ற 1996ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் பகுதிநேர அறிவிப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு குரல் தேர்வும் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்து குரல்தேர்வுக்கும் தோற்றினர்.

இந்த விண்ணப்பதாரிகளில் 50 ற்கும் குறைவான கலைஞர்கள் மட்டுமே பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டனர். இதில் திறமையுள்ள கலைஞர்கள் பலரும் தெரிவுக்குள் அகப்படாது போனமை வேறாக ஆராயப்பட வேண்டியவிடயமாகும். ஆயினும் இறுதித் தேர்வின் போது தெரிவு செய்யப்படும் கலைஞர்களுக்கு கல்வித்தராதரத்தின் அடிப்படையிலேயே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இருந்தும் குறிப்பிடத்தக்க ஒரு கலைஞர் இந்த விதிகள் எதற்கும் கட்டுப்படாது பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வகுப்புக்களிலும் பங்குபற்றி வருகின்றார்.

கல்வித் தகுதி வலுவானதாக இல்லாதபோதும் ஒரு பிரபல பெண் அறிவிப்பாளர் ஒருவரின் மகன் என்பதால் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதைவிட அவர் இலங்கை வானொலிக்கு போட்டியாக எழுந்த தனியார் வானொலி நிலையத்திலும் சக்கைபோடு போட்ட ஒரு அறிவிப்பாளர்.

எனவே, திறமை, தராதரம் இருந்தும் வாய்ப்புக்களை இழந்தவர்களின் சார்பில் இந்த விடயத்தை சம்பந்தப்பட்டவர்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். உரிய நிவாரணம் கிடைக்குமா?

பட்டினத்தடிகள்.

# போதிய நிதி ஒதுக்கீடு தேவை

## ஆயுர்வேத வைத்தியர்கள் கோரிக்கை!

(திருமலை நிருபர்)

"வடக்கு- கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியத்துறை தனி அலகாக்கப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். அத்துறைக்கான நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்.

அத்துறை சார்ந்த தேவைகளுக்கான வாகனங்கள் வழங்கப்படல் வேண்டும்." ஆகிய கோரிக்கைகள் ஆயுர்வேத வைத்திய பாதுகாப்புச் சபையால் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பு சுதேச வைத்திய அமைச்சு, வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலர், சுகாதார அமைச்சின் செயலர், சுதேச மாகாண வைத்தியப் பணிப்பாளர், கொழும்பு ஆயுர்வேதச் சபை ஆணையாளர் ஆகியோருக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் ஆயுர்வேத வைத்தியத்துறை நன்கு பரிபாலிக்கப்படுகின்ற வேளையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கொந்தராத்து அடிப்படையிலான இரண்டு ஊழியர்களுடன் மாகாண அமைச்சின் ஒரு மூலையில் போதிய நிதி வசதியோ வாகன வசதிகளோ இன்றி இயங்கி வருவதால் ஆயுர் வேதத் துறையின் வளர்ச்சி முடக்கப்படுவதோடு, அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்க முடியாமலும் போகின்றது என்றும் இக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆளுநர் இவ் விடயத்தில் நல்ல முடிவை எடுப்பார் எனத் தாம் எதிர்பார்ப்பதாக ஆயுர் வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் டாக்டர் இ. தர்மராஜா முரசிடம் தெரிவித்தார்.

# அதிகாரிகள் இழுபறி

(காரைதீவு நிருபர்)

ஜீ.ஏ.இட்ட கட்டளையை ஏ.ஜீ.ஏ. நிறைவேற்றத் தவறிய சம்பவம் கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை(தமிழ்) பிரதேச செயலகத்தில் பணியாற்றும் கிராம அலுவலர்களுக்கான (ஜி.எஸ்) மாதாந்த சம்பளங்களை அந்த அலுவலகத்திலே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஏ.ஐ.விக்கிரம கல்முனை பிரதேச செயலாளருக்கு கட்டளை இட்டிருந்தார்.

கட்டளையிட்டு 3 மாதங்களாகியும் இன்னும் வேறொரு அலுவலகத்திலே மேற்படி சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

"ஐயர் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத நிலை" இங்கு காணப்படுவதாக கிராம அலுவலர்கள் குறைகூறுகின்றனர்.

இது தொடர்பாக கிராம நிலதாரிகள் சங்கமொன்று மீண்டுமொருதடவை அரச அதிபரைச் சந்திக்கவுள்ளது. அதுவும் பலனளியாவிடில் சாத்வீக போராட்டத்தை நடாத்தவிருப்பதாக "தினமுரசிடம்" அவர்கள் தெரிவித்தனர்.


**SPOKEN ENGLISH**

BY PON. SAKTHIVEL
DIP.IN.ENGLISH (LOND)

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச நவீன உளவியல் ரீதியில் கற்றுத் தரப்படும். 12 நூல்களுடன் கூடிய பாடத் திட்டம்.

ஆரம்பம்: 4.5.97 - 27.7.97
நேரம்: மாலை 3.00 - 5.00

SPOKEN ENGLISH
77/20, JAMPATTAH LANE,
COLOMBO - 13. T.P. 345367

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

**SPOKEN ENGLISH**
தபால் மூலம் கல்வி

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.



கலை அலங்கார வகுப்புகள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்: 28-04-97
FASNAZ BEAUTY SALON
142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457

**மனோதத்துவ வைத்தியம்**
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

ஏப்ரல் 18 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST.. Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383. 436390, கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும். மே 3, 4, 5, 6 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

**UNION**
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

எமது வாடிக்கையாளர்களுக்கும், வாசகர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Blue Star
Cleaners & Tailors
253-E, Galle Road,
Wellawatta Complex,
Colombo-06.

Sun Cleaners
106, Sri Siddhartha Road,
Kirulapone,
Colombo-05.

Star Cleaners
27-B, Highlevel Road,
Kirulapone,
Colombo-05.

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030

**பழுதுபார்த்தல்**
T.V, VIDEO DECK, RADIO
போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் வெளி நாட்டில் பயிற்சி பெற்றவர்களினால் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.
LIBRA ELECTRONICS
5, DEVOS AVENUE,
BAMBALAPITIYA.
TELE PHONE: 585126

மட்டு நகரில்
MYOWN
விண்ணப்ப முடிவுத் திகதி 20-04-97
COMPUTER SYSTEMS (PVT) LTD. இன்
**1000 புலமைப்பரிசில் திட்டம்**

10 வது கிளையை மட்டுநகரில் ஆரம்பிப்பதை முன்னிட்டு DIPLOMA IN COMPUTER SYSTEMS ENGINEERING (SOFTWARE) எனும் ஒரு வருட பாடநெறியை விசேட சலுகையுடன் பயில்வதற்கான அரிய சந்தர்ப்பத்தை மட்டுநகர் மாணவர்களுக்கு மையோன் கொம்பியூட்டர் சிஸ்டம்ஸ் தனது 1000 புலமைப்பரிசில் திட்டம் மூலம் வழிசெய்கிறது.

இதற்கென விண்ணப்ப முடிவுத்திகதி பலரது வேண்டுகோளுக்கென மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களையும் மேலதிக விபரங்களையும் 16/3/97 வீரகேசரி வார இதழிலோ அல்லது முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட தபால் உறைகளை எமது காரியாலயங்களுக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது காரியாலங்களுக்கு நேரடியாகச் சென்றோ பெற்றுக் கொள்ளலாம்.

தலைமைக் காரியாலயம்
THE DIRECTOR
1000 SCHOLARSHIP PROGRAMME,
MYOWN COMPUTER SYSTEMS (PVT) LTD,
500, GALLE ROAD, COLOMBO-06.
T.P. 580347

மட்டு நகர் கிளை
MYOWN COMPUTER SYSTEMS (PVT) LTD,
4, LOYDS AVENUE, BATTICALOA.
(SUBARAJ THEATRE அருகில்)
MYOWN GROUP



படிப்பகம்

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# தொடர் அணிமீது கடற்புலிப் பாய்ச்சல்!

— நாரதர் —

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில்- 19.09.94 அன்று 'சாகரவர்த்தனா' யுத்தக் கப்பல் கடற்கரும்புலிகளால் தாக்கப்பட்டது.

தாக்கியது புலிகளாக இருக்காது என்று சொன்னது பொதுஜன முன்னணி. அதனால் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்துக்கு முதல்நாளும் (08.10.94) மற்றொரு கடற்படைக் கப்பலை வெற்றிலைக் கேணியில் கடற்புலிகள் தாக்கினார்கள். எனினும் அக் கப்பல் பலத்த சேதமில்லாமல் தப்பித்தது.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் காலத்திலும் கடலில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு கடற்புலிகள் திட்டமிட்டனர்.

தேர்தல் வாக்களிப்பு தினத்தை ஒட்டியதாகவே தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே கடற்புலிகளின் தளம் உஷாராகிவிட்டது.

கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றிய ராடர் கருவிகள் மூலமாக கடற்படைப் பட்குகளின் நடமாட்டம் இருக்கிறதா என்று கண்காணிக்கத் தொடங்கி விட்டனர்.

வவுணதீவு முகாம், சீனக்குடா விமானத் தளம் ஆகியவை தாக்கப்பட்டதால், அடுத்து கடற்தாக்குதலும் மேற்கொள்ளப்படலாம் என்று ஊகித்து கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் சுருக்கப் பட்டன.

அதனால் கடற்புலிகள் திட்டமிட்டபடி மினித் தேர்தலுக்கு முன்னர் தாக்குதலை நடத்த முடியவில்லை.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, அம் முடிவுகள் புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் கசப்பாகவே அமைந்தன.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்ட அபிப்பிராயத்தில் பின்வருமாறு கூறியது: "சிங்கள மக்கள் தமக்குத் தாமே புதைகுழி தோண்டியிருக்கின்றனர்!"

தனது கசப்பை தனது பாணியில் தெரியப்படுத்த விரும்பினார் பிரபாகரன்.

தேர்தல் வெற்றிச் செய்தியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொதுஜன முன்னணிக்கும், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் தனது வழக்கமான பாணியில் பரிசு தரவிரும்பினார் பிரபாகரன்.

அச் சமயத்தில்தான் எம்.ஐ.24 ஹெலி கடலில் விழுந்து காணாமல் போன செய்தி வெளியானது.

அச் செய்தி புலிகளைப் பொறுத்தவரை, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அமைந்துவிட்டது.

முல்லைக்கடற் பகுதியிலேயே ஹெலி விழுந்தமையால், கடற்படையினர் எப்படியும் தேடுதல் நடத்த வருவார்கள். அதுதான் தாக்குதல் மேற்கொள்ளச் சரியான சந்தர்ப்பம் என்று திட்டம் தயாரானது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு தான் வழங்க இருந்த பரிசை கடற்தாக்குதல் மூலமாக வழங்க முடிவு செய்தார் பிரபாகரன்.

மினித் தேர்தல் கால தாக்குதலுக்கு தயாரான கடற்புலிகளின் அணிகளும், கடற் கரும்புலிகளும் மீண்டும் காத்திருக்க ஆரம்பித்தன.

ஆனாலும் எம்.ஐ.24. ஹெலியை விமானங்கள்தான் தேடின. கடற்படையினர் உடனடியாகத் தேடுதலில் ஈடுபடவில்லை.

பொறுக்கமாட்டாமல், புலிகளே தமது வானொலியில் "எம்.ஐ.24 ஹெலி முல்லைக் கடலில்தான் விழுந்தது. அதனை மீனவர்கள் கண்டுள்ளனர்" என்ற செய்தியை ஒலிபரப்பினார்கள்.

செய்தியைக் கேட்டாவது கடற்படையினர் தேட வரமாட்டார்களா? என்ற எதிர்பார்ப்புத்தான் அது.

மீண்டும் இன்னொரு செய்தி புலிகளின் குரலில் ஒலிபரப்பப்பட்டது. "எம்.ஐ.24 முல்லைக் கடலில் விழுந்திருக்கிறது. கடற்புலிகளுக்குப் பயந்து கடற்படைப் படகுகள் தேடுதல் நடத்தவில்லை!" என்றது 'புலிகளின் குரல்' வானொலி.

புலிகளின் குரல் வானொலி இப்படிச் செய்திகளைச் சொல்லிக் கொண்டிருக்க, கடற்புலிகளின் தளத்தில் தாக்குதல் படகுகள் தயாராகக் காத்திருந்தன.

கடற்புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்தே கடற்படையினரும் தேடுதலுக்கு வருவார்கள். அதுவும் முல்லைக் கடற்பகுதியில் தேடுதல் நடத்த வேண்டி இருப்பதால் சமருக்குத் தயார் நிலையில்தான் கடற்படையினர் வருவர் என்று எதிர்பார்த்து, அதற்கேற்பவே கடற் தாக்குதல் முன்பைவிட விரிவாக்கப்பட்டது.

கடற்புலிகள் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. கடற்புலிகள் எதிர்பார்த்தது போலவே தொடர் அணியாகச் செல்லத் திட்டமிட்டனர் கடற்படையினர்.

பாரிய யுத்தக் கப்பல், பாரிய பீரங்கிப் படகுகள், அதிவேக டோராத் தாக்குதல் படகுகள் ஒன்று சேர்ந்து செல்வதையே தொடர் அணி என்று அழைப்பர். 'கொன்வே' என்று ஆங்கிலத்தில் கூறப்படும்.

வடபகுதிக்கு ஆயுதங்களையும், படைவீரர்களையும் கொண்டுசெல்லும்போது தொடர் அணியாகச் செல்வதே கடற்படையினரின் வழக்கமாகும்.

மார்ச் 19ம் திகதி எம்.ஐ.ஹெலி காணாமல் போனது. மார்ச் 22ம் திகதி காலித் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட 'பராக்கிரமபாகு' யுத்தக் கப்பல் திருமலை துறைமுகம் சென்றது. அங்கிருந்து ஜகத்தா, ரணவீர என்னும் இரண்டு பீரங்கிப் படகுகளும், இஸ்ரேலிய தயாரிப்பான நான்கு அதிவேக டோரா தாக்குதல் படகுகளும் பராக்கிரமபாகு கப்பலுடன் சேர்ந்து தொடர் அணியாகப் புறப்பட்டன.

பராக்கிரமபாகு கப்பலும், இரண்டு பீரங்கிக் கப்பல்களும் தொடர் அணியின் மத்தியில் செல்ல, டோராப் படகுகள் அவற்றைச் சூழ, பாதுகாப்பு வியூகம் அமைத்துச் சென்றன. மாலை ஆறுமணியளவில் புறப்பட்ட இந்தத் தொடர் அணி நிதானமாகச் சென்று முல்லைக் கடற்பகுதியை நள்ளிரவுக்கு பின்னர் 1.30 மணியளவில் சமீபித்தன.

கடற்புலிகளின் தளத்தில் இருந்த ராடர்கள் மூலமாக, தொடர் அணி நகர்ந்து வருவதை கடற்புலிகள் அவதானித்தனர்.

உடனடியாக கடற்புலிகளின் அணிகள் புறப்பட்டன.

இரண்டு குழுவாகப் பிரிந்து இருமுனைகளில் நின்று தாக்குவதுதான் திட்டம். ஒரு குழுவில் ஐந்து படகுகள் இருந்தன. மொத்தம் பத்துப் படகுகள்.

இவைதவிர இரண்டு கடற்கரும்புலிப் படகுகள். இரு முனைத்தாக்குதலில் கடற்புலிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்க, கடற்கரும்புலிப் படகுகள் ஊடறுத்துச் சென்று பாரிய கப்பலுடன் மோதுவதுதான் திட்டம்.

பராக்கிரமபாகு கப்பலை கடற்கரும்புலிகள் நெருங்கவிடாமல் டோராப்படகுகள் குறுக்கே நின்று தாக்கும். அந்த டோராப் படகுகளை சண்டைக்கிழுத்து கவனத்தை திருப்பும் வேலை கடற்புலிகளுக்கு. டோராப் படகுகள் கடற்புலிகளுடன் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது கிடைக்கும் அவகாசத்தில் கடற் கரும்புலிப் படகுகள் ஊடறுத்துப் பாய வேண்டும். அப்படிப் பாய்ந்தால்தான் கப்பலில் மோதலாம்.



கப்பலில் இருந்தும், பீரங்கிப் படகுகள் இரண்டில் இருந்தும் தாக்குவார்கள். பராக்கிரமபாகு கப்பலில் வலிமையான துப்பாக்கிகள் இருக்கின்றன. ரணவீர, ஜகத்தா ஆகிய பீரங்கிப் படகுகள் குண்டுகளைப் பொழியும். அவற்றில் இருந்து தப்பி கடற்கரும்புலிகளின் படகுகள் பாய்ந்து செல்வது கடினம்.

ஆனால், கடற்புலிகள் தமது பலத்திற்கு ஏற்ற சில உத்திகளை கடினமாகப் பயின்று உள்ளனர்.

துப்பாக்கிச் சூடுகளில் இருந்து படகைத் தப்பவைக்கும் விதமாக படகை நெளிவு சுழிவாக வளைத்தும், வெட்டியும், வட்டமாகச் சுழன்றடித்தும் ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள்.

கடற்சண்டையொன்றில் அந்தத் திறமையை நேரில் கண்ட கடற்படைவீரர் ஒருவரே கடற்புலிகளின் படகு செலுத்தும் வித்தை பற்றி ஆச்சரியம் தெரிவித்திருந்தார்.

தரையில் யானை துரத்தும்போது நேராக ஓடாமல் வளைந்து வளைந்து ஓடவேண்டும். அதுபோல யானைப் பலமான கடற்படைப் பீரங்கிப் படகுகளின் குண்டுகளில் இருந்து தப்ப கடற்புலிகள் தமது படகுகளை வளைத்தும் நெளித்தும் ஓட்டிச் செல்கிறார்கள்.

அதனால் குண்டுகள் இலக்குத் தவறும்.

அந்தத் திறமையை நம்பித்தான் தொடர் அணியாக கடற்படை வியூகத்தை உடைத்து பராக்கிரமபாகு கப்பலை மோதலாம் என்று கரும்புலிப் படகுகள் துணிந்து இறங்கின.

கடற்புலிகளின் படகுகள் புறப்பட்டு வருவதை கடற்படைக் கப்பலில் ராடர் துல்லியமாகக் காட்டிக் கொடுத்தது.

கடற்படையினரும் சமருக்குத் தயாராகினர். கடற்படைத் தளங்களுக்கும் தகவல் அனுப்பினர்.

23.03.97 ஞாயிறு அதிகாலை 1.30 மணியளவில் கடற்சமர் ஆரம்பித்தது.

கடற்படையினரிடம், பூநகரி முகாம் தாக்குதலில் கைப்பற்றிய 'வோட்டர் ஜெட்' படகும் கடற்புலிகளின் தரப்பில் காணப்பட்டது. மிக வேகமாக கடலில் ஊடறுத்துச் செல்லக்கூடிய படகு அது.

கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே சமர் நடந்து கொண்டிருக்க, கடற் கரும்புலிப் படகு ஒன்று பராக்கிரமபாகு கப்பலை நோக்கிப் பாய்ந்து சென்றது.

பராக்கிரமபாகு கப்பலில் இருந்து 37.எம்.எம். துப்பாக்கி மூலமும், 14.5 எம்.எம். துப்பாக்கி மூலமும் தம்மை நோக்கிவரும் கடற்கரும்புலிப் படகைத்தாக்கினார்கள்.

சூடுபடாதவாறு வளைந்து வளைந்து பாய்ந்து வந்த கரும்புலிப் படகு கப்பலை சமீபிக்க, சிலமீட்டர் தூரமே இருக்கும்போது வெடித்துச் சிதறியது. எப்படியோ படகில் சூடுபட்டுவிட்டது. வெடி மருந்து நிரப்பிய படகுகளில் சூடுபட்டால் கதை முடிந்துவிடும். வெடிமருந்து நிரப்பாத படகுகள் என்றால் சேதத்துடன் தப்பிவிட வாய்ப்பு உண்டு.

அதே நேரம் ஒரு டோராப் படகு முன்னோக்கி நகர்ந்து சுட்டுக்கொண்டிருக்க, வேறு ஒரு முனையில் இருந்து முன்னோக்கி நகர்ந்த கரும்புலிப் படகும் எதிர்பாராத விதமாக தாக்குண்டு வெடித்துச் சிதறியது.

கடற்புலிகளின் படகில் இருந்து, பராக்கிரமபாகு கப்பலில் இருந்து சுட்டுக்கொண்டிருந்த வீரருக்கு குறிவைத்தனர். அந்த இருள் விலகாத நேரத்திலும் குறிபிசகாமல் கடற்படை வீரரை பலியாக்கியது. அந்தக் கடற்படை வீரர்தான் கரும்புலிப் படகைச் சுட்டு வெடிக்கச் செய்தவர். திறமையானவர். அவர் இல்லாவிட்டால் கரும்புலிப் படகு பராக்கிரமபாகு கப்பலுடன் மோதியிருக்கும்.

கரும்புலிப் படகுகள் வெடித்துச் சிதறியதாலும், பருத்தித்துறையில் இருந்து மேலும் டோராப் படகுகள் கடற்படையினரின் உதவிக்கு விரைந்ததாலும் கடற் புலிகள் சண்டையை நிறுத்திவிட்டுத் திரும்பினர்.

உதவிக்கு வந்த இரண்டு டோராக்களுடன் சேர்ந்து மொத்தம் ஆறு டோராக்களுடன் தொடர் அணி இப்போது செல்லத் தொடங்கியது.

நேரம் அதிகாலை 3.30 மணி.

கடலின் மடியில் மீண்டும் கடற்புலிகளின் படகுகள் சீறிவந்து கொண்டிருந்தன.

கடற்படை தொடர் அணியினரும் தாக்கத் தொடங்க மீண்டும் கடற்சமர் மூண்டது.

கடற்புலிகளின் தாக்குதலால் இம்முறை 'டொரா' ஒன்று செயலிழந்தது. சண்டையிட்டபடியே நடுக்கடல் நோக்கிச் சென்றனர் கடற் படையினர். நடுக்கடலில் நின்று மோதுவது ஆபத்து. விமானப் படையினர் வந்தால் கடற்புலிகளின் படகுகள் தப்புவது சிரமம்.

அதனால் கடற்புலிகள் திரும்பிச் சென்றனர்.

ஒரு கடற் சண்டை என்றவகையில் கடற்படையினருக்கு வெற்றிதான். ஆனால் கடற்படையினரின் தொடர் அணியை மறித்து சமரிடும் அளவுக்கு கடற்புலிகளின் உத்திகள் வளர்ந்துள்ளன என்பது கடற்படையினருக்கு அச்சுறுத்தலான விடயம்.

கடற்புலிகள் தரப்பில் நான்கு கடற்கரும்புலிகள் உட்பட ஐவர் பலியாகினர். கடற்படையினர் தரப்பில் ஒருவர் பலியானார். ஏழுபேர் கடும் காயங்களுக்கு உள்ளானார்கள். பராக்கிரமபாகு கப்பலும் சேதத்துக்கு உள்ளானது. ஒரு டோரா செயலிழந்து கடற் படையினரால் எப்படியோ கொண்டு செல்லப்பட்டது. கடற்புலிகளின் படகுகளும் சேதமடைந்துள்ளன.

கடற்புலிகள் மற்றுமொரு பாரிய தாக்குதல் மூலம் தமக்கு ஏற்பட்ட சறுக்கலை சீர் செய்ய முற்படுவர் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

ஆக, நீலக்கடலின் மடியிலும் சமர்கள் ஓயப்போவதில்லை.

●●●

## சரணடைந்த கரும்புலி!

தலைநகரில் தாக்குதலுக்காக அனுப்பப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பற்றிய செய்திகள் கடந்த வாரம் பரபரப்பாக அடிபட்டன.

தற்போது அவர் புலனாய்வாளர்களின் விசாரணையில் இருக்கிறார். கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் தானாகச் சென்று சரணடைந்ததாகவே முரசுக்குக் கிடைத்த தகவல்கள் சொல்கின்றன. மேலும் எமக்குக் கிடைத்த தகவல்கள்:

அவரது பெயர்-அந்தோனிப்பிள்ளை அந்தனி நேசராஜா.

மன்னாரில் உள்ள நானாட்டான்தான் அவரது சொந்த ஊர்.

கடற்தொழில் செய்து கொண்டிருந்த நேசராஜாவை 1987ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆட்திரட்டலுக்காகப் பிடித்தது. பின்னர் கெஞ்சி மன்றாடி வீடு சென்றுவிட்டார்.

அந்தனி நேசராஜாவின் அண்ணன் ரெலோ இயக்கத்தில் இருந்தவர். இந்தியப் படையினர் திரும்பிச் சென்ற பின்னர் அவரைப் புலிகள் பிடித்தனர். அந்தனி நேசராஜா 1990ல் புலிகளுடன் சேர்ந்து கொண்டார்.

அந்தனி நேசராஜாவின் ஒரு சகோதரர் ஈ.பி.டி.பி.யில் இருக்கிறார்.

ஒரு சகோதரர் ஈ.பி.டி.பி.யில் இருப்பதால் அவரைச் சந்திப்பதுபோல கொழும்பு செல்லலாம். ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை தீர்த்துக்கட்டவும் உளவு பார்க்கலாம் என்று புலிகள் இயக்க உளவுப் பிரிவினர் நேசராஜாவைத் தயார் படுத்தினார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா- ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இருவரையும் உளவு பார்ப்பது; சந்தர்ப்பம் கிடைத்தால் கரும்புலித் தாக்குதல் மூலம் தீர்த்துக்கட்டுவது என்பதுதான் நேசராஜாவிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை.

புலிகள் இயக்க உளவுப்பிரிவு பொறுப்பாளர் ரகு அப்பாதான் நேசராஜாவிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்.

நேசராஜாவுக்கு ஒரு காதலி இருக்கிறார். அவருக்கு நேசராஜாவின் போக்கில் உடன்பாடு இல்லை. நேசராஜாவை இழக்கவும் விரும்பவில்லை. அதனால் சரணடையுமாறு யோசனை சொல்லியிருக்கிறார்.

அந்த யோசனை சரியென்று பட்டதால் மன்னார் பொலிசில் சென்று சரணடைந்து உண்மைகளைச் சொல்லியிருக்கிறார் நேசராஜா.

ஜனாதிபதியைத் தீர்த்துக்கட்டுவதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்ட இரண்டுபேர் கடை ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்கள். என்ற தகவலை நேசராஜா கூறியதாக பொலிஸார் கூறுகின்றனர்.

கொழும்பு கோட்டையிலுள்ள விமானப்படை மைதானத்திலிருந்து விமானப்படை மற்றும் உயர் அரச அதிகாரிகளை ஏற்றிக்கொண்டு ஹெலிக்கொப்டர் புறப்படும்போது, அந்த இடத்தின் அருகேயுள்ள தண்ணீர்த் தாங்கி ஒன்றிலிருந்து ரொக்கட் லோஞ்சர் மூலம் தாக்கும் திட்டமும் இருந்ததாக நேசராஜா கூறியிருப்பதாக மற்றொரு தகவல் சொல்கிறது.

இதேவேளை, ரெலோவில் இருந்த நேசராஜாவின் மூத்த சகோதரர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் இருக்கிறார். அவரது கதி என்னாகுமோ தெரியவில்லை. ■

## அதிரடி அப்பாத்துரை



**வன்னியில்** இருந்து படகு மூலம் யாழ் செல்வோரை 'பயங்கரவாதிகளிடம் இருந்து தப்பி வந்தோர்' என்று தொலைக்காட்சியில் படம் காட்டுகினம். படம் பிடிச்சுப்போட்டு கூட்டிக்கொண்டுபோய் தனிமுகாமில் வைச்சிருக்கினம். நோட்டம் பார்த்த பின்னரே, விசேஷ அடையாள அட்டை கொடுத்து வீடுகளுக்குச் செல்ல அனுமதியாம். தப்பி வந்தோர் எண்டு சொல்லிப்போட்டு, தப்பான ஆட்களாக இருக்கலாம் எண்டு சந்தேகிப்பானேன்?! பிரசாரத்தில் உள்ள வேகத்தை உபசாரத்திலும் காட்டலாமல்லோ!

**உள்ளாட்சித் தேர்தலின்** வெற்றியால் பெரிய தேர்தலை சட்டுப்புட்டென்று நடத்தினால் என்ன? என்று அதிகாரத் தரப்பில் ஒரு பகுதியினர் யோசிக்கினமாம். சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவில்லாமல் அரசு அமைக்கலாம் எண்டு அபிப்பிராயப்படுகினமாம். சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை நம்பியிருக்க தயங்குவதும் தீர்வை திருப்தியாகக் கொடுக்க முடியாது எண்ட மன உறுத்தலின் வெளிப்பாடோ எண்டு யோசிக்க வேண்டிக்கிடக்கு.

**யாழில் இருந்து** கப்பலில் திருமலை வரவேண்டுமானால் தரகர்களைப் பிடித்தால்தான் காரியம் நடக்குதாம். இரண்டாயிரம் வெட்டினால் கால் கடுக்க காத்திருக்கவும் தேவையில்லை. அலைச்சலும் இல்லை, வசதி எப்படி எண்டு கேட்கிறார்களாம் தரகர்கள். பார்த்தியளோ தரகர்களின் துணிச்சலை? பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டதாம், கருடா சௌக்கியமா? "இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!"

**தந்தை செல்வா** நினைவுத்தூபி முன்பாக யாழில் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றதாம். 100 பேர்வரைதான் கலந்துகொண்டவையாம். நிகழ்ச்சியை நடத்திய இயக்கத்தினர் பத்திரிகையாளரிடம் 'பார்த்துப் பெரிசாப் போடுங்கோ' எண்டு அன்புக் கட்டளையிட்டனராம். அவரும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் எண்டு செய்தி போட்டாராம். விஷயமறிந்த ஒருவர், என்ன நூறு ஆயிரமாகிப்போச்சு எண்டு கேட்க, பத்திரிகையாளர் அலட்டிக்கொள்ளாமல் சொன்னாராம், "ஆக ஒரு சைபர்தானே வித்தியாசப்படுகுது!"

**வாழைச்சேனை** சம்பவம் சிறிய சம்பவம் எண்டு பேட்டி கொடுத்த கிழக்கின் கூட்டான கட்சி 'வெகு ஜனப் பிரதிநிதி'யை பதவி விலகுமாறு ரெண்டு எழுத்தார் கூறியிருக்கிறார்களாம். வெளிநாட்டில் தனக்குப் பழக்கமான ரெண்டு எழுத்து பிரமுகர் மூலம் சமரசம் செய்ய வெளிநாடு பறந்தாராம் பிரதிநிதி. குறிப்பிட்ட பிரதிநிதியார் பதவியை கைவிட்டால், பட்டியலில் அடுத்து இருப்பவர் பிரதிநிதியாகிப்போடுவார். அவரை சிங்கத்தாருக்குப் பிடிக்காதாம்.

**தன்னுடைய கையெழுத்தை** போலியாகப் போட்டு, தன்னுடைய சப்போர்ட் இருப்பதாகக் காட்டித்தான் பச்சைக் கட்சியினர் எலக்ஷனில் வோட்டுக்களை அள்ளிப்போட்டினமாம். மலையான பகுதியின் தனித்துவத் தலைவர்தான் அப்படிச் செப்பியிருக்கிறார். தோல்வியை நியாயப்படுத்துறதுக்காக மலையான பகுதி மக்களை புத்தியே இல்லாதவையாகச் சித்தரிக்கலாமோ? காகத்தை காட்டி வெள்ளையெண்டால் 'ஆமாம்' போடும் காலம் மலையேறிப் போச்சல்லோ எண்டு பொருமினார் ஒரு மலைப்பகுதி நண்பர். அதுதானே பாருங்கோ, சேவலை யானை மிதிக்கட்டும் எண்டு தலைவர் சொன்னார் எண்டு நம்புமளவுக்கு சனம் என்ன புத்திகெட்டதுகளோ? மற்றொரு செய்தி: தனக்கு வேண்டப்பட்ட ஆட்கள் மூலமாக தோல்வி தனக்கல்ல, அதிகாரத்தரப்பாருக்கு எண்டு காட்டவும் முயற்சி நடக்குதாம்.

**மலையான பகுதியும்** வடக்கு-கிழக்காக மாறியிருக்கும், "நான்தான் அப்படியாக விடவில்லை" எண்டு தனித்துவ தொண்டர் கூறுகிறார். அவரால்தான் மலையான பகுதி நல்லா இருக்கு. இல்லாவிட்டால் வடக்கு-கிழக்கு மாதிரியாகி இருக்கும் எண்டு அவரது ஆதரவு விமர்சகர்கள் சொல்லுகினம். எனக்கொரு டவுட்! இவையெல்லாம் வடக்கு-கிழக்கு நிலவரம் நல்ல தலைவர் இல்லாமல் கெட்டுக் குட்டிச் சுவராகிப்போச்சு எண்டுதானே மறைமுகமாகச் சொல்லுகினம்! பின்னர் ஏன் ரெண்டு எழுத்துத் தலைவரை தொண்டர் பாராட்டுகிறார்?! முன்னுக்குப் பின் முரணாக இருக்குதெல்லோ? இதுதான்(டா) அரசியல்! அதுசரி எத்தனை காலத்துக்கு உந்தப் புளிச்சுப் போன மிரட்டல்?!

சமீபத்தில் படித்து இரசித்த ஒரு குட்டிக் கவிதை.

"விசாரணைக் கமிஷனும்
எங்களின் திருமணங்களும்
ஒரு வகையில் ஒன்றுதான்!
இரண்டுமே
மற்றவர்களின்
மன ஆறுதலுக்காகவே
நடத்தப்படுகின்றன!" ■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

அற்புதன்~ எழுதுவது

# கொல்லப்பட்ட தூதர் 124

# யுத்தம் இங்கே சிகிச்சை அங்கே!

## ஈ.என்.டி.எல்.எஃப்.

இந்தியப் படையினருடன் இயக்கரீதியாக முதலில் ஒத்துழைத்தவர்கள் ஈ.என்.டி.எல்.எஃப் குழுவினர்தான்.

ஈ.என்.டி.எல்.எஃப். தலைவரான பரந்தன் ராஜன் இந்திய உளவுப் பிரிவான 'றோ' வின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தார்.

போதை மருந்துக் கடத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பரந்தன் ராஜன் அதன்மூலம் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை வைத்து இயக்கத்தை நடத்தி வந்தார்.

**எவ்விதமான அரசியல் நிலைப்பாடும் இல்லாத ஒரு குழுவினராக அவர்கள் இருந்தமையால் தமது விருப்பப்படி அக் குழுவினரை பயன்படுத்த முடியும் என்று 'றோ' அதிகாரிகள் நம்பினார்கள்.**

எனவே இந்தியப் படையினருக்கு உதவி செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினர்.

யாழ்ப்பாணத்தில் முதலில் அலுவலகம் திறந்தவர்களும் அவர்கள்தான். யாழ்ப்பாணம் குருநகரில் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினர் அலுவலகம் திறந்தபோது, தமது ஆதரவாளர்களையும், மக்களையும் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் புலிகள் அமைப்பினர். அதன்பின்னர் அந்த அலுவலகம் மூடப்பட்டது.

கிளிநொச்சியிலும் ஈ.என்.டி.எல்.எஃப். முகாம் இருந்தது. புலிகள் இயக்க ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட பலர் அவர்களால் கொல்லப்பட்டனர்.

## மாஸ்டர்

18.11.1987 அன்று கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியரான ஆனந்தராஜா சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினரே அப் படுகொலையைச் செய்தனர்.

ஆனந்தராஜா மாஸ்டர் புலிகள் இயக்க ஆதரவாளர். இந்தியப் படைக்கும், புலிகளுக்கும் இடையே மோதல் ஆரம்பமான பின்னர் அகதிகளாக இடம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

பெயர்ந்து சென்றவர்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்தனர்.

அகதிகளாகத் தங்கியிருந்த பெண்களுடன் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவைச் சேர்ந்தவர்கள் வரம்புமீறி நடந்துகொள்ள முற்பட்டனர்.

அதனையடுத்து அங்கிருந்த பெண்களை வேறு ஒரு இடத்திற்கு கொண்டு சென்று பாதுகாப்பாக தங்கவைத்தார் ஆனந்தராஜா மாஸ்டர்.

அதுதான் அவர்மீது கோபம். வீட்டில் தேநீர் குடித்துச் கொண்டிருந்தவரை சுட்டுக்கொன்றனர்.

ஆனந்தராஜா மாஸ்டர் சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து மாணவர்கள் சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

**"எங்கள் நெஞ்சில் நிறைந்த மாஸ்டரை எங்கள் கையில் ஒப்படை"**

**"மாற்றானை மகிழ்விக்க சொந்த நாட்டானைக் கொல்லாதே!"** என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

கண்டனக் கூட்டத்தில் உரையாற்றிய ஒரு மாணவன் கூறினான்:

"ஆனந்தராஜா மாஸ்டர் இனிமேல் வரமாட்டார். ஆனாலும் நாம் அவருக்காகக் காத்திருப்போம்"

## வவுனியாவில்

இக் காலகட்டத்தில் வவுனியாவில் புளொட் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் முகாம்கள் அமைத்திருந்தன.

புளொட் இயக்கத்தினர் இந்தியப் படையினருடன் நெருக்கமாகவில்லை.

அப்போது தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த அத்துலத் முதலியுடன் புளொட் இயக்கத் தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்.

ஆயுதமேந்திப் போராடிய அமைப்புக்களில் இலங்கை அரசுடன் முதன் முதலில் உறவை ஏற்படுத்திக் கொண்டவர்கள் புளொட் இயக்கத்தினர்தான்.

கொழும்பில் புளொட் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் நடமாடவும் அனுமதி இருந்தது.

வவுனியா நகரில் செயற்பட்ட புளொட் இயக்கத்தினர் லொறிகளிலும், போக்குவரத்து பஸ் உரிமையாளர்களிடமும் நிதி திரட்டலிலும் ஈடுபட்டனர்.

வவுனியா ஊடாக யாழ் செல்லும் பஸ்கள் மறிக்கப்பட்டு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. புலிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் புளொட் இயக்கத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர். புலிகள் இயக்கத்தினர் என்று கருதப்பட்டோர் பின்னர் மாயமாய் மறைந்தனர்.

அதன்பின்னர் செட்டி என்பவரது தலைமையில் ரெலோ இயக்கத்தினரும் வவுனியா நகரில் முகாம் அமைத்தனர்.

ரெலோ வவுனியாவில் முகாம் அமைப்பதை முதலில் புளொட் இயக்கத்தினர் விரும்பவில்லை. எனினும் செட்டி புளொட் அமைப்பினரின் அச்சுறுத்தலையும் மீறி அங்கு முகாம் அமைத்தார். இலங்கைப் படையினருடனும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

அதன்பின்னர் ரெலோ இயக்கத்தினரும் வவுனியாவில் நிதி திரட்டல், புலிகள் இயக்கத்தினர் என்று சந்தேகிக்கப்படுவோரை பிடிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

புலிகளால் பாதிக்கப்பட்ட ஏனைய இயக்கங்களின் உறுப்பினர்கள் பலர் செட்டியுடன் சேர்ந்து நின்றுகொண்டு புலிகள் இயக்கத்தினரை பழிவாங்கும் உணர்ச்சியுடன் செயற்பட்டனர். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் அப்போது தீவிரமாக செயற்படத் தொடங்காமையால் அந்த இயக்க உறுப்பினர்கள் பலரும் செட்டியுடன் போய் சேர்ந்து கொண்டனர்.

## கொழும்பில் பெருமாள்

இக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க வேலைகளை வரதராஜப்பெருமாள், சேகர் (பாஸ்கரன்), சாந்தன் ஆகியோர் கொழும்பில் இருந்து மேற்கொண்டனர்.

1983க்கு பின்னர்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தில் சேர்ந்தவர் வரதராஜப் பெருமாள். ஆயினும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் உடைவுகண்டு இரண்டான பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க மத்திய கமிட்டியின் உறுப்பினருமானார்.

**கொழும்பு வந்த வரதராஜப்பெருமாள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் தலைவரே அவர்தான் என்று கருதப்படுமளவுக்கு தன் வாய் வீச்சுக்களால் பிரபலமாகத் தொடங்கினார்.**


வரதராஜப் பெருமாள், சேகர், சாந்தன் மூவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய கமிட்டி உறுப்பினர்கள். இவர்களில் சேகர், சாந்தன் ஆகியோர் வரதனுக்கு மூத்த உறுப்பினர்கள்.

ஆனாலும் வரதன்தான் இந்திய தூதரகத்துடன் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். தனியான சந்திப்புக்களையும் நடத்தினார். சந்திப்புக்களுக்கு செல்லும்போது மற்றொரு மத்திய கமிட்டி உறுப்பினரான சேகரை அழைத்துச் செல்வதையும் தவிர்த்தார்.

அதனால் மனமுடைந்த சேகர் படிப்படியாக இயக்கத்தைவிட்டு ஒதுங்கத் தொடங்கினார். தமிழ்நாட்டுக்குச் சென்றார்.

கொழும்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் முற்போக்கு சக்திகள் என்று கருதப்பட்ட வட்டாரங்களுடனும் வரதன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகராக இருந்த அபுயூசுப் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உடன் சேர்ந்ததுக்கும் வரதன்தான் காரணம்.



ஜொனி

## தேர்தல் யோசனை

இந்திய அரசுக்கு நம்பிக்கையாக செயற்படுவதுடன், வடக்கு- கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தையும் நிரப்பிக்காட்டத் தன்னால் முடியும் என்று இந்திய தூதர் திக்ஷித்தை நம்பச் செய்துவிட்டார் வரதன்.

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தும் திட்டமும் இந்திய அரசுக்கு இருந்தது.

இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியது மூலம் சாதிக்கப்பட்டது என்ன? என்ற கேள்விக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறோம் என்று உதாரணம் காட்ட வேண்டும்.

இதெல்லாம் இந்திய மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இருந்த அரசியல் நிர்ப்பந்தங்கள்.

வடக்கு-கிழக்கில் **மாகாணசபைத் தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என்று தீர்மானித்தது இந்திய அரசு.**

தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட ஏனைய தமிழ் கட்சிகளின் நாடி பிடித்துப் பார்த்தது இந்திய தரப்பு.

தேர்தலில் போட்டியிட அக் கட்சிகள் தயாராக இல்லை என்று தெரிந்துவிட்டது.

தேர்தலில் போட்டியிட ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும் ஈ.என்.டி.எல்.எஃப்பும் முன் வந்தன.

தேர்தல் நடத்துவது, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கு முன்னுரிமை, வரதன்தான் முதலமைச்சர் என்ற இரகசிய உடன்பாடு தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே செய்யப் பட்டுவிட்டது.



புலிகள்-காத்திருப்பு

இத்தகைய திட்டங்கள் ஒருபுறம் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதும், இந்தியப் படையினரின் நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

## தமிழ்நாட்டில் சிகிச்சை

இந்தியப் படையும்-புலிகளும் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டில் புலிகளின் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது என்பதை முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா.

இன்னொரு விடயமும் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

இந்தியப் படையுடன் நடைபெற்ற மோதலில் காயமடைந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் இந்தியாவுக்கு படகுகளில் கொண்டு செல்லப்பட்டனர். தமிழ்நாட்டில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றால் இந்தியப்படையினர் கைது செய்துவிடுவார்கள். அதனால் தமிழ்நாட்டில் சிகிச்சை பெறச் சென்றார்கள்.

**இலங்கையில் புலிகளை தேடி இந்தியப் படை வேட்டையாடிக் கொண்டிருந்தபோது இந்தியாவின் மாநிலமான தமிழ்நாட்டுக்கு சென்று புலிகள் சிகிச்சை பெற்றனர் என்பது ஆச்சரியமான விடயம்தான்!**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மோதலில் படுகாயமடைந்த புலிகள் இயக்க உறுப்பினரான ஜொனி தமிழ்நாட்டில் மதுரையில் நெடுமாறன் வீட்டில் இருந்து சிகிச்சை பெற்று உயிர் தப்பினார்.

நெற்றியின் மையத்தில் ஜொனிக்கு குண்டு பாய்ந்திருந்தது. நெற்றியில் உலோகத் தகடு பொருத்தி தமிழ்நாட்டில் சிகிச்சை செய்தனர். தமிழ் நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டதால் தான் ஜொனி உயிர்தப்பினார்.

ஜொனி கிட்டுவின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தவர். கிட்டு யாழ்மாவட்ட தளபதியாக இருந்தபோது யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதிக்கு ஜொனி பொறுப்பாகவும் இருந்தவர்.

மதுரையில் சிகிச்சை பெற்ற ஜொனியை கிட்டு சென்னைக்கு அழைத்தார்.

அப்படி அழைத்தது ஒரு முக்கியமான காரணத்திற்காக.

இந்திய 'றோ' அதிகாரிகளுடன் கிட்டு நடத்திய பேச்சுவார்த்தையை வன்னியில் இருந்த பிரபாகரனிடம் தெரிவிக்க ஒரு நம்பிக்கையான தூதர் தேவை.

ஜொனிதான் அந்தப் பணியைச் செய்யக் கூடியவர் என்று நம்பிய கிட்டு, ஜொனியிடம் தகவல்களை தெரிவித்து பிரபாகரனிடம் அனுப்பினார்.

சண்டை ஒருபுறம் நடந்து கொண்டிருந்தது. இந்திய இராணுவ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஜொனி வன்னிக்குச் சென்று பிரபாகரனை சந்தித்தார்.

பிரபாகரனை சந்தித்துவிட்டு திரும்பிய ஜொனியை இந்தியப் படையினர் வன்னியில் வைத்து சுற்றிவளைத்தனர்.

பிரபாகரன் எங்கே இருக்கிறார்? என்று ஜொனியிடம் விசாரணை செய்தனர். ஜொனி சொல்ல மறுத்தபோது, சுட்டுக் கொல்லப்பட்டார்.

தூதராக வந்த ஜொனி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஜொனியின் நினைவாகவே தம்மால் தயாரிக்கப்பட்ட கண்ணிவெடிகளுக்கு 'ஜொனி மைன்ஸ்' என்று புலிகள் பெயரிட்டுள்ளனர்.**

## எம்.ஜி.ஆர். உத்தரவு

இந்தியப் படையோடு யுத்தம் நடைபெற்ற காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மற்றொரு சம்பவம் இது-

சோதனை அரண் ஒன்றில் வேன் ஒன்றை மறித்து சோதனையிட்டனர் தமிழகப் பொலிசார்.

வேனுக்குள் ஆயுதங்கள் இருந்தன. புலிகள் இயக்க உறுப்பினர்களும் இருந்தனர். வேனையும், அதில் இருந்தவர்களையும் கைது செய்தனர் தமிழகப் பொலிசார்.

பொலிஸ் மேலிடத்துக்கு தகவல் பறந்தது. முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் செய்தி தெரிவிக்கப்பட்டது.

ஆயுதங்களை வைத்துக் கொண்டு வேனையும், ஆட்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு உத்தரவு வந்தது.

இந்தியப் படையுடன் புலிகளுக்கு மோதல் நடை பெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் எம்.ஜி.ஆரை பிரபாகரனின் பிரதிநிதி ஒருவர் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருந்தார். சில தொழிலதிபர்கள் மூலமாக புலிகளுக்கு தேவையான நிதி உதவிகளையும் எம்.ஜி.ஆர். ஏற்பாடு செய்து கொடுத்து வந்தார்.

தமிழ்நாட்டில் புலிகளுக்கு தேவையான ஆயுத உபகரணங்கள், கைக்குண்டுகள் போன்றவற்றை தயாரிக்கும் பட்டறைகளும் இருந்தன.

தமிழக அரசுக்கும் அத் தகவல்கள் ஜாடைமாடையாகத் தெரியும். என்றாலும் கூட கண்டும் காணாமல் இருந்து விட்டது.

## நவம்பரில் தாக்குதல்

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் இந்திய படைக்கு பொறுப்பாக இருந்தவர் மேஜர் பரமேஸ்வரஜயர். அப்பகுதி மக்களிடம் நல்ல அபிமானம் பெற்றிருந்தவர்.

நவம்பர் 25ம் திகதி உடுவில் டச்சு வீதியில் தேடுதல் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டனர் இந்தியப் படையினர்.

பதுங்கியிருந்த புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். மேஜர் பரமேஸ்வரஜயர் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

உடலில் குண்டு துளைத்தபோதும் தம்மீது தாக்குதல் நடத்திய புலிகள் இயக்க கெரில்லாக்களை நோக்கி சுட்டுக் கொண்டே இருந்தார் பரமேஸ்வரஜயர். புலிகள் இயக்கத்தினர் தரப்பிலும் சிலர் கொல்லப்பட்டனர்.

பரமேஸ்வர ஜயரும் மூன்று படையினரும் பலியானார்கள்.

பரமேஸ்வரஜயர் இருக்கும்வரை உடுவில் பகுதி மக்களுடன் பண்பாகவே நடந்துகொண்டார். படையினர் அத்துமீறல்களில் ஈடுபடாமலும் பார்த்துக் கொண்டார்.

பரமேஸ்வரஜயர் பலியானதும் நடந்த சம்பவங்கள் நேர் எதிராக இருந்தன.

உடுவிலில் குடியிருப்புக்கள் நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. வீதியில் சென்று கொண்டிருந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**ஷெல் தாக்குதலால் காயமடைந்த தாயாரை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சிகிச்சைக்காக சென்று கொண்டிருந்தார் மகன். உடுவில் சந்தியில் வைத்து இந்தியப் படையினரின் துப்பாக்கிகள் அவர்களை நோக்கிச் சீறத் தொடங்கின. மகன் ஓடித் தப்ப, தாயார் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றுமட்டும் உடுவிலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.**

நவம்பரில் நடைபெற்ற மற்றொரு கொடிய சம்பவம் இது-

அச்சுவேலியில் ரோந்து சென்றனர் இந்தியப் படையினர். பதுங்கியிருந்த புலிகள் கைக்குண்டுகளை வீசினார்கள்.

கைக்குண்டுகள் வீசப்பட்டபோது இந்தியப் படையினர் தரையில் விழுந்து படுத்து விட்டனர். அப்படியிருந்தும் இரண்டு படையினர் பலியானார்கள்.

தரையில் படுத்திருந்தபடியே புலிகள் எவ்வழியால் தப்பிச் செல்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

புலிகள் பாலசிங்கம் என்பவரது வீட்டு வளவு வழியாகத் தப்பிச் சென்றனர்.

புலிகள் தப்பிச் சென்ற பின்னர் அந்த வீட்டுக்குள் புகுந்தனர் இந்தியப்படையினர்.

"உள்ளே யார்? வெளியே வா!" என்று அழைத்தனர்.

**வீட்டுக்குள் இருந்து கணவனும், மனைவியும், இன்னொருவரும் நடுங்கியபடியே வெளியே வந்தனர்.**

**மூவரையும் சுட்டுத் தள்ளிவிட்டுப் போய்விட்டனர்.**

நவம்பர் 28ம் திகதி யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் ஓரிடத்தில் புலிகள் பதுங்கியிருப்பதாக இந்தியப் படையினருக்கு தகவல் கிடைத்தது.

விரைந்து சென்றது இந்தியப்படை. காத்திருந்தனர் புலிகள் இயக்கத்தினர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# செல்வா நூற்றாண்டும் சமஷ்டிச் சிந்தனையும்!

அலசுவது- இராஜதந்திரி

வட அயர்லாந்துப் பிரச்சினை அணுகப்படும் முறையை அவதானிக்க கடந்த ஆண்டில் இலங்கையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று அங்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்தவாரம் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் தென்னாபிரிக்காவுக்கு இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று- அங்குள்ள நடைமுறைகளை அறிந்து கொள்ளச் சென்றிருந்தது. இக்குழுவில் சட்டமா அதிபர் உட்பட சட்டத்துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் சிலரும் அடங்கியிருந்தனர்.

இது தவிர இலங்கை இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு யுத்தமாக உருவானது முதல் இந்திய அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், சிரேஷ்ட பத்திரிகையாளர்கள், இராஜதந்திரிகள் ஆகியோர் இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி அடிக்கடி, அவ்வப்போது பல்வேறு கோணத்திலிருந்தும் கருத்துக் கண்ணோட்டங்களை வழங்கிவரக் காணப்படுகின்றனர்.

எனவே இலங்கை ஒரு சிறிய நாடு; அதன் உள்நாட்டு யுத்தத்துக்கு காரணமாகவுள்ள இனப்பிரச்சினை துரதிர்ஷ்டவசமானதொன்று; அப்பிரச்சினையைத் தீர்க்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கைக்கு விமோசனம் உண்டு என்பதை உலக நாடுகள் பெரிதும் உணர்ந்துள்ளன.

ஆனால் இலங்கையில் அரசியல் நடத்துவோரின் போக்கு அசமந்தமானதாகவும், பிரச்சினையை மேலும் வளரவிடுவதாகவுமே இருக்கின்றது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழு தென்னாபிரிக்க நடைமுறைகளை அறிந்துகொள்ள அங்கு சென்றுள்ளது.

ஆனால் வெளிநாட்டு அனுபவங்களையும், ஆலோசனைகளையும் அவ்வப்போது அறியும் இலங்கையில் அரசியல், மற்றும் சட்ட வல்லுநர்களால் தாம் கூறியவற்றையும், ஆலோசனைகளாகப் பெறுபவர்றையும் உரிய விதத்தில் ஒரு நல்ல தீர்வாகக் கொண்டுவர முடியாதுள்ளது. இத்தகைய நிலைக்கு இலங்கையில் பேரினவாத சக்திகளின் இடையூறுகளும், விஷமங்களுமே முக்கிய காரணமாக இருக்கின்றன.

20ம் நூற்றாண்டு பூர்த்தியடைவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகளே மீதமுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை இந்த நூற்றாண்டின் முதல் அரைப்பாகம் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டதாகவும், அடுத்த அரைப்பாகமே சுதந்திர இலங்கையாகவும் மாறியிருந்தது.

எனவே அடுத்த வருடம் (1998)இலங்கை சுதந்திரமடைந்து 50 வருடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளது!

இந்த 50 வருடகாலமே இலங்கையை எவ்விதத்திலும் உய்வடைய முடியாத இனப்பிரச்சினைக்குள்ளாக்கி விட்டிருக்கக் காணப்படுகின்றது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த அடுத்த சில வருடங்களிலேயே இன, மொழி, மத வாதங்கள் படிப்படியாகத் தலைகாட்ட ஆரம்பித்தன.

இந்நிலையில் சுதந்திர இலங்கையின் முதல் 25 வருட காலப்பகுதி இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததாகவும், அடுத்த 25 வருடகாலப் பகுதியே பெரும்பாலும் ஆயுதமேந்திய தீவிரவாத மோதல்களுக்கு அடித்தளமிட்டதாகவும், அதனைச் சார்ந்ததாகவும் இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்துள்ளது.

ஈழத்துக் காந்தி, தந்தை செல்வா, என்றெல்லாம் இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்களால் பெருமதிப்போடு அழைக்கப்பட்டவரே அமரர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்.

அமரர் செல்வநாயகம் மட்டுமல்ல அவரது காலத்தைச் சேர்ந்த கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், அடங்காத்தமிழர் சி. சுந்தரலிங்கம், 'இரும்பு மனிதர்', டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், இராஜவரோதயம், போன்றோர் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக தமது காலப்பகுதியில் ஓங்கிக் குரல் கொடுத்திருந்தனர்.

இத் தலைவர்கள் எவ்வகையிலும் அரசியல் ரீதியாக 'சண்டித்தனம்' புரிந்தோ அல்லது தீவிரவாதக் கருத்துக்களுக்கோ இடமளித்திருக்கவில்லை.

தாம்பெற்ற கல்வி அறிவு, மற்றும் தமது கொள்கைகளில் கொண்ட விசுவாசம் என்பவற்றின் அடிப்படையில் நீதியாகவும், நேர்மையான முறையிலுமே தமது அரசியல் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

சாத்வீகம், அஹிம்சை என்பவை வழிநின்று அத்தலைவர்கள் தமிழர்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் குரல் கொடுத்தனர்.

ஆனால் இக்குரல்களை பேரினவாதிகள், அடக்கி ஒடுக்கி இன, மொழி, மத வாதங்களை உள்ளடக்கிய தமது மேலாதிக்கத்தையே நிலைநிறுத்த முயன்றனர்.

அன்று சிங்கள மக்களைப் பிரதிநித்துவப்படுத்திய தலைவர்கள் கல்வி, அரசியல் ரீதியாக சிறந்த பின்னணிகளைக் கொண்டிருந்தபோதிலும் பேரினவாதிகளின் அழுத்தங்களால் குறுகிய வட்டங்களுக்குள்ளேயே தம்மை அவர்கள் வைத்துக்கொண்டனர்.

தமிழ்த் தலைவர்கள் அன்று தனிநாட்டையோ, அல்லது தமிழீழத்தையோ கேட்கவில்லை. இந்தநாட்டில் சிறுபான்மை இனமக்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று தத்தமது தனித்துவங்களைப் பேணி வாழவேண்டுமென்றே குரல் கொடுத்தனர்.

ஆனால் பேரினவாதிகள் தமிழர்களது உரிமைகளைத் தரமறுத்ததுடன், படிப்படியாக வன்முறைகளையும் கட்டவிழ்த்து விடத் தொடங்கியிருந்தனர்.

இந்நிலையில் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமது பாராளுமன்ற நாட்களில் சிங்களத் தலைவர்களை மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் எச்சரித்திருந்தார்.

"தமிழர்களுக்கான சமஷ்டி முறையிலான நிர்வாகத்தை நீங்கள் கொடுக்கத் தயங்கலாம்; ஆனால் அதன் விளைவாக காலப்போக்கில் ஒரு தனிநாட்டுக்கான யுத்தம் வெடிப்பதை உங்களால் தவிர்க்கமுடியாமல் இருக்கும்!" என்று அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கூறியிருந்தார்.

அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறிச் சென்றவையே இன்று நிதர்சனமாக இருப்பதை அறிய முடிகின்றது!



ஆட்சியிலுள்ள இன்றைய சிங்களத் தலைவர்கள் மற்றும் மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் ஆகியோர் "அன்று பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இன்றைய யுத்தம் ஏற்பட்டிருக்காது" எனத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் ஒன்றிணைந்து வாழ்வதன் முக்கியத்துவத்தை சிங்களப் பேரினவாதிகள் என்றுமே உணர்ந்ததில்லை. தமிழர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள், தமக்கு ஆபத்தையே ஏற்படுத்துமென்ற கண்ணோட்டத்துடனேயே அவர்கள் இருந்து வந்தனர். இதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தன போன்ற சந்தர்ப்பவாதத் தலைவர்களும் அவ்வப்போது தூபம்போட்டு தமது அரசியல் நலன்களை முதன்மைப்படுத்தினர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையார் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கொண்டுவர முன்வந்திருக்கலாம். ஆனால் சிங்களம் மட்டுமே என்ற சட்டத்தை திணிப்பதில் அவர் சூத்திரதாரியாக இருந்தார்.

பின்னர் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கெதிராக ஜே.ஆர்.ஜயவர்த்தன கண்டியாத்திரையை நடத்தி அதனைச் செயலிழக்கச் செய்திருந்தார்.

எனவே பேரினவாத சக்திகளின் அன்றைய அரசியல் அணுகுமுறைகள் வரலாறாகிப் போன நிலையிலேயே இன்று இலங்கை இனப்பிரச்சினை பூதாகரமாக மாற்றமடைந்து, உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் இப்பிரச்சினை பற்றிப் பேசப்படுவதைக் காணமுடிகின்றது.

அரசியல் தீர்வு பற்றிப்பேசிவரும் ஆட்சியாளர்கள் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் கூட நாட்டு மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழங்கிய அங்கீகாரம் என்று கூறிவருகின்றனர்.

இந்நிலையில் அமரர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் காலப்பகுதியில் ஏமாற்றப்பட்டும், வஞ்சிக்கப்பட்டுமிருந்த தமிழ் மக்கள் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்று ஆரம்பித்ததே இன்றைய ஆயுதப்போராட்டமாக இருக்கின்றது.

இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதும், அரசியல்தீர்வை ஏற்படுத்த வேண்டியதும் ஆட்சியாளர்களது பொறுப்பாகவே இருக்கின்றது.

ஏனெனில் கடந்த காலங்களில் அடிக்கடி ஏமாற்றப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்டும் வந்த தமிழ் மக்கள் பிரிந்து போவதைத் தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்தவர்களாகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் நேர்மையான அரசியல் தீர்வொன்று ஏற்படாத பட்சத்தில், நாடு பிளவு படுவதைத் தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளே மேலும் பலமடையும்.

இதனை ஆட்சியாளர்கள் நன்குணர்ந்திருக்கவே காணப்படுகின்றனர். ஆயினும் ஒரு அழுத்தம் திருத்தமான தீர்வைக் கொண்டுவருவதில் தாமதத்தை ஏற்படுத்தியவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தருணத்தில் தனது ஆரம்பகாலத்தில் அவர் முன்வைத்திருந்த சமஷ்டி ஆட்சிமுறை பற்றிய சிந்தனைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியவர்களாகின்றனர்.

வடக்கு-கிழக்கின் முக்கிய ஆயுதப்போராட்ட சக்தியாக இருந்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர இலங்கையின் அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் சமஷ்டியை மையமாகக் கொண்ட அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தையே தற்போது வலியுறுத்தி வரக் காணப்படுகின்றன.

சமஷ்டி முறையிலான தீர்வினைக்கூட ஆட்சியாளர்கள் மறுத்த நிலையில்தான் வாழு வாழவிடு என்ற கருத்துக்கு ஏற்ப தனிஈழக் கோரிக்கையை முன்வைத்தார் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்.

தமிழ் ஈழம் கோரி செயற்பட்ட கூட்டணியினரும், புலிகள் தவிர்ந்த போராளி அமைப்புக்களும் தற்போது தனிஈழக் கோரிக்கையை கைவிட்டுள்ளன.

மீண்டும் சமஷ்டிச் சிந்தனை அக் கட்சிகளிடம் மேலோங்கி உள்ளதையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி சமஷ்டி முறையிலான தீர்வொன்று வழங்க ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், செல்வ நாயகம் அவர்கள் தன் இறுதிக் காலத்தில் சமஷ்டித்தீர்வில் கொண்டிருந்த நம்பிக்கையீனம் சரியானது என்பதை உறுதி செய்வதாகிவிடும்.

நாடு பிளவுபடுவதை தவிர்க்க வேண்டுமானால் சமஷ்டிச் சிந்தனைக்கு மதிப்பளிக்க வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகிறது.

இலங்கை அடுத்த நூற்றாண்டில் உறுதியுடன் காலடி எடுத்துவைப்பதற்கும், அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வலியுறுத்திய கொள்கைகளில் ஒன்றான சமஷ்டி ஆட்சிமுறை வழியமைத்துக் கொடுக்குமா? அல்லது அமரர் செல்வநாயகம் இறுதியாக வலியுறுத்திய தனி ஈழக் கோரிக்கையை நியாயப்படுத்தும் காரணிகள்தான் தோன்றுமா? என்பது ஆட்சியாளர்கள் மற்றும் அரசியலாளரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

## செல்வாவுக்கு இருட்டடிப்பு

### திரிபுபடும் வரலாறு

தந்தை செல்வா மறைந்த ஆண்டு எது?

1971ம் ஆண்டா?

1977ம் ஆண்டா?

தந்தை செல்வா மறைந்தது 1977ம் ஆண்டு எப்ரல் 26ம் திகதி என்பது தெரிந்ததுதானே!

பின்னர் ஏன் சந்தேகம்?

1971ம் ஆண்டின் பின்னர் தந்தை செல்வா வெளியிட்ட கருத்துக்கள், அதனையொட்டிய முக்கிய திருப்பங்கள் எதனையும் செல்வா நூற்றாண்டுக் கூட்டங்களிலோ, பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளிலோ, தமிழ்கட்சித் தலைவர்களின் அறிக்கைகளிலோ காணமுடியவில்லை.

1971ம் ஆண்டுக்கு முன்னர் தந்தை செல்வா கூறிய கருத்துக்களை மட்டுமே கூட்டங்களில் நினைவூட்டியிருக்கிறார்கள்; கட்டுரைகளில் வெளியிட்டிருக்கிறார்கள்.

1971ம் ஆண்டின் பின்னரான தந்தை செல்வாவின் அரசியல் நிலைப்பாட்டை முற்றாகவே இருட்டடிப்பு செய்துள்ளனர்.

அதன்மூலம் தந்தை செல்வா என்ற தலைவரின் முப்பதாண்டுகால அரசியல் தலைமைத்துவத்தின் முக்கியமான பிற்காலப் பகுதியை வரலாற்று மோசடி செய்து கொண்டிருக்கிறார்கள்.

"இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சமஷ்டித் தீர்வையே தந்தை செல்வா முன்வைத்தார்!" என்பதுதான் அவரது கட்சியினரான கூட்டணியினர் முதல், ஏனைய தமிழ்க் கட்சிகள் வரை இன்று கூறும் கொள்கை விளக்கம்.

அதாவது, தமது இன்றைய அரசியல் நிலைப்பாடுகளை நியாயப்படுத்த மட்டுமே தந்தை செல்வாவை துணைக்கு அழைக்கிறார்கள்.

'சமஷ்டி ஆட்சிமுறை மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும்' என்பது தான் தற்போது கூட்டணி உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு.

அந்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதும், அதற்கான காரணத்தை விளக்குவதும் அக்கட்சிகளின் உரிமை; கடமை.

ஆனால், அதற்காக தந்தை செல்வா சமஷ்டித் தீர்வை மட்டுமே கோரினார் என்று வரலாற்றை மூடிமறைப்பதற்கு எக் கட்சிக்கும் உரிமை கிடையாது.

தந்தை செல்வநாயகம் சமஷ்டி ஆட்சி முறையைக் கோரியது 1971ம் ஆண்டுக்கு முன்னர்.

1971ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளின் அங்கீகாரமின்றி கொண்டுவரப்பட்ட அந்த அரசியலமைப்புத்தான் தந்தை செல்வா தனது நாடாளுமன்றப் பதவியை துறக்கவும் காரணமாக அமைந்தது.

'இலங்கை ஒற்றையாட்சி முறையில் ஆளப்படும் பௌத்த நாடு' என்று முதன் முதலில் முத்திரை குத்திய அரசியலமைப்பு அதுதான்.

அப்போதுதான் சமஷ்டிக் கொள்கையை கைவிட்டார் தந்தை செல்வா. 1972ல் இந்தியாவுக்குச் சென்றார். கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகியோரிடம் தமிழ் ஈழப் போராட்டத்துக்கு ஆதரவு கோரினார்.

தமிழ் ஈழமே இறுதி முடிவு என்ற கொள்கையுடன் 1975ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்றார்.

1976ம் ஆண்டு தந்தை செல்வாவின் தலைமையில் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

"சுதந்திர சோசலிச மதசார்பற்ற பூரண இறைமை கொண்ட தமிழீழத் தனி நாட்டை அடைவதொன்றே இலட்சியம்! இதற்குக் குறைந்தளவிலான எந்தச் சமரசத்தையும் ஏற்பதில்லை!"

1977ம் ஆண்டு ஏப்ரலில் தந்தை செல்வா மறைந்தார். அவரது மறைவின் பின்னர் தந்தையின் மரண சாசனம் என்று கூட்டணியினர் ஒரு பேச்சை வெளியிட்டனர். 19.11.1976ல் பாராளுமன்றத்தில் செல்வா ஆற்றிய உரையைத்தான் தந்தையின் மரண சாசனம் என்று கூட்டணியினர் மக்களுக்குக் கூறினார்கள்.

தந்தை செல்வா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை இதுதான்:

"தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் சமஷ்டி மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்கள் மூலம் இப்போது இதை அறிந்து கொண்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்துவாழ வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாய் இருந்தனர். அவர்கள் தங்களுக்கு என்று தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கு என்று ஒரு இடம் இருக்கிறது. எங்கள் இழந்துபோன தமிழீழ அரசை மீள அமைப்பதே எமது இலட்சியம். இது பிரிவினையாக முடியாது.

தனித்தமிழ் ஈழம் நிறுவும் இலட்சியத்தை நோக்கி நாம் உறுதியுடன் முன்னேறுவோம். தனித்தமிழ் ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும், மிகவும் வில்லங்கமான ஒன்று என்பதும் எமக்கு நன்கு தெரியும். நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்தில் இருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்து போக வேண்டும். எனவே நாங்கள் எப்படியும் போராடி தனித் தமிழீழத்தை அடைந்தே தீருவோம்."

(-பாராளுமன்ற ஹன்சார்ட் 19.11.1976)

ஆக, தந்தை செல்வாவின் அரசியல் வரலாறு என்பது சமஷ்டி மீது நம்பிக்கை இழந்த வரலாறாகவே முடிவுற்றது. 'தமிழீழத் தனியரசு' என்ற கொள்கையோடு தான் தந்தையின் உயிர் பிரிந்தது.

அக் கோரிக்கை சாத்தியமா? தந்தை செல்வா வாழ்ந்த காலகட்டத்தில் கூறிய கருத்துக்களில் தற்காலத்தில் ஏற்கப்படக் கூடிய கருத்துக்களும் இருக்கலாம். ஏற்கப் பட முடியாத கருத்துக்களும் இருக்கலாம்.

அதனை நேரடியாகச் சொல்ல வேண்டுமேயல்லாமல், தங்கள் இன்றைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப தந்தை செல்வாவின் வரலாற்றை திரிபுபடுத்தக் கூடாது. அது நேர்மையான முறையல்ல. மறைந்த தலைவனின் பெயரை வைத்து அரசியல் வியாபாரம் செய்வது போலாகி விடும்!

தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்ட காரணத்தை நியாயப்படுத்தவும், ஆயுதப் போராட்டம் அர்த்தமற்றது என்பதை சொல்லாமல் சொல்லவும், தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவை போர்வையாகப் பயன்படுத்துவது தவறு.

அக் கருத்துக்களை துணிச்சலாக- நேரடியாக தத்தமது கட்சிக் கருத்துக்களாக மக்களிடம் சொல்லட்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

## பாகம் 02

# பூலான் தேவி

தருவது ரசிகன்

39

புத்லிபாய்-

ஆக்ராவில் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த அழகான பெண்.

ஆரம்பத்தில் ஒரு நடனக் குழுவில் இருந்தாள்.

புத்லி ஆடுகிறாள் என்றால், பணக்காரர்களும், பண்ணையார்களும் அங்கே மொய்த்துக் கிடப்பார்கள்.

போதையேறிச் சிவந்த விழிகளால் அவள் எழில்களைப் பருகிக்கொண்டிருப்பார்கள்.

கட்டுக்குலையாத உடலையும், சேலை தழுவிக்கிடக்கும் வனப்பான எழில்களை நாமும் தழுவிக்கொண்டால் என்னவென்று வெறியோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நோட்டுக்களை வீசியெறிவார்கள். தரையில் சிதறிக்கிடக்கும் நோட்டுக்கள்மீது நின்று புத்லிபாய் ஆடிக்கொண்டிருப்பாள்.

ஒரு முறை, ஒரே ஒரு முறை புத்லி கிடைத்தால் போதும், கட்டுக்கட்டாக பணத்தைக் கொட்டித் தருகிறோம் என்று காத்துக்கிடப்பார்கள்.

புத்லிபாயின் தாயாருக்கு தன் மகளை தாரைவார்க்க ஆசைதான்.

"கட்டுடலை விருந்தாக்கினால் கொட்டுமடி பணமழை," என்று ஆசைகாட்டினாள்.

இரவு-உறவு-வரவு கசக்குமா?

"கண்ணே! சம்மதி!" என்றாள்.

சினந்தாள் புத்லிபாய். சீறினாள் புத்லிபாய். வீட்டை விட்டு வெளியேறினாள் புத்லிபாய்.

கொள்ளைக் கூட்டத்தலைவன் சுல்தானுடன் சேர்ந்தாள்.

"பலருக்குப் படுக்கை விரிப்பதைவிட உன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளுகிறேன். வா சுல்தான் வா!"

சுல்தானும் புத்லிபாயும் ஒன்றானார்கள். கொள்ளைக் கோஷ்டியில் புத்லிபாயும் ஒருத்தியானாள்.

சுல்தான் பொலிசாருடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டான். புத்லிபாய் கொள்ளைக் கோஷ்டித் தலைவியானாள்.

'பாயும் பெண் புலி.' என்று புத்லியை நினைத்து பொலிசார் நடுங்கினார்கள்.

'கொள்ளை ராணி' என்று முதன் முதலாக பட்டம் சூட்டப்பட்டாள்.

1950ம் ஆண்டுகளில் புத்லிபாய் கோஷ்டி சம்பல் பள்ளத் தாக்கில் பிரபலமாக இருந்தது.

புத்லிபாய் காளியின் அவதாரம் என்று கிராமமக்கள் கொண்டாடினார்கள். அவள் சாகசங்களை வைத்து பாடல்கள் புனைந்தார்கள்

உயிரோடு அல்லது பிணமாக புத்லியை பிடிக்குமாறு உத்தரவிட்டது அரசாங்கம், ஒருநாள்-சம்பல் பள்ளத்தாக்கு அருகே ஓடிக்கொண்டிருக்கும் குன்வாரி ஆற்றைக் கடந்து கொண்டிருந்தது புத்லி குழு.

பதுங்கியிருந்த பொலிசார் புத்லிபாயைச் சுட்டுக்கொன்றனர்.

சாகும்போது புத்லிபாய்க்கு இருபத்தொன்பதுவயது.

புத்லி செத்துப்போனாள் என்பதை அவளை நேசித்த கிராமமக்கள் நம்பமறுத்தனர்.

'புத்லி வாழ்கிறாள்!'

'புத்லி அவதாரம்!'

'காலம் காலமாக அவள் பல உருவில் அவதாரம் எடுத்துக் கொண்டே இருப்பாள்!'

'தீயவர்களை ஒழித்துக்கட்டுவாள்!

கொடியவர்களை சுட்டுத்தள்ளுவாள்!

என்றுதான் சம்பல் பள்ளத்தாக்கு கிராமங்களில் உள்ள மக்கள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

சம்பல் பள்ளத்தாக்கு மலைகளில் அந்த நம்பிக்கை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!

* * *

மல்லா புத்லிபாயின் கதையைச் சொன்னபோது, பூலான் தன் மனக் கண்களால் புத்லிபாயை கற்பனை செய்து பார்த்தாள்.

'இத்தனை நாளாக புத்லிபாயைப் பற்றித் தெரியாமல் இருந்துவிட்டேனே' என்று நினைத்தாள்.

"பூலான்! நீதான், புத்லிபாயின் அவதாரம். நீதான், நீயேதான்!" என்றான் மல்லா.

என்னமோ தெரியவில்லை, மல்லா சொன்னதை மறுக்க வேண்டும் என்று பூலானுக்கு தோன்றவில்லை.

அடுத்து வந்த சில நாட்களில் அங்கே பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

"பூலான்தான் தனக்கு அடுத்த இடத்தில் இருப்பவள், அவளது கட்டளைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்று மல்லா சொல்லிவிட்டான்.

மலைகளில் ஏறுவது, பதுங்கி இருந்து தாக்குவது போன்ற பயிற்சிகளை பூலானுக்குக் கற்றுக் கொடுத்தான் மல்லா.

"இனிமேல் உனக்குப் பயிற்சி தேவையில்லை. தேறிவிட்டாய்!" என்றான் மல்லா.

"எல்லாம் உன்னால்தானே!"

"எனக்கு என்ன தரப்போகிறாய்?" என்று கேட்டான் மல்லா.

தன் கண்களை அகலவிரித்து மல்லாவை விழுங்கிவிடுவதுபோலப் பார்த்தாள் பூலான். சற்று நேரம் பதில் எதுவும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்படி அவள் பார்த்துக் கொண்டிருந்தது மல்லாவுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலிருந்தது. மெல்ல மெல்ல அடி எடுத்துவைத்து பூலானை நெருங்கினான்.

மல்லா நெருங்கி வருவதைப் பார்த்ததும்



பூலான்

பூலானிடம் இருந்து பெரு மூச்சொன்று அடக்க முடியாமல் பீறிட்டுக் கிளம்பியது. சீருடை தழுவியிருந்த மார்புப் பகுதி வெடித்து விடுவதுபோல விம்மித் தணிந்தது.

அவள் புஜங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டு தன்னை நோக்கி இழுத்தான் மல்லா.

பூலானின் மூச்சு சூடாகக் கிளம்பி மல்லாவின் முகத்தில் உரசிச் சென்றது.

"பூலான்!"

"ம்"

"என்ன தரப்போகிறாய் என்று கேட்டேனே!"

"ம்..ம்..."

"என்ன 'ம்'? என்ன தருவாய்? வாயைத் திறக்கமாட்டாயா?"

"ம்..." என்றதைத் தொடர்ந்து நெஞ்சுக் கூட்டை உடைத்துக்கொண்டு புறப்பட்டதைப்போல பெருமூச்சுத்தான் மறுபடிக் கிளர்ந்தது பூலானிடம் இருந்து.

"அளவாக இல்லையா, இந்தச் சட்டை?" என்று கேட்டான்.

"இ.. இருக்கு.. இருக்கிறது!" என்றாள் வார்த்தைகள் உடைந்து வந்தன.

"இருக்கிறது..." என்று விஷமமாய்ச் சிரித்தான் மல்லா. "அதென்ன இங்கு மட்டும் இறுக்கமாக.." என்று மல்லா தன் விரல்களால் தொட்டபோது நிமிர்ந்து முறைத்தாள் பூலான். ஆனால் தடுக்கவில்லை.

"வாய் பேசாதா? பசைபோட்டு ஒட்டியிருக்கிறதா பார்க்கிறேன்!" என்று சொன்னவன், குனிந்து அவள் மேல் உதட்டை தன் உதடுகளால் மூடினான்.

அவன் கையொன்று பூலானின் சீருடையின் பொத்தான்களை கடமையிலிருந்து விடுவிக்கத் தொடங்கியிருந்தது.

"ம..மல்...மல்லா!" என்று பூலான் முணுமுணுத்தது மல்லாவுக்கு மிக உற்சாகமாக இருந்தது. மிக ஊக்கமாக இருந்தது.

பூலான் தன் கைகளை விரித்து மல்லாவின் உடலைச் சுற்றிவளைத்து முதுகில் கொக்கியாய்ப்போட்டு இறுக்கினாள்.

***

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. துப்பாக்கி வேட்டுக்களால் அந்தக் கிராமம் முழுக்க அதிர்ந்தது.

கிராமம் முழுக்க வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்துவிட்டது. ஆனால் யாருமே வெளியே எட்டிப் பார்க்கவில்லை.

கொள்ளைக் கோஷ்டி புகுந்துவிட்டது என்று தெரியும்.

வெளியே தலைநீட்ட அச்சம். கேட்கும் சத்தங்களை மட்டும் காதுகளைத் தீட்டி வைத்து அறிந்து கொள்வார்கள்.

யார் வீட்டுக் கதவு தட்டப்படுமோ? யார் கோஷ்டி இன்று வந்திருக்கிறதோ, என்று பயத்தில் நெஞ்சு படபடக்க வீடுகளுக்குள் அடைந்து கிடந்தனர்.

யார் வீட்டுக் கதவும் தட்டப்படவில்லை. கிராமத்தின் மையமான பகுதியில் இருந்தது கிராம அதிகாரியின் வீடு.

அங்குதான் நேராகச் சென்றனர் கொள்ளைக் கோஷ்டியினர்.

கதவைத் தட்டினார்கள்.

கிராம அதிகாரி உள்ளேதான் இருந்தான். அவனது மனைவியும், பிள்ளைகளும் ஊரில் இல்லை.

கிராமத்துப் பெண் ஒருத்தியை கட்டாயப்படுத்தி அன்றைய இரவுத் துணையாக கொண்டுவந்து வைத்திருந்தான்.

கிராமத்தின் அழகான இளம்பெண்கள் என்றால் கிராம அதிகாரிக்கு தனிப்பிரியம்.

வாரத்தில் ஒருநாள் தன் குடும்பத்தாரை உறவினர்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுவான். அப்படி அனுப்பிவைப்பதே அன்றைய இரவுக்கு விருந்து தேடத்தான்.

கிராம அதிகாரியை எதிர்த்து நிற்க யாருக்கும் துணிச்சல் இல்லை. பொறுக்க முடியாமல் மல்லாவிடம் முறையிட்டார்கள்.

மல்லாவிடம் அந்தக் கிராமமக்களில் சிலர் வந்து முறையிடும்போது பூலானும் அங்குதான் இருந்தாள்.

தனது கிராம அதிகாரியின் முகம்தான் பூலானுக்கு அப்போது நினைவுக்கு வந்தது. தன்னையுமறியாமல் பற்களை நற நறவென்று கடித்தாள் பூலான்.

மல்லாவுக்கு சத்தம் கேட்டுவிட்டது. கடைக் கண்ணால் கவனித்தான்.

கிராம அதிகாரியின் குடும்பம் ஊரில் இல்லாதபோது தகவல் தருமாறு கூறி அவர்களை அனுப்பினான் மல்லா.

இன்றுதான் தகவல் வந்தது.

பூலானை அழைத்தான் மல்லா.

"இன்றைய வேட்டைக்கு நீதான் தளபதி!" என்றான்.

நம்பமுடியாமல் அவனைப் பார்த்தாள் பூலான். "புத்லிபாயின் அவதாரம் இன்று ஒரு மிருகத்தை வேட்டையாடப் போகிறது!" என்றான் மல்லா.

அவன் குரலில் பொய் இல்லை. தன் கண்களால் நன்றி சொன்னாள் பூலான்.

மல்லாவும் கூடவந்தான். ஆனால் பூலானிடம்தான் பொறுப்பை ஒப்படைத்திருந்தான்.

கதவு திறக்கப்படவில்லை.

கிராம அதிகாரி பயந்துபோய் பதுங்கி இருப்பான். லேசில் வரமாட்டான்.

வெறிபிடித்தவள்போல தன் துப்பாக்கியின் பின்புறத்தால் முன்புறமிருந்த ஜன்னல் கதவை குத்தி உடைத்தாள் பூலான்.

கதவு உடைந்தது. ஆனால் பலமான இரும்புக் கம்பிகள் குறுக்கே நின்றன.

"டேய்! நாயே! வேசிமகனே! வெளியே வாடா! நீயாக வந்தால் உனக்கு நல்லது. நாமாக கதவை உடைத்துவந்தால் துண்டு துண்டாக உன்னை வெட்டிப் போட்டிவிடுவோம். என்னடா.. டேய்.. வருகிறாயா..? கதவை உடைக்கவா?"

பூலான்தான் அப்படிக் கத்தினாள்.

அது காட்டுத்தனமான கத்தல்!

பூலானின் ஆவேசத்தைப் பார்த்து மல்லாவே வியப்பின் எல்லைக்குச் சென்றுவிட்டான். கொள்ளைக் கோஷ்டி ஆட்கள்கூட நம்பமாட்டாமல் பூலானைப் பார்த்தார்கள்.

பூலானின் மிரட்டலுக்குப் பயன் இருந்தது.

தனது பெரிய தொந்தியுடன், வேர்த்து விறுவிறுக்க வெலவெலத்துப்போன முகத்துடன் வந்து கதவைத் திறந்தான் கிராம அதிகாரி.

அவன் உள்ளே தாழ் விலக்கியதும் அவனே கதவைத் திறக்கும் வரைகூட பொறுமையில்லாமல் கதவை தன் காலால் எட்டி உதைத்தாள் பூலான்.

சடாரென்று கதவு முகத்தில் இடிக்க குட்டியானைபோல இருந்த கிராம அதிகாரி பின்புறமாய் தடுமாறி விழ, உள்ளே பாய்ந்த பூலான் அவன் வயிற்றில் மீது தன் கால்களில் ஒன்றை வைத்தபடி, தன் துப்பாக்கி முனையை அவன் தொண்டையின் மத்தியில் வைத்துக்கொண்டு,

"எங்கேயடா அந்தப் பெண்?" என்றாள்

பயத்தில் தன் வேட்டியை நனைத்தான் கிராம அதிகாரி. நடுங்கும் கையால் அறையொன்றைச் காட்டினான்.

"வேசிமகனே, உனக்கு கஞ்சிக்கு வழியில்லாத குடும்பங்கள் என்றால் கிள்ளுக்கீரைகள் என்று நினைப்பாடா? சொல்லுடா நாயே!"

கைகள் இரண்டையும் சேர்த்து கூப்பினான் கிராம அதிகாரி.

பூலானின் கண்கள் சிவந்தன. உடல் கோபத்தில் ஆடியது.

"நாய் மவனே! நாறிப்போ!"

டுமீல்

கிராம அதிகாரியின் தொண்டையின் மையத்தில் தோட்டா துளைபோட குருதி குபுக் என்று பாய்ந்தது.

(தொடர்ந்து வரும்)

# அப்பா இருக்கிறாளா?

உலகில் எங்குதான் வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லை. எங்கும் மலிந்த பிரச்சனைதான் அது. அப்படியிருக்கும் போது கிடைத்துள்ள நல்ல வேலையை உதறித்தள்ள யாராவது முன்வருவார்களா? அப்படி முன்வருகிறவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் என்றுதானே அர்த்தம்.



அன்று

இங்கிலாந்தில் தனது பொலிஸ் வேலையை உதறித்தள்ளியுள்ள பாப்ரீவ் என்னும் பொலிஸ்காரரின் பிரச்சனை சற்று வித்தியாசமானது.

பாப்ரீவுக்கு 47 வயது. மனைவி பெயர் ஜுனைட். 44 வயது. இவர்களுக்கு எமலி (22), ஜெனே (19) ஆகிய மகன்கள் இருக்கிறார்கள்.

இன்னும் சில வருடங்கள் சென்றால் பணியில் இருந்து பாப்ரீவுக்கு ஓய்வு கிடைத்துவிடும். ஆனால் அதுவரை அவரால் பொறுத்திருக்க முடியவில்லை.

காரணம் சுவையானது. திடீரென்று பாப்ரீவின் அங்கங்களில் மாறுதல்கள் தெரிய ஆரம்பித்தது.

சின்னவயதில் இருந்தே பாப்ரீவின் மனதில் ஒரு எண்ணம் ஒட்டிக்கொண்டு இருந்ததாம். தன் உடலில் பெண்ணின் உயிர் ஒட்டியிடுப்பதுபோன்ற எண்ணம்தான் அது.

கொஞ்சம் கொஞ்சமாக பெண் உணர்வு அவரிடம் தலைதூக்கியதால் மனைவியுடன் கூட நெருக்கமாக இருப்பதில் விருப்பம் குறையத் தொடங்கியதாம்.

பின்னர் அங்கங்களிலும் மாற்றங்கள் ஏற்படுவதுபோலத் தெரிந்தமையால் மனைவியிடம் உண்மையைச் சொன்னார் பாப்ரீவ்.

முதலில் மனைவிக்கு ஷாக்! பின்னர் சுதாகரித்துக் கொண்டு ஒரு ஐடியா கொடுத்தாராம். நானும் பிள்ளைகளும் வேலைக்குச் சென்ற பின்னர் நீங்கள் பெண்களுக்கான உடையுடன் வீட்டில் இருங்கள்" என்றாராம் மனைவி. ஆனால் எப்படியோ விஷயம் பிள்ளைகளுக்கும் தெரிந்துவிட்டது.

பிள்ளைகளுக்கு தெரியவந்தமையால் பாப்ரீவுக்கு ஒரு சௌகரியம். பகிரங்கமாகவே பெண்ணாக உடையணிந்து நடமாடுகிறார். தனது பெயரையும் 'ரொபைன்' என்று மாற்றிக் கொண்டிருக்கிறார்.

தனது நிலையை உயரதிகாரிகளுக்கு விளக்கினாராம். மருத்துவக் காரணங்களுக்காக பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக எழுதித்தரச் சொன்னார்களாம். அப்படியே செய்ததால் பென்ஷன் கிடைக்கிறது.



இன்று

இந்த முன்னாள் பொலிஸ்காரர் வீட்டில் இருந்தால் மகள்கள் பேசும் குழப்பமான வசனம் ஒன்று அவர் காதில் விழுகிறதாம். அது என்ன வசனம்?

"அப்பா வீட்டில் இருக்கிறாளா?"

# "என் உயிர் மைக்கேல்"

பொப் இசைப் புயல் மைக்கேல் ஜாக்சனுக்கு குழந்தை பிறந்தது பழைய செய்தி. மைக்கேல் ஜாக்சனைப் பற்றி லேட்டஸ்ட் செய்தி என்ன தெரியுமா? எலிசபெத் டெய்லருடன் இரகசிய சுற்றுப் பயணம் சென்றுள்ளாராம்.

மைக்கேலைவிட பத்துப் பதினைந்து வயது அதிகமானவர் நடிகை எலிசபெத் டய்லர். எலிசபெத் டெய்லரும் மைக்கேல் ஜாக்சனும் நீண்டகாலமாக நண்பர்களாகப் பழகிவருகிறார்கள்.



மனதில் கவலைகள் வாட்டும் போதெல்லாம் மைக்கேல் ஓடுவது எலிசபெத் டெய்லரைத் தேடித்தானாம். அதுபோல எலிசபெத் டெய்லரும் மனக் கவலைகளுக்கு நிவாரணம் பெற நாடுவது மைக்கேல் ஜாக்சனைத் தான்.

சிறுவன் ஒருவனுடன் தவறாக நடந்து கொண்டதாக மைக்கேல் ஜாக்சன்மீது குற்றம் சாட்டப்பட்டது. நீதிமன்றத்திலும் அவர்கள்மீது வழக்குத் தொடுக்கப் பட்டது. அப்போது சமரசம் பேசி மைக்கேலை காப்பற்றியவர் எலிசபெத் டெய்லர் தான்..

முன்னாள் ஹொலிவூட் படவுலக கனவுக் கன்னியான எலிசபெத் டெய்லர் பொப் இசைப் புயல் மைக்கேல் ஜாக்சன்மீது உயிரையே வைத்திருக்கிறார். "இதொன்றும் காதல் கிடையாது. நல்ல நட்புத்தான். ஆனால் ஆழமான நட்பு" என்று எலிசபெத் அடித்துச் சொல்கிறார். அதை நம்பத்தான் ஆளில்லை.

# நஷ்டம் 75 இலட்சம்



இங்கிலாந்து கடற்படையில் வீராங்கனையாக இருந்தவர் லெஸ்லி மோரீஸ். அவருக்கு 17 வயது. இளங்கன்று பயமறியாது என்பார்கள் அல்லவா. லெஸ்லி மோரீசும் துணிச்சலாக போராடியதால் 75 இலட்சம் ரூபாய்கள் பெற்றிருக்கிறார்.

எப்படி என்று சொல்கிறோம் கேளுங்கள்.

லெஸ்லி கடற்படையில் சேர்ந்தவுடன் பயிற்சி கொடுக்கும் அதிகாரிகள் சில்மிஷம் செய்தார்களாம். உடல் தெரியும் படியான நீச்சல் உடைகளைக் கொடுத்து நீச்சல் பயிற்சி செய்யச் சொன்னார்களாம். தொடக் கூடாத இடங்களில் தொட்டார்களாம். பொங்கி எழுந்தார் லெஸ்லி. நீதிமன்றத்தில் தொடுத்தார் வழக்கு.

லெஸ்லிக்கு பிரிட்டிஷ் இராணுவ இலாகா 75 இலட்சம் ரூபாய்கள் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

இதேபோல் ஒரு வழக்கு அமெரிக்க நீதிமன்றத்திலும் அங்குள்ள ஒரு பெண்மணியால் தொடுக்கப்பட்டுள்ளது. படைகளின் ஒழுக்கம் குறைந்து தான் வருகிறதோ?

# திடீர் கூத்து

வெளிநாடுகளில் விழாக்கள் கொண்டாடுவது சர்வசாதாரண விஷயம். மனம் போன போக்கில் கொண்டாடுவார்கள்.

சமீபத்தில் அமெரிக்காவில் சிகப்பு மூக்குத் தினம் என்று கொண்டாடினார்கள். கவர்ச்சியான உடைகளில், மூக்கின் மேல் சிகப்பு மூடிகளைப் போட்டுக்கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடினார்கள்.

வேலை வெட்டி இல்லாதவர்களின் கூத்தாக்கும் என்றுதான் நினைக்க வேண்டி இருக்கும். ஆனால் மேற்படி கொண்டாட்டத்தின் மூலம் சேர்ந்த பணம் அனைத்தையும் என்ன செய்தார்கள் தெரியுமா? அநாதை இல்லங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டனர்.





படிப்பகம்

↓ **மு**ற்காலத்தில் முனிவர்கள்தான் சடாமுடி வளர்த்தனர். தற்காலத்தில் இளைஞர்களும் இளைஞிகளுக்குப் போட்டியாக சடாமுடி வளர்க்கத் தொடங்கி விட்டனர். இவர்களை நவமுனிகள் என்று அழைக்கலாம்.

படத்தில் இருக்கிறார் பாருங்கள் ஒரங்குட்டான் குரங்கார் இவருக்கு முடிவளர்க்க ஆசை வந்துவிட்டதோ என்று நினைக்காதீர்கள். அலுப்புத்தீர, அழுக்குப்போக குளித்துவிட்டு நிற்கும்போதுதான் இப்படி முனிவர் மாதிரி காட்சியளிக்கிறார்.

இந்த ஒரங்குட்டானாரின் வேடிக்கைகளை பார்க்கவே இலண்டனில் உள்ள செசில்டன் மிருகக் காட்சிச் சாலைக்கு கூட்டம் சேருமாம்.

ஆனால் ஒரு சோகமான செய்தி, கடந்த மாதம் இந்த ஒரங்குட்டான் குரங்கார் செத்துப்போனார். குசாலாக குளிக்கும்போதுதான் மூச்சடக்கி இறந்துபோனாராம்.


குரங்கார்தானே என்று அலட்சியம் காட்டாமல் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்ணீர்விட்ட காட்சிதான் நெகிழ்ச்சியானது. நம் நாட்டில் மனிதர்கள் இறந்த செய்தியைக் கூட சர்வசாதாரணமாக இந்தக் காதால் கேட்டு அந்தக் காதால் விட்டுவிடுகிறோம். நமக்கு இது அதிசய செய்திதானே!

## கண்ணீர் அஞ்சலி



## கன்று இரண்டு

→ **பசு** கன்று போடும் என்பது தெரிந்ததுதான். ஆனால் படத்தில் உள்ள பசு இரண்டு கன்றுகள் ஈன்றுள்ளதுதான் சாதனை. சாதாரணமாக பசு கண்ணே கண்ணென்று ஒரு கன்றுதான் ஈனும். இரண்டு கன்று ஈனுவது அபூர்வம். இப்பசு தமிழ்நாட்டில் திருவண்ணாமலையைச் சேர்ந்தது. செல்வமணி என்பவருக்குச் சொந்தமானது. ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ!



## தகவல் பெட்டி

↓ **ஸ்**டைலாக போஸ் கொடுப்பவர்தான் டென்மார்க் ராணி மார்கரெட். நீண்டகாலமாக அதாவது 25 வருடகாலமாக அரியாசனத்தில் அமர்ந்து அதிகாரம் செலுத்திவரும் ராணி இவர்.

கம்பீரமான தங்கள் ராணிமீது டென்மார்க் மக்களுக்கு கொள்ளைப் பிரியம். ஆனாலும் ஒரே ஒரு குறை. பொது இடங்களில் தோன்றும்போதும் விரலிடுக்கில் புகையும் சிகரெட்டுடன் தோன்றுகிறாராம் ராணி. அங்கெல்லாம் பெண்கள் சிகரெட் புகைப்பது சர்வசாதாரண சமாச்சாரம் என்றாலும், மகாராணியார் சிகரெட்டும் கையுமாக தோன்றுவதை மக்கள் விரும்பவில்லை. முகம் சுளிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

மக்களின் கருத்தை மகாராணி மதிக்காவிட்டால் சிகரெட் புகைபோல மக்களின் புகைச்சல் கிளம்பி வளரும் என்கிறார்கள்.

## ராணி மகாராணி



## எடை என்ன தடை




← **கா**தலர் சரித்திரத்தில் சாதனை படைத்த பலரது பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட்டுள்ளன. புதிதாக இரண்டு பெயர்களையும் அந்தச் சரித்திரத்தில் பொறித்துவிடலாம். பெயர் பொறிக்க வேண்டிய புதிய காதல் ஜோடியின் பெயர்! பெர்னாட்-லில்லியாணி.

அப்படி என்ன சாதனை படைத்து விட்டார்கள்? என்றா கேட்கிறீர்கள்? சொன்னால் வாயடைத்துப் போவீர்கள்.

காதலனின் எடை 200 கிலோ. காதலியின் எடை ஆக 12 கிலோ. காதலனின் உயரம் ஆறேகால் அடி. காதலியின் உயரம் இரண்டரை அடி மட்டும்! காதலன் பெயர் பெர்னாட். காதலி பெயர் லில்லியாணி. இருவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

இந்த அதிசயக் காதலர்கள் முதலில் சந்தித்தது ஒரு பொருட்காட்சியில். அண்ணல் வளைந்து நோக்கினான், அவளும் நிமிர்ந்து நோக்கினாள். கண்கள் கலந்தன கதை பேசின. காதல் மலர்ந்தது. 2.4.97 அன்று இந்த ஜோடியின் திருமணம் பாரிசில் கோலகலமாக நடந்தது.

காதலியை தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு மோதிரம் மாற்றினார் கண்ணாளரான காதலர். தன் கண்ணாளரின் இடுப்பில் பத்திரமாக இருந்தபடி காதலி கையசைக்கும் குதூகலத்தைப் பாருங்களேன், யப்பா! உலகப் பத்திரிகைகள் அனைத்திலும் இந்த கல்யாணப் புகைப்படம் பிரசுரமாகியிருந்தது! எடுப்பான படம் தானே!



## தெருவிலே பூசை

↑ **யா**ரோ ஒரு அப்பாவியைப் போட்டு உதைக்கிறார்களே என்று அனுதாபப்படுகிறீர்களா? அடிபடுகிறவர் அப்படி ஒன்றும் அப்பாவியல்ல. அவர் ஒரு பொலிஸ்காரர்.

நடந்தது என்ன தெரியுமா? இந்தியத் தலைநகரான புதுடில்லியில் ரவுடிகள் என்று நினைத்து அப்பாவிகளை சுட்டுத் தள்ளிவிட்டனர் பொலிசார்.

சோகமும், கோபமும் கொப்பளிக்க திரண்டுவந்த உறவினர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார் இந்தப் பொலிஸ்காரர். போட்டுப் பின்னி எடுக்கிறார்கள். மக்கள் தீர்ப்பு.

www.padippakam.com

# காதோடு சொல்லுகிறோம்

சூப்பர் காந்த நடிகர் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி பெற்றிருக்கிறார். அதனை அறிந்த நடிகர் நடிகைகள் தங்களுக்கும் துப்பாக்கி லைசன்ஸ் கேட்டிருக்கிறார்கள். மீன் நடிகையின் தாய்க்குலமும் லைசன்ஸ் கேட்டிருக்கிறார். சின்னத் துப்பாக்கி வைத்துக் கொள்ளலாம் என்றார்களாம். எனக்கு சின்னத் துப்பாக்கியெல்லாம் சரிப்பட்டுவராது. பெரிய துப்பாக்கிதான் வேண்டும்' என்று அடம்பிடிக்கிறாராம் தாய்க்குலம். சரியான கோரிக்கைதான்.

நகைச்சுவை மணி அந்தப் புது நடிகையுடன் ரொம்ப ரொம்ப ராசியாகிவிட்டாராம். இப்போதெல்லாம் மணி தன் வீட்டுக்குச் செல்வதில்லையாம். நடிகையுடன் தீவிர டிஷ்கஷனில் இருக்கிறாராம். மணியின் மனைவி இயக்குநர்களுக்கு போன் எடுத்து "என் கணவர் எங்கே?" என்று தேடுகிறாராம். என்ன பதில் சொல்வது. உண்மையைச் சொன்னால் மணி கோபித்துக் கொள்ளுவாரே என்று திண்டாடுகிறார்கள் இயக்குநர்கள்.

நடிகர்கள் என்ன செய்தாலும் கண்டுகொள்ளமாட்டீர்கள். நடிகைகள் என்ன செய்தாலும் உடனே போட்டுவிடுவீர்கள். இதென்ன நியாயம்? என்று பத்திரிகையாளர்கள் மேல் பாய்கிறார் கஸ்தூர நடிகை. தெலுங்குப் படமொன்றில் திறமை அனைத்தையும் காட்டி நடித்திருக்கிறார் கஸ்தூர நடிகை. அவருடன் கூட நடித்த நடிகரோ இளைஞர். அவரால் மனதை கட்டிப்போட முடியவில்லையாம். ஆனந்தமான அந்த நடிகரின் மீது கஸ்தூர நடிகைக்கும் தற்காலிகக் காதல். அதனால் இருவரும் ஒரம் கட்டிக்கொண்டனர். செய்தி கசிந்து தெலுங்குப் பத்திரிகை ஒன்று குட்டை உடைத்துவிட்டது. அதுதான் நடிகை மான் போலத் துள்ளுகிறார்.

"எந்த நடிகனையும் நம்பவே கூடாது. எல்லாருமே காரியமாகும் வரைக்கும்தான் பின்னாடி வருவாங்க. காரியமானாப் போதும் நீ யாரோ, நான் யாரோ என்று போய்க்கிட்டே இருப்பாங்க." இப்படிப் பொருமுகிறாராம் ஹீர நடிகை. 'காதல் கோட்டை' நாயகனின் கவனம் பல திசைகளிலும் தாவிக் கொண்டிருக்கிறது. எப்போதாவதுதான் ஹீர நடிகையை சந்திக்கிறாராம். அதுதான் ஞானம் பிறந்து தத்துவம் கொட்டுகிறார் நடிகை.

# தமிழ் சினிமா உலகில் பார்த்திப ஆண்டா?

'பாரதி கண்ணம்மா' பட வெற்றியின் பின்னர் மளமளவென்று புகழின் உச்சத்தை தொட்டுவிட்டார் பார்த்திபன். 'காங்கேயம்காளை' 'கல்யாண சுந்தரம்', 'அபிமன்யு' போன்ற படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

இடையே ஏற்பட்ட சரிவில் இருந்து மீண்டுள்ள பார்த்திபனின் பேட்டி இது.

**கே: 'அபிமன்யு' படத்தை ஏன் திடீரென்று ஆரம்பித்துவிட்டீர்கள்?**

பா: என் ஒவ்வொரு பட பூஜையும் வித்தியாசமாக இருக்கும். அபிமன்யுவுக்கு பூஜையோ, அறிவிப்போ இல்லாததுதான் வித்தியாசம்.

**கே: 'பாரதி கண்ணம்மா', 'அரவிந்தன்', 'வாய்மையே வெல்லும்' என்று உங்கள் படங்கள் தமிழகமெங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதனை பார்த்திப ஆண்டு என்று சொல்லலாமா?**

பா: தீவிர முயற்சியாளனின் ஆண்டு என்று சொல்லலாம். இந்த வெற்றியைக் கண்டு நான் பயப்படுகிறேன். இதை நேரம் என்று நான் சொல்லமாட்டேன். கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் பாரதி கண்ணம்மாவுக்காக போராடி இருக்கிறோம். இது நியாயமான வெற்றி. ஒரு மரத்தை 99 முறை வெட்டிவிட்டு 100வது முறையாக வெட்டும்போது கீழே சாய்வதை நேரம் என்று சொல்வது எனக்கு உடன்பாடானதல்ல.

**கே: சீமைப்பசுவைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்று உங்கள் வாசகம் நடிகையரைப் புண்படுத்தியதால் 'காங்கேயம் காளை'யில் நடிக்க மறுத்தார்களாமே?**

பா: காங்கேயம் காளைக்கு ஜோடி எது என்று கேட்டபோது சீமைப்பசு என்று சொன்னார்கள். அதனால்தான் அந்த வார்த்தையை பயன்படுத்தினேன். இது தவறான அர்த்தத்தைக் கற்பிக்கும் என்று நான் எண்ணவில்லை.

**கே: நீண்ட நாட்களுக்கு பின்னர் ஒரு இயக்குநர் நட்சத்திர அந்தஸ்துள்ள கதாநாயகனாக உருவாகியிருக்கிறீர்கள். இதனை தக்கவைக்க என்ன செய்யப் போகிறீர்கள்?**

பா: ஆரம்பத்தில் இருந்தே நான் திரைக்கதையைத்தான் நம்புகிறேன். 'அபிமன்யு' முதல்நாள் படப்பிடிப்பில் என் பொலிஸ் அதிகாரி தோரணையைப் பார்த்து பிரபு மிகவும் பாராட்டினார். வேடப் பொருத்தம் இல்லாததால் 'சரிகமபதநி' தோல்வி கண்டது. இனி என் ஒவ்வொரு முயற்சியிலும் கவனமாக இருப்பேன். 'உள்ளே வெளியே' பொலிஸ் அதிகாரிக்கு நேர் எதிரான ஒரு பொலிஸ் அதிகாரி 'அபிமன்யு'வில் அவதாரமெடுக்கப் போகிறான்.



முரளி-சுபாஸ்ரீ
படம்:-கண்டக்டர் மாப்பிள்ளை

# 'குரு பார்வை

பாரதிராஜாவின் சிஷ்யர்களில் ... மனோஜ்குமார். பாரதிராஜாவுக்கு மை... முறையானவர்.

'மறவன்', 'சாமுண்டி' உட்பட பல பட... இயக்கியவர் மனோஜ்குமார். கடந்த இ... ஆண்டுகளாக படம் எதனையும் இயக்... இருந்தார். இப்போது மீண்டும் களம் ... கிறார்.

பிரகாஷ்ராஜ்-குஷ்பு ஜோடியாக ... 'குரு பார்வை' என்னும் பெயரில் படம் த... கிறது. சிந்து, அஸ்வினி, லதா, மணிவண்... வடிவேலு, தலைவாசல் விஜய் ஆகியோ... நடிக்கின்றனர்.

இசை: தேவா. வசனம்: கலைமணி. சித்... புத்தாண்டு தினத்தன்று படப்பிடிப்பு ... மாகிறது. தயாரிப்பு: பாரதிராஜா.

# ராசியான நேர

பாண்டியராஜனுக்கு இது ராசியான ... ஏற்கனவே குஷ்புவுடன் ஜோடி சேர்... இப்போது ரோஜாவுடன் ஜோடி சேரு... 'சபாஷ் பாண்டியா' படத்தில் சேருகிறது ... ஜோடி.

கே.ஆர் இயக்கும் 'சபாஷ் பாண்டியா... தில் முக்கிய வேடத்தில் நடிப்பவர் ... வண்ணன். தயாரிப்பு பஞ்சு அருணா...

# இளம் சண்மு...

சமீபத்தில் அமெரிக்கா சென்று ... யிருக்கிறார் கமல். ஹிந்தியில் தயாராகிறத... 'அவ்வை சண்முகி', தமிழ் சண்முகியை... ஹிந்தி சண்முகி இளமையாகத் தே... போகிறாராம். அதற்காகத்தான் மேக்... சாதனங்களுக்காக அமெரிக்கா ... வந்திருக்கிறார் கமல்.

# மற்றொரு ஆட...

'காதல் கோட்டை' படத்தில் 'வெள்ளா... பாடலுக்கு ஆடியவர் ரா... வாழ்க படத்திலும் ... அப்பாடல்கள் ... நாயகன ... வெள்... ராணி...

# சினி விசிட்



தரங்கிணி
படம்:-மல்லிகைக்கு மருதாணி



பரத்ராஜ்-வினிதா
படம்:-விடு வெள்ளி

# இந்தியில் வினிதா

தமிழில் போதிய வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் வினிதா அசரமாட்டார். சகல மொழிப்படங்களிலும் வாய்ப்புத்தேடும் வல்லமை உள்ளவர் அவர். இந்தியில் நாலு படங்களில் நடித்து வருகிறார். கன்னடத்தில் இரண்டு படங்களில் நடிக்கிறார். மலையாளத்திலும் நடிக்க அழைக்கிறார்களாம். பிஸியாக இருப்பதால் மறுத்திருக்கிறாராம்.

"ரசிகர்களின் வயசை 'டச்' செய்ய கவர்ச்சி, மனசை 'டச்' செய்ய நடிப்பு அதுதான் எனது முன்னேற்றத்தின் இரகசியம்" என்கிறார் வினிதா.

# ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் செய்றான்

'இது எப்படியிருக்கு?', 'நான் ஒரு தடவை சொன்னா அது நூறு தடவை சொன்னமாதிரி' போன்ற வசனங்கள் ரஜினி பேசிப் பிரபலமானவை.

சித்திரைப் புத்தாண்டுக்கு வரும் படம் அருணாச்சலம்! அதில் 'ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் செய்றான்' என்ற வசனத்தை படத்தில் ஐந்து தடவை பேசுகிறாராம் ரஜினி. அதனால் ரஜினி ரசிகர்கள் மத்தியில் அந்த வசனமும் பிரபலமாகி விடும். கைவிரலை சொடக்கி ஒரு விரலை தலைக்கு மேல் உயர்த்தி 'அந்த ஆண்டவன் சொல்றான்' என்றுவிட்டு பின்னர் கைவிரலை விசுக்கென்று தன் நெஞ்சுக்கு நேராக காண்பித்து 'இந்த அருணாச்சலம் செய்றான்' என்று பேசுவாராம் ரஜினி.

சித்திரைப் புத்தாண்டுப் படங்களில் பிரமாதமாக எதிர்பார்க்கப்படும் படம் அருணாச்சலம். ரஜினி படம் வருகிறது என்றவுடன் தங்கள் படங்கள் திரையிடுவதை ஒத்திப்போட்டிருக்கிறார்கள் சில தயாரிப்பாளர்கள்.

# இந்து விழுந்தார்

'சன்' தொலைக்காட்சி அலைவரிசையில் 'சூப்பர் ஹிட் ஷோ' நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் இந்து. அதனால் நம் நாட்டு நேயர்களுக்கும் அறிமுகமானவர்.

'பாரதி கண்ணம்மா' படத்தில் பார்த்திபனின் தங்கையாக இந்து சிறப்பாக நடித்திருந்தார். பல படங்களில் நடித்துள்ள போதும் 'பாரதி கண்ணம்மா' படம்தான் திருப்புமுனை.

பாரதிராஜாவின் படம் ஒன்றில் எப்படியும் நடித்துவிடும் ஆசையில் இருக்கிறார் இந்து. சமீபத்தில் சென்னையில் பாரதிராஜாவின் 'ஞாபக நதிக்கரையில்' நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. விழாவுக்கு வந்த இந்து சடாரென்று பாரதிராஜாவின் காலில் விழுந்து வணங்கினாராம். சான்ஸ் கிடைக்குமா?

# தங்கை அஞ்சு

'அருணாச்சலம்' படத்தில் ரஜினியின் தங்கையாக நடித்திருக்கிறார் அஞ்சு அரவிந்த். அதனைத் தொடர்ந்து 'பொற்காலம்' படத்தில் முரளியின் தங்கையாக நடிக்கிறார்.

இப்படியே தங்கை நடிகையாக மாறிவிட்டால் ஒரு அழகான கதாநாயகியை தமிழ்ப்பட உலகம் இழந்து விடாதா? "இல்லை, ரஜினியின் தங்கைவேடம் என்பதால் ஒப்புக்கொண்டேன். அதுபோல பொற்காலம் படத்திலும் நல்ல பாத்திரம். மேற்கொண்டு இப்படி நடிக்கமாட்டேன்" என்கிறார் அஞ்சு அரவிந்த்.

# முகப்பில்

பார்த்திபன்
படம்:-பாரதி கண்ணம்மா

மீனா
படம்:-பாசமுள்ள பாண்டியரே





படிப்பகம்

www.padippakam.com

## 'ருக்கு ருக்கு ருக்கம்மா'

முதன்முதலாக வேட்டியை உருவி வீசிவிட்டு நடிக்கிறார் ராஜ்கிரண். அதாவது நவீன உடைகள் அணிந்து நடிக்கிறார். 'பாசமுள்ள பாண்டியரே' படத்தில்தான் ராஜ்கிரண் வித்தியாசமாக தோன்றுகிறார்.

ராஜ்கிரண் ஜோடியாக மீனா, ரோஜா ஆகியோர் நடிக்கின்றனர். பாத்திமாபாபு, நம்பியார், செந்தில், வடிவேலு, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

தேவா இசையில் வைரமுத்து, வாலி, பழனிபாரதி ஆகியோர் பாடல்களை எழுதியுள்ளனர்.

"ருக்கு ருக்கு ருக்கம்மா, கொஞ்சம் கொஞ்சம் காட்டம்மா, நெஞ்சுக்குள்ளே பச்சை குத்தி வைச்ச பையன் யாரம்மா?... என்று தொடரும் பாடலை வைரமுத்து எழுதியிருக்கிறார்.

## காதல் வீரன்

'கல்நாயக்' படத்தை தமிழில் 'ஹீரோ' என்ற பெயரில் தயாரித்தனர். சஞ்சய்தத் நடித்த பாத்திரத்தில் தமிழில் நடித்தவர் வினோத்குமார். சுருக்கமாக வினோத். மகேஸ்வரியும் வினோத்தும் இணைந்து நடித்து தெலுங்கில் ஹிட்டான படம் தமிழுக்கு வருகிறது. 'காதல் வீரன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். ரகுவரன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். டிஸ்கோ சாந்தி, கன்னட பிரபாகர், முரளி மோகன் ஆகியோரும் நடிக்கின்றனர். சண்டைகள், ஆடல் பாடல்கள் நிறைந்த படம். இயக்கம் பரத்.

## தொடர் ஆராய்ச்சி

தொப்புளை வைத்து என்னென்ன செய்ய முடியும் ஆராய்ச்சி தொடர்கிறது. சமீபத்தில் வெளியான 'சக்தி' படத்தில் பாதரசம் வழிந்து யுவராணியின் தொப்புள்வரை உருண்டது. தற்போது தயாரிப்பில் உள்ள 'நாட்டுப்புற நாயகன்' படத்தில் சுவாதியின் தொப்புளில் பூக்களை அடுக்கி சில்மிஷம் செய்கிறாராம் செல்வா.

தொப்புள் ஆராய்ச்சி ஹிந்திப் படங்களையும் விட்டு வைக்கவில்லை. அங்கும் விதவிதமான சிந்தனைகளுடன் காட்சிகளை எடுக்கிறார்களாம். அடேங்கப்பா... என்னே ஒரு முன்னேற்றம்!

## ரஜினி படத்தின் கதை

ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தின் கதை வெளியே கசிந்திருக்கிறது. தமிழகப் பத்திரிகை ஒன்று மோப்பம் பிடித்து வெளியிட்டுள்ள கதைச் சுருக்கம் இது.

அருணாச்சலமாகவும், அவர் அப்பா வேதாச்சலமாகவும் ரஜினி இரட்டை வேடத்தில் நடிக்கிறார். அருணாச்சலத்தின் அம்மாவாக அம்பிகா நடிக்கிறார்.

பெரும் செல்வந்தரான அப்பா ரஜினி, வித்தியாசமான உயில் ஒன்றை எழுதிவைக்கிறார். 3 ஆயிரத்து 30 கோடி ரூபா சொத்து அவரிடம் இருக்கிறது. அந்தப் பணத்தில் 30 கோடி ரூபாயை முப்பது நாளில் செலவழிக்கவேண்டும். அப்படி செலவழித்தால்தான் மீதமுள்ள சொத்து அருணாச்சலத்தைச் சேரும் என்பது நிபந்தனை.

அருணாச்சலம் 30 கோடி ரூபாவை எப்படிச் செலவழிக்கிறார் என்பதுதான் கதை.

செந்திலை கதாநாயகனாகப் போட்டு படம் எடுக்கிறார். படம் தோல்வி அடையும் என்று பார்த்தால், பயங்கரமான வசூல் சேர்கிறது. எப்படிச் செலவு செய்தாலும் போட்ட பணம் வட்டியும் குட்டியுமாக திரும்பி வருகிறது.

இறுதியில் அரசியல் கட்சி ஆரம்பிக்கிறார். பணம் கரைகிறது. 3 ஆயிரம் கோடி கிடைக்கிறது. அத்தனை பணத்தையும் மக்களின் சொத்தாக எழுதிவைத்துவிட்டு சவுந்தர்யாவை மணந்து கொள்கிறார்.

### கிராபிக்ஸ் வித்தை

படத்தில் ரஜினிகாந்த் அணிந்திருக்கும் உருத்ராட்ச மாலையில் மகிமை இருப்பதுபோல தந்திரக் காட்சிகளும் இருக்கிறதாம். அதற்காக கம்பியூட்டர் கிராபிக்ஸ் வித்தை செய்துள்ளார்கள்.

அருணாச்சலம் குழந்தையாக இருக்கும்போது தந்தையுடன் கோவிலுக்குச் செல்கிறார். அங்கு சிவபெருமானின் கழுத்தில் உள்ள உருத்ராட்ச மாலை அருணாச்சலத்தின் கழுத்தில் விழுகிறதாம். கதையை அப்படிப் போட்டு கம்பியூட்டர் ஜாலம் காட்டியிருக்கிறார்களாம்.

## மினி சினி

* படத்திற்குப் படம் வித்தியாசமான தோற்றங்களில் நடித்து வரும் கமல், தனது அடுத்த படமான 'அமரகாவியம்' படத்திற்காக தாடி வளர்த்து வருகிறார். இந்தப் படத்தில் கமல் முஸ்லிம் வேடத்தில் நடிக்கவிருப்பதாகச் சொல்கிறார்கள்.

* பாண்டியராஜன் நடிக்கும் 'கபடி' படத்தில் மும்பை நடிகை ஒருவர் நடிப்பதாக முதலில் சொல்லப்பட்டது. இப்போது மும்பை இறக்குமதியை விட்டு விட்டு ரவிகாவை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளனர்.

* 'அரவிந்தன்' படத்தை இயக்கிய நாகராஜ், அடுத்து இயக்கும் படத்தில் தெலுங்கு நடிகர் சக்கரவர்த்தி கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இன்னொரு நாயகனாக முன்னணி தமிழ் நடிகர் ஒருவரும் நடிக்கிறார்.

* 'ஆசை' படத்தில் அறிமுகமான சுவலட்சுமி, தமிழில் ஐந்து புதிய படங்களில் நடித்து வருகிறார். அண்மையில் இவர் தெலுங்குப்படமொன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

* 'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக நடித்து வரும் நிவேதிதா, முதலில் 'இந்தியன்' படத்தில் ஊர்மிளா வேடத்தில் நடிக்கத் தேர்வு செய்யப்பட்டு பின்னர் நீக்கப்பட்டவர்.

* 'சுந்தரபுருஷன்' படத்திற்குப் பின் லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிக்க 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' என்று ஒரு படம் தொடங்கப்பட்டது. ஆனால் பல மாதங்களாகியும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் இன்னமும் ஆரம்பமாகவில்லை.

* விஜயசாந்தி நடித்த வேற்றுமொழிப்படங்கள் தமிழில் மொழி மாற்றப்படுவது வழக்கம். தற்போது இவர் தெலுங்கில் நடித்த படமொன்று 'அடிமைப் பெண்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் ராம்கி கதாநாயகனாக நடித்துள்ளார்.

* செல்வா நடிக்கும் 'நாட்டுப்புற நாயகன்' ராமநாராயணன் இயக்கும் 98வது படம். 99வதாக ஒரு தெலுங்குப்படத்தை இயக்கவுள்ளார். தனது 100வது படத்தை சொந்தமாகத் தயாரிக்கவுள்ள ராமநாராயணன் இதில் விஜயகாந்தை நடிக்க வைக்க எண்ணியுள்ளார்.

* மலையாளத்தில் மம்முட்டி நடித்த 'ஹிட்லர்' படத்தை உருவாக்கியவர்கள் சித்திக்-லால் இரட்டையர்கள். அடுத்து இவர்கள் இரட்டையர்களைப் பற்றிய படமொன்றை உருவாக்கவுள்ளார்கள்.

* ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தின் தெலுங்கு உரிமையை வாங்கியிருப்பவர் யார் தெரியுமா? 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம்.

## நாயகன்

...பிஞ்சு வெள்ளரிக்கா...'
...காலமெல்லாம் காதல்
...டியிருக்கிறார் ராம்.
...பலமானதால் கதா
... விட்டார் ராம்.
...கா பாடலுக்கு ஆடிய
...இப்போது படுபிஸி.
...ண்டிக் கோட்டையிலே'
...நாயகனாக ஒப்பந்த
...ர் ராம். அவருக்கு
...நடிக்கிறார் சோனியா.
...டாப்பா...' என்று
... டப்பாங்குத்துப்
...டத்தில் உண்டு.
...லில் பாடல்களுக்கு
...ரபலமாகி ஹீரோ
...பிரபுதேவா. அவரது
...கதாநாயகனாக மாறி
...ர் ராம்.

## எம்.ஜி.ஆர். விருது

சத்யராஜுக்கு தமிழக அரசு எம்.ஜி.ஆர் விருது வழங்கியுள்ளது. எம்.ஜி.ஆர் ரசிகரான சத்யராஜுக்கு பரம சந்தோசம்.

"ரொம்ப சந்தோசமாக இருக்கிறது. சினிமாவுக்கு வந்தபின்னர் எவ்வளவோ விருதுகள் வாங்கிவிட்டேன். அப்போது கிடைத்த சந்தோசங்களைவிட இப்போது பல மடங்கு சந்தோசம். தலைவர் பெயரில் தரப்படும் விருதை நான் மதிக்கும் முதல்வர் கையால் வாங்குவது பெருமையாக இருக்கிறது" என்கிறார் சத்யராஜ்.

எம்.ஜி.ஆர். போல பல படங்களில் பாடல் காட்சிகளில் நடித்திருக்கிறார் சத்யராஜ். அதனால் பொருத்தமானவருக்கு கிடைத்த பொருத்தமான விருதுதான்.




நெப்போலியன்-குஷ்பு
படம்:-எட்டுப்பட்டி ராசா



சுவலட்சுமி
படம்:-வாணிமகால்

## முதலிரவில் நிபந்தனை

அவனுக்குப் பெயர் கொருக்கும்பேட்டை கபாலி. அவனது தங்கையின் பெயர் வாசுகி. பாலு என்ற கட்டழகன்மீது வாசுகிக்கு காதல். கபாலியும் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினான். திருமணம் ஜாம் ஜாம் என்று நடக்கிறது.

முதலிரவில் வாசுகியை ஏக்கத்தோடு நெருங்குகிறான் பாலு. வாசுகியை கட்டியணைக்கிறான்... அப்போது தன் கைகளை குறுக்கே நீட்டி தடுக்கிறாள் வாசுகி. "என்னைத் தொட வேண்டுமானால் ஒரு கண்டிஷன்" என்று நிபந்தனை போடுகிறாள் வாசுகி. சிவபூசைக்குள் கரடியாக வாசுகிபோட்ட நிபந்தனை என்ன? 'வாசுகி' படம் வந்தால்தான் தெரியும்.

கபாலியாக மணிவண்ணன், பாலுவாக ராஜேந்திர பிரசாத், வாசுகியாக ஊர்வசி நடித்தனர். கதை, வசனம், இயக்கம், கஸ்தூரிராஜா. இசை: இளையராஜா.

## கடைசிப் பாடல்

'உசிலம்பட்டி பெண்குட்டி' பாடல் மூலம் பிரபலமானவர் சாகுல் ஹமீத். ஏ.ஆர். ரகுமான் அறிமுகம் செய்து வேகமாக வளர்ந்தார் சாகுல். விபத்து அவரைப் பிரித்துவிட்டது.

மரணமாக முன்னர் 'வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு' படத்திற்காக சாகுல் ஹமீத் ஒரு பாடல் பாடியிருந்தார். "பொன்னம்மா பொன்னம்மா போகுது உசிரம்மா.." என்று தொடங்கும் பாடலைத் தான் பாடினார் சாகுல் ஹமீத். எத்தனை சோகம் இது!

## கார்த்திக் ஜோடி ஹீரா

கார்த்திக் ஜோடியாக ஹீரா நடிக்கப்போகும் படம் 'சுந்தர பாண்டியன்". கார்த்திக்கிற்கு இதில் இரட்டை வேடம். சுந்தர், பாண்டியன் என்று இரண்டு பாத்திரங்கள்.

சின்னக் கண்ணம்மா', 'கட்டப் பஞ்சாயத்து' படங்களை இயக்கிய ஆர்.ரகு தயாரித்து இயக்கும் படம் இது. மணிவண்ணன், வடிவேலு, மலேசியா வாசுதேவன், காந்திமதி, சுமித்ரா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## மலையாளத்தில் நந்தினி

'காலமெல்லாம் காதல் வாழ்க' படம் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. கதாநாயகியாக நடித்திருப்பவர் கவுசல்யா. சொந்தப் பெயர் நந்தினி. மலையாளப் படமான 'ஏப்ரல் 19'ல் நந்தினி என்ற பெயரிலேயே நடித்திருந்தார்.

'நேருக்கு நேர்' உட்பட பல புதிய படவாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. சந்தோசத்தில் இருக்கிறார் நந்தினி..... அல்ல..கவுசல்யா.

## சத்யராஜ்-சுருதி

சத்யராஜ் இரண்டு வேடங்களில் நடிக்கும் படம் 'பெரிய மனுசன்'.

பெரிய மனுசனாக வில்லத்தனமாக தோன்றும் சத்யராஜுக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் அம்பிகா. இன்னொருவர் கோவை சரளா. இது பழைய செய்தி.

புதிய செய்தி யாதெனில் இளைஞராக நடிக்கும் சத்யராஜ் ஜோடியாக 'கல்கி' பட நாயகி சுருதி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

சின்னப் பெண் போல காட்சியளிக்கும் சுருதி சத்யராஜுக்கு ஈடு கொடுப்பரா தெரியவில்லை.

## அர்ஜுன் விளக்கம்

'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுனின் ஜோடியாக முதலில் நடிக்க இருந்தவர் விஜயசாந்தி. இப்போது அவர் நடிக்க இருந்த பாத்திரத்தில் தபு நடிக்கிறார். விஜயசாந்தி நடிக்க மறுத்தது ஏன்? என்று அர்ஜுனிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்; "எனக்கும் விஜயசாந்திக்கும் எந்தப் பிரச்சினையும் கிடையாது. தயாரிப்பாளர்களுக்கும் அவருக்கும் தான் மனக்கசப்பு. "கதாநாயகி விஷயத்தில் நீங்களே முடிவு செய்யுங்கள்" என்று தயாரிப்பாளரிடம் கூறி விட்டேன். இப்போது தபுவும், நிவேதிதாவும் என் ஜோடிகளாக நடிக்கின்றனர்."

## "என்ன படம் பார்த்தீர்கள்?"

படம் பார்க்க நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். உங்களுக்கு முன்னே பின்னே தெரிந்த ஆணோ, பெண்ணோ "என்ன படம்?" என்று கேட்டால் உடனே பதில் சொல்வீர்களா மாட்டீர்களா? இதென்ன கேள்வி, அதில் என்ன இரகசியம் என்கிறீர்களா?

படத்தின் பெயரைச் சொன்னால் தர்ம அடி வாங்கக்கூடிய பெயர்கள் எல்லாம் இப்போது சூட்டப்படுகின்றன.

நாகார்ஜுன்-தபு ஜோடியாக நடித்து தெலுங்கில் வெற்றி பெற்ற படம் தமிழில் மொழிமாற்றப்படுகிறது. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்; உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்! இப்போது சொல்லுங்கள் உடனே சொல்லக்கூடிய பெயர்தானா?


படிப்பகம்

www.padippakam.com

# தூக்கமுன் கண்களைத் தழுவட்டுமே!

ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு தூங்கி எழாவிட்டால் அன்றையப் பொழுது அந்த நபருக்கு ஒவ்வாத பொழுதாகிவிடும், எந்தச் செயலிலும் ஈடுபட முடியாது; உடல் சுறுசுறுப்பாக இயங்காது; உள்ளமும் எப்போதும் பதற்றமாகவே இருக்கும்; எவரைப் பார்த்தாலும் எரிந்து விழவேண்டும் போலிருக்கும்.

ஹாய்! தூங்கு மூஞ்சியாகவும் இருக்கக்கூடாது: தூக்கம் இல்லாமலும் இருக்கக் கூடாது! இதைப் படியுங்கள்... உதவும்!



நாம் கர்ப்பத்திலேயே தூங்கிப் பழக்கப் பட்டவர்கள். பூமியில் பிறந்த பின்னரும் அதே பழக்கத்தில் அதிக நேரத்தைத் தூங்கியே கழிக்கிறோம். நாளாக ஆக தூங்கும் காலம் குறைய ஆரம்பிக்கும். ஒரு சராசரி மனிதன் தினமும் 6 மணி மதல் 7 மணிவரையாவது அயர்ந்து தூங்க வேண்டும்.

பொதுவாக இரவு நேரமே தூங்குவதற்கு ஏற்ற காலம். வெப்ப வலய நாடுகளில் வாழும் நமக்கு 12 மணி நேரம் பகலும் 12 மணிநேரம் இரவும் என்ற நிலை இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

சூரியன் மறைந்து 4 மணி நேரத்தின் பின் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

அதே போல் உதயத்துக்குச் சற்று முன்னதாகவே எழுந்திருக்க வேண்டும். இந்த முறையில் 6 அல்லது 7 மணி நேரமாவது நிம்மதியாகத் தூங்குவதற்கு வாய்ப்புக்கிடைத்தவர்கள் உண்மையில் பாக்கியவான்களே!

## தூக்கத்தின் வில்லன்கள்

இரவு உணவு போதுமான அளவு உட்கொள்ளாவிட்டாலும், அளவுக்கு அதிகமாக உட்கொண்டுவிட்டாலும்கூட தூக்கம் கெட்டுவிடும்; அல்லது அடிக்கடி எழுந்திருக்க நேரிடும். ஒரு தடவை கண்விழித்தால் மீண்டும் தூக்கம் வர மறுத்துவிடும்.

தாம்பத்திய உறவில் தம்பதி ஒருவருக்கொருவர் அனுசரித்தும், புரிந்துகொண்டும் செயற்படவேண்டும். இல்லாவிட்டால் படுக்கையறையில், இருவரில் ஒருவருக்கு தூக்கம் கெட்டுப்போகும்.

பெரும்பாலும் கவலையே தூக்கத்துக்குச் சத்துருவாகவிருக்கிறது. குடும்பத்தில் பல காரணங்களால் கவலைகள் மனத்தைப் பிழிந்தெடுக்கும். அவற்றையிட்டு எண்ணிக் கொண்டிருக்கும் போதே தூக்கம் விடை பெற்றுச் சென்றுவிடும்.

மன அழுத்தமும் தூக்கம் கெடுவதற்கு மற்றுமொரு காரணி. அடிக்கடி பதற்றமடைவதனாலும் தூக்கம் கெடுகிறது. பிரச்சனை எதுவானாலும் அவ்வப்போது அவற்றைத் தீர்த்து வைப்பதற்கேற்ற வழிமுறைகளைத் தேடிக் கொள்ளவேண்டும். தொடர்ந்து அவற்றைச் சிந்திக்கத் தொடங்கினால், அச்சிந்தனை ஓட்டத்தைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டு மனம் பாதிக்கப் பட்டுவிடும்.

மனத்தில் கவலைகள் உறைய உறைய மனத்தால் அப்பழுவைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இதனால் சமநோக்குச் சீர்குலைந்து தடுமாற்றமே தோன்றும். முடிவு மன நோயாளர் விடுதிதான்.

## தூக்கத்துக்கு யோசனைகள்

தூக்கத்தைக் கெடுக்கும் காரணங்களை அறிந்து கொண்டோம். இனி தூக்கம் சுலபமாக வருவதற்கான வழி முறைகளைச் சற்றுக் கவனிப்போம்.

தூக்கம் வரவில்லை என்று மருத்துவர்களிடம் சென்றால் அவர்கள் தூக்க மாத்திரைகளையே சிபார்சு செய்வார்கள். எல்லோருக்கும் தூக்க மாத்திரைகள் ஒத்துப்போவதில்லை. இதனால் பக்க விளைவுகள்தான் அதிகரிக்கும்.

மனத்தை அலையவிடாமல் ஒருநிலைப் படுத்துவதனால் மன அழுத்தத்தையும் பதற்றத்தையும் போக்கலாம். இதற்கு யோகாசனப் பயிற்சிகளைச் செய்யுமாறு கூறுவார்கள். யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபடுவது எல்லோருக்கும் சாத்தியமில்லை என்பதனால் தினசரி சில நிமிடங்களாவது தியானத்தில் ஈடுபடலாம்.

தியானம்– சிலகாலம் வரை இந்துக்களின் தனி உடமை என்றிருந்த நம்பிக்கை இப்போது அற்றுப் போய்விட்டது. 'தியானம் என்பது எல்லா மதத்தவருக்கும், எல்லா இனத்தவருக்கும் பொதுவான பரிகாரமாகிவிட்டது. எல்லா மத வழிபாடுகளிலும் கடவுளை நினைத்துப் பிரார்த்திக்கும் வழக்கம் உண்டல்லவா? கடவுள்கள் எவரையுமே நினைக்காமலும் நமது மனத்தை ஏதாவது ஒரு முறையில் அடக்கி சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்துவதே தியானம்.

## வெந்நீர்க் குளிப்பு

இரவு படுக்கைக்குப் போவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக ஒரு தொட்டியில் வெந்நீரை நிரப்பி, அதில் உங்களுக்குப் பிடித்தமான வாசனைத்திரவியத்தில் 6 சொட்டுக்களை விடுங்கள். முடியுமானால் நல்லெண்ணெய் இரண்டு தேக்கரண்டியும் நீரில்விட்டுக்கலந்து கொள்ளுங்கள். இத்தொட்டியினுள் ஏறி அமர்ந்து கொள்ளுங்கள். கழுத்துவரை நீரில் அமிழ்ந்த வண்ணம் 15 நிமிடங்கள் இருந்து விட்டு உடலை நன்றாகத் துடைத்த பின்னர் பசும்பால் மட்டும் அருந்திய பின் தூங்கச் செல்லுங்கள்.

படுக்கைக்குச் செல்லுமுன்னர் தேநீர், கோப்பி அருந்துவது சாதாரணமாகவே தூக்கத்தைக் கெடுத்துவிடும்.

பொன்னாவரை என்ற செடியை– இலை, பூக்களுடன் பிடுங்கி நிழலில் சில நாட்கள் காயவைத்து முழுமையாகவோ பொடியாகவோ சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள், தேனீர், காப்பி போன்று வெந்நீரில் ஓரளவு போட்டால் தேயிலைச் சாயம் போல் ஊறும். இதனை வடிகட்டி சீனி சேர்த்து உட்கொண்டால் நன்மைகள் பல உண்டு.

## பெண்கள் கவனிக்க...!

பெண்கள் தூங்கும்போது குப்புறப் படுத்தலாகாது, இவ்வாறு படுப்பதனால் வயிறும் மார்பகங்களும் அளவுக்கு மீறிப் பருத்துவிட வாய்ப்பேற்படும். உடம்பின் வலது புறம் படுக்கையில் படும்படி படுத்துறங்குவதே பெண்களுக்கு நல்லது.

# 'டே பை டே'

## வாழ்க்கைப் பயணம் 'டே பை டே'

வாழ்க்கையை எல்லாப் பெண்களுமே சுமையாகத்தான் நினைக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை என்பது சுமை அல்ல; சுகம்!

இந்த ஜென்மத்தை விட்டு மறு ஜென்மத்தில் அதை நீங்கள் தவமிருந்தாலும் சந்திக்கப்போவதில்லை.

இன்று போனால் கூட இந்த நாள், நாளை உங்களுக்குக் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லையே!

ஏதோ மலை வந்து மடியில் விழுந்தது போல் இத்தனை கவலை உங்களுக்கு எதற்கு? மற்றவர்களைச் சற்றே உற்றுப் பாருங்கள். உங்களைவிட இன்னல்கள் ஏராளம் இருக்கும்.

"இன்றைக்குச் செத்தால் நாளைக்குப் பால்!" இதிலே சோகத்திற்கு என்ன இருக்கிறது?

உங்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனையை மீண்டும், மீண்டும் நினைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் இவ்வளவு டென்ஷனாக இருப்பதனால்...

இயற்கை அழகை இரசிக்கத் தெரியவில்லை உங்களுக்கு.

மழலையின் குறும்புகள் கூட உங்களுக்கு எரிச்சலாகத்தான் தெரிகிறது.

உழைப்பின் வியர்வையில் சலிப்புத்தான் மிஞ்சுகின்றது.

கணவரோடுகூட உங்களுக்கு ஆத்மார்த்த நேசத்தில் தேய்மானம் தெரிகின்றது.

இது ஏன், எதற்காக?

உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள். சின்னச் சின்ன முயற்சிகள் செய்தால் போதும்.

உங்கள் வாழ்க்கைக்குச் சிறகு முளைக்கும். வசந்தம் வந்து பூவாய்ப் பூக்கும். சந்தோஷத் தென்றல் சாரலாய் வீசும்.

உங்கள் கடந்த காலம் எப்படி வேண்டுமானலும் இருக்கட்டும். அதனை மறந்து விடுங்கள்.

மனதிற்குப் பிடித்த சந்தோஷமான விஷயங்களை அடிக்கடி நினையுங்கள். பேசுங்கள். (கொஞ்சமாவது சிரியுங்கள்)

மூக்கின் மீது கோபம், கவலை, சிடுசிடுப்பு, டென்ஷன் ஆகியவைகளைத் தூக்கித் தூர எறியுங்கள். இவைதான் உங்கள் வாழ்க்கையின் விரோதிகள்!



சொல்லொணாத் துன்பம் என்றால் பாரத்தைக் கடவுள் மீது தூக்கிப் போடுங்கள். உங்கள் சுமை குறையும்.

"நான் சந்தோஷமாக இருப்பேன்! பிறரையும் சந்தோஷமாக வைத்திருப்பேன்!" என்று தாரக மந்திரத்தை நெஞ்சில் பதியுங்கள்.

நன்றாக உழையுங்கள். உழைப்பதற்காகத்தான் கடவுள் கைகளைத் தந்திருக்கிறார்.

இனிமையானவற்றைக் கேளுங்கள். உற்சாகம் பொங்கும் பாடல்களைக் கேளுங்கள். (முடிந்தால் அவ்வப்போது இராகமாகப் பாடுங்கள்)

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் இரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மன உறுதியும், தன்னம்பிக்கையும் இருந்தால் போதும் எதையும் வெல்லலாம்.

வாழ்க்கை முடிவதற்குள்ளாக நிச்சயம் வெற்றி பெறலாம்.

இன்றையப் பொழுதில் இருந்து நீங்கள் புதிய மனுஷியாக உணருங்கள்.

நீங்கள் புரட்சி படைக்க வேண்டாம். புத்துணர்வு பெற்றால் போதும். சாதனை படைக்க வேண்டாம். சந்தோஷமாக வாழ்ந்தாலே போதும்.

தனிமையில் உங்களைக் கொஞ்சம் அசை போடுங்கள்.

துன்பம், தீது, கெடுதல், சோகம் மறந்து இன்பம், நலம், சுகம் தேடுங்கள்.

உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்!

# காதுவலி?

காதுவலி என்பது நாம் எல்லோரும் நம் வாழ்க்கையில் என்றாவது ஒருநாள் அனுபவித்து உணர்ந்து இருக்கும் ஒரு வலி ஆகும்.

எந்த வலியையும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் காதுவலியை மட்டும் தாங்கிக்கொள்ள முடியாது என்பது மக்கள் அனுபவித்துக் கூறும் ஓர் உண்மையாகும். ஆனால் ஒவ்வொரு வலியும் அதற்கென்ற சில தன்மைகளையும், காரணங்களையும் கொண்டுள்ளது.

காது சொட்டு மருந்தால் மட்டும் காது வலியைப் போக்கிவிட முடியுமா? காது வலிக்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் அடிப்படைக் காரணம் என்னவென்று அறிந்து அதன்படி வைத்தியம் செய்ய வேண்டும்.

காதிலோ அல்லது காதைச் சுற்றியுள்ள இடங்களிலோ ஏற்படும் நோய்களைப் பொறுத்து காதுவலி உண்டாகிறது. செவிக்கு அருகில் உள்ள மற்ற இடங்களில் ஏற்படும் உபாதைகள் மற்றும் பல்வலியும் சில சமயங்களில் காது வலியை ஏற்படுத்தும். இது 'ரெஃபர்டு' வலி என்று சொல்லப்படும். இதற்கு 5,7,9 மற்றும் பத்தாவது கபால நரம்புகளும் மற்றும் முதல் இரண்டு கழுத்து நரம்புகளும் காரணம் ஆகும்.

காது வலிக்கு சில சாதாரண காரணங்களும் அசாதாரண காரணங்களும் உண்டு. காதுவலி வயதிற்கு ஏற்றபடியும் மாறுபடுகிறது. காதில் ஏற்படும் சிறிய கட்டி, செவிக் குழாயில் வீக்கம், காதில் உள்ள பிசின் அழுக்கு, நடுச்செவியில் ஏற்படும் சீழ் மற்றும் ஹெர்பீஸ் போன்றவைகளால் காதுவலி ஏற்படும். செவிக் குழாயில் வீக்கம் ஏற்படுவதற்கு நீரிழிவு நோய் ஒரு முக்கிய காரணம் ஆகும்.

காதை–குச்சி, பின் போன்றவைகளால் குடைவதாலும் காதில் ஓங்கி அறைவதாலும் காது வலி ஏற்படலாம். காது வலிக்கு காது புற்றுநோயும் ஒரு காரணமாகும். இதுபோல



ஒரு சிறிய காயம் முதல் புற்று நோய் வரை காது வலிக்குப் பல காரணங்கள் உள்ளன.

பூச்சி அல்லது சொத்தைப் பல், இடம் மாறுபட்ட பல், தொண்டைச் சதை வீக்கம், நாக்கில் ஏற்படும் புண், நாக்குப் புற்றுநோய் ஆகியவையும் காது வலிக்குக் காரணங்கள் ஆகும். இது தவிர சைனஸ், மாஸ்டாயிடு வியாதிகளாலும் காது வலி ஏற்படுகிறது.

தொண்டைக் காசநோய், தொண்டைப் புற்றுநோய், தாடைகளில் ஏற்படும் நோய் (டெம்பரோ மேண்டிபுலர்), எலும்பு நோய் காரணமாகவும் காது வலி உண்டாகிறது.

தொண்டை சதை அடினாய்டு அறுவை சிகிச்சைக்குப் பின்னரும் காது வலி சில சமயங்களில் உண்டாக வாய்ப்புள்ளது. கழுத்து எலும்புகளில் ஏற்படும் வலிகளாலும் வயதான காலத்திலும் காதுவலி உண்டாகிறது.

கழுத்திற்கு அதிக அசைவுகள் கொடுப்பதால் இந்த வலி அதிகமாகிறது. நடுச் செவியில் ஏற்படும் கிருமி உபாதைகளால் சிறுவயதில் காதுவலி உண்டாகிறது.

காது வலிக்கு உண்டான அடிப்படைக் காரணத்தை அறிந்துகொண்டு அதற்கேற்ற மருத்துவ உதவி செய்தால் காது வலியில் இருந்து முழுமையாக நிவாரணம் பெறலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

தி. தக்ஷ்ணேஸ்வரி,
97/26, புகையிரத நிலைய வீதி, வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# நம்பலாமா நாமும்

பிறந்து சில மாதங்களான குழந்தைகள் தூங்க வேண்டுமென்றால் அவர்களின் வாயில் ரப்பர் சூப்பிகளை, பால்புட்டிகளை வைத்து விட்டால் போதுமென்று சில தாய்மார்கள் நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறானது.

குழந்தைகள் தூங்காமல் அழுது சிரமப் படுத்துகின்றன என்றால் அவை படுத்திருக்கும் படுக்கையில் தூசிகள், சிறு கற்கள் போன்றவை கிடக்கலாம்.

அல்லது பசியின் காரணமாகவோ வேறு உபாதைகள் காரணமாகவோ அழலாம். அவற்றை அறிந்து கொண்டு அதற்கேற்றபடி செயற்பட வேண்டும்.



அதை விடுத்து ரப்பர் சூப்பிகளை பால் புட்டிகளை வாயில் வைத்து விடுவது தவறு. இதனால் குழந்தையின் பற்கள் சீராக முளைக்காமல் போகலாம். அது தவிர இனிப்புச் சுவையுள்ள பால், இரவு முழுவதும் வாயில் இருப்பதால் பற்சொத்தை ஏற்படவும் வாய்ப்புண்டு.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை BL

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி. கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-04-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

## வெஜிட்டபிள் பிசிபேளாபாத்

தேவையானவை:

| | |
|---|---|
| அரிசி | - 1 டம்ளர் |
| துவரம் பருப்பு | - 1/2 டம்ளர் |
| போஞ்சி | - 100 கிராம் |
| கரட் | - 100 கிராம் |
| பச்சைப் பட்டாணி | - 100 கிராம் |
| கத்தரிக்காய் | - 100 கிராம் |
| சின்ன வெங்காயம் | - 100 கிராம் |
| புளி | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| கொத்தமல்லி | - 50 கிராம் |
| செத்தல் மிளகாய் | - 100 கிராம் |
| தேங்காய்த் துருவல் | - 1/2 மூடி |
| கடலைப் பருப்பு | - கையளவு |
| பெருங்காயம் | - சிறு துண்டு |

செய்முறை:

அரிசி, பருப்பு இரண்டையும் குக்கரில் வேக வைக்கவும். பிறகு கொத்தமல்லி, செத்தல் மிளகாய், பெருங்காயம், கடலைப் பருப்பு, தேங்காய்த் துருவல் ஆகியவற்றைப் பொன்னிறமாக வறுத்து எடுத்து மிக்ஸியில் பொடி செய்து கொள்ளவும்.

புளிக்கரைசலைக் கொஞ்சம் திடமாகக் கரைத்துக் கொண்டு அதில் உப்பு, வறுத்த பொடியைக் கலந்து வேக வைத்த அரிசி, பருப்பு, காய்கறிகளுடன் கிளறவும். எல்லாம் சேர்த்து நன்றாகக் கொதித்த பிறகு கீழே இறக்கி வைக்கவும்.

நல்லெண்ணையில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துப் போட்டால் சூடான சுவையான வெஜிடபிள் பிசிபேளாபாத் ரெடி.

இத்துடன் உருளைக்கிழங்கு சிப்ஸ் அல்லது வெங்காய தயிர்ப் பச்சடி இருந்தால் இன்னும் சுவையோ சுவை.


தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜீவலர்ஸ் பரிசுக் கூப்பன் இல 06

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜீவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## இனி நீ காதலிக்கத் தொடங்கு....!

கண்ணீரிலே நீந்தக்
கற்றுக் கொள்!

முட்களிலே நடக்க
முடியுமா? முடிவு செய்!

சோகமென்றால் சோர்ந்து
போகாமல் அதையே
சுவாசித்து வாழ வலிமை
உண்டா?

புயல்களையும் புரட்டித்
தள்ள முடிய வேண்டும்!

இதயத்தை வந்து இரும்புகள்
இடித்தாலும் பூவாகப் பூத்து
நிற்க உன் புன்னகைக்கு
பலம் இருந்தால்.....!

எதிர்ப்புகளை எளிதாக
எடுத்து வீசிவிட
இயலுமென்றால்....!

நெருப்பில் விழுந்தாலும்
எரியாத பஞ்சாக உன்
நெஞ்சம் சிரிக்கும்
என்றால்....

இனி நீ காதலிக்கத்
தொடங்கு....

பீ.எஸ். அன்பரசி- பதுளை.

## காத்திருப்பு

அழுகைத்தான் உனக்கு
ஆசுவாசமென்றால்....
அதை-
எனக்கும் கொஞ்சம்
சொல்லியனுப்பு தோழி!
•••
சேர்வோம் என்கிற
நம்பிக்கைகளில்
காத்திருப்பதைத் தவிர;
வேறு-
ஆறுதல்களில்லை எனக்கு!
•••
எனது கனவுகளெல்லாம்
பூப்பெய்தாமலேயே
உதிர்ந்து போயின;
நம்மில்-
மகரந்தமில்லாத
இந்த-
இடைவெளிகளில்!
•••
பிரிவு-
நெருப்பாலானதா?
என் ஆத்மம் வரைக்கும்
எரிகிறதே காதலி!
•••
இரவுகளிலும்-
மனக்குழந்தை
என்னுள்-
விழித்துக் கொண்டேயிருக்கிறது;
உன்
நினைவுகளைப் போல.....!
•••
ஆயினும்,
சுழித்தோடும் நதி
எங்கு சுற்றிப் போயினும்
கடலோடுதானே
கலந்து போகிறது?
அதுபோல
நாமும்....!
•••
சேர்வோம் என்கிற
நம்பிக்கைகளில்
காத்திருப்பதைத் தவிர,
வேறு-
ஆறுதல்களில்லை
எனக்கு....!

றஜீலா.

## என் நிலவு-முஞ்சிக்காரிக்கு

வெள்ளரிக்கா வெடிச்சதுபோல்
நிலவொத்த மூஞ்சிக்காரி!
நீயிப்போ சவுக்கியமா?
நெனவிருக்கா என் மொகத்த?

தினமுரசின் ஓரத்தில்
குறிப்பெழுதி அனுப்பிய உன்
திருமுகந்தான் எனக்கிப்போ
அடிக்கடி தோன்றுதடி!

என் வாழ்க்க சிறந்தோங்க
'ஆட்டோகிராப்' குறிப்பெழுதி
தந்த ஒன் வாழ்வோங்க
நானெழுந்து வாழ்த்தொண்ணா
நரகத்தில் தவிக்கிறேன்டி!

துண்டுகட்டி குறுக்காலே
குளத்தில் நின்று குளிப்பதுபோல்,
அலையலையாய் நினைவெழுந்து,
ஆட்டுதடி என் மனச.

ஒன்னவிட்டா எனக்கொருத்தி
உற்றதுணை யாருமில்ல,
ஒம் முகத்த பார்க்கமனம்
கடுகதியாய் வருகுதடி.

திருமதியாய் ஆனபின்பும்,
முழுமதிதான் என்றனுக்கு,
நீ வாழ்ந்து சுடர்வீச-
ராப்பகலா வாழ்த்துறேன்டி.

மௌனி.

## வருவேன் நிச்சயம்

எனக்கு நீ
திட்டும் போது கூட
அழகாகத் தான்
இருக்கிறாய்.....!
•••
அன்பே..!
உனக்குத் தெரியுமா?
தென்றல் கூட
உன் பெயரை
உரத்து உச்சரித்ததால்
அழுதிருக்கிறேன்.
•••
உன் சலங்கை
ஒலி எனக்கு
தந்த பரிசு
வெளிச்சத்தை
மறைத்துவிட்டு
இருளை மட்டுமே
என் உள்ளத்தினுள்
புக விடுகிறது....
•••
அன்பே உன்
ஒவ்வொரு
கண் சிமிட்டலிலும்
நான் காண்பது
புது விதமான
நட்சத்திரங்கள் தான்!
•••
என் இதயத்
துடிப்பின்
ஒவ்வொரு ஓசையும்
உன்னை
வர்ணித்த வண்ணம்தான்
இருக்கின்றது....!
•••
பெண்ணே!!!
தூங்கச் சென்றாலும்
உன் நினைவுகள்
தூக்கத்தைப்
பறித்துக் கொள்கின்றன!
•••
என் வெள்ளை
கனவுகளிற்கு
வண்ணம் பூசியவளே!
இருளாய்க் கிடந்த
என் உள்ளத்தில்
தீ வைத்து
ஒளிரச் செய்தவளே!!!
•••
பொறுத்திருக்கிறேன்
உன் திருமணத்திற்காவது
என்னை அழைப்பாயென்று!

வானதி சுரேஸ்.

## தேன் கிண்ணம்

கண்கள் தொடும் தூரம்
கானல் நீரும்
இருளின் போர்வையும்தான்!
நினைவுகளில்
நெருஞ்சி முள்ளும்
நெருக்கமான வாழ்வும்தான்!

இன்னும் தான்- நான்
எத்தனை நாளைக்கு?

எல்.கே. நாதன்.

## ஒரு ஜீவன்

இருளுக்கு விடை கொடுத்து
புது
வாழ்வுக்கு வழி காட்டும்
ஒரு ஜீவனுக்காக
உள்ளம் ஏங்குகின்றது!

நிலவைப் பிடித்து
கையில் எடுக்க
ஆசையில்லை.

உன் நினைவை விடுத்து-வேறு
நினைக்க முடியவுமில்லை.

இன்னும்-நீ
எட்டத்தில் இருப்பது
நியாயமுமில்லை.

நிஜ வாழ்வைத் தொலைத்து
வெறும் கனவுகளில் நிலைத்து

காலம் போவது
கண்களுக்கும் தெரியவில்லை.

இமை அசைக்கையில்
விழி வழி நீர் வடியும்!
துடிக்கும்
இதயம் இயங்கையில்
நெடு மூச்செறியும்!

இழந்து போனது
இனிய நினைவும் இளமை வாழ்வும்!

இனியும் அவை
இழந்து போவது
என்ன நியாயம்?

## காற்றோடு சில கணங்கள்

காற்றுக்கு வாசனை
கலந்தது யார்?
மல்லிகை தோட்டத்து
மெல்லிய காற்று!
**

மண்ணுக்கு மானம்
கொடுத்தது யார்?
இரத்த வாடையில்
யுத்தக் காற்று!
**

வீணைகள் தானாய்
இசைகளை மீட்டுமா?
கம்பியை நீவும்
சந்தோசக் காற்று!
**

யாருக்கு இந்த
சலசலப்பு வரவேற்பு?
இலைகளை கலைத்த
காற்று!
**

"இனிய கானம்
புதிய மோகம்"
மூங்கில் காட்டில்
தூங்கா காற்று!
**

காற்றுக்கு
வெட்கம் வருமா?
பிரிவுடையான் வெம்மை
தணிக்கா காற்று!
**

சுவாசப் பையில்
புகுந்த காற்று
தடுமாற்றம் ஏனோ?
**

ஓ.....
மார்பில் பாய்ந்த
துப்பாக்கி குண்டு.
**

சுபா வரன்-கண்டி.


முரசு பரிசு 200

வாசக நெஞ்சங்களின் அன்பு மழையில்
நனைந்து கொண்டிருக்கும் முரசு
200வது வெற்றிப்படியில் கால்
பதித்திருக்கிறது.
இந்த இனிய வேளையில் பிரிய வாசக
நெஞ்சங்களுக்கு முரசு தரும் இன்ப அதிர்ச்சி!

200 அதிஷ்டசாலிகளுக்கு
பரிசுமழை காத்திருக்கிறது.

உங்கள் அதிஷ்டத்தை பரிசீலித்துப் பாருங்கள்.
நிபந்தனைகள் அதிகமில்லை. ஒரே ஒரு நிபந்தனை.
கீழே உள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பினால்
மட்டும் போதும்.

பெயர்:- ................................
முகவரி:- ................................
................................
தொலைபேசி:- ................................
தொழில்:- ................................
(மாணவர் எனில்
கற்கும் வகுப்பு):- ................................

வாரமலர் தினமுரசு

................ கையொப்பம்

கூப்பனை நிரப்பி அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 30.04.96.
பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

அதிஷ்டசாலிகளின் பெயர்
விபரங்கள் முரசில்வெளியாகும்.
என்ன சந்தோசம்தானே!

கூப்பன்களை நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:
முரசின் பரிசு மழை
தினமுரசு வாரமலர்
த.பெ.இல 1772
கொழும்பு.


## இந்த வாரம் உங்கள் பலன்

(13.04.1997 தொடக்கம் 19.04.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் நன்மை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- கடன் சுமை, மனப் பயம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண்குறை நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனப் பயம். | பி.ப. | 4 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- குடும்ப சுகம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, காரியத்தடை. | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| சனி- காரியானுகூலம், தொழில் மேன்மை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, கடன்தொல்லை நீங்கும். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் தொல்லை, உறவினர் பகை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- உறவினர் உதவி, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, காரியத்தடை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உறவினர் பகை, மனப் பயம். | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, தொழில் உயர்ச்சி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணவரவுத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| புதன் - இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- உறவினர் உதவி, தொழில் இலாபம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 4 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பெரியோர் பகை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரிய சித்தி, தொழில் உயர்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், காரிய சித்தி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பயனுள்ள செயல், பண வரவு. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனப் பயம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனப் பயம். | பகல். | 11 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியத் தடை, பலவித கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் தொல்லை நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, தொழில் உயர்ச்சி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனப் பயம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரிய சித்தி. | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தொழில் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பெரியோர் நன்மை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 4 | மணி |
| சனி- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்





## அமைதி வேண்டும்!

யுத்தம் இங்கு வேண்டாம் நல்ல
யுக்தி வேண்டு மே!
சித்தம் நன்றாய் உண்டேல் மார்க்கம்
சிறந்து தோன்று மே!

அண்ணன் தம்பி அடித்துக் கொண்டால்
என்ன பயனிங் காகுமோ?
விண்ணைத் தொடும் புகழை யெல்லாம்
விரைந்து இழக்க நேருமே!

இரத்தம் காணல் உயிர்குடித்தல்
என்றும் எமக்கு வேண்டாமே!
வருத்த லின்றி வாழும் வாழ்க்கை
வைய கத்தில் நன்றாமே!

அமைதி வேண்டும் அமைதி வேண்டும்
அமைதி நாட்டில் வேண்டுமே!
நமது தோன்றல் நாளை வாழ
நாடு பிழைக்க வேண்டுமே!

க. கோணேஸ்வரன்.

எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்று நல் லாடை செய்வீரே!
விண்ணினின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசை காப்பவர் நீரே!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# முயலும் சிங்கமும்

அந்தக் காட்டில் துள்ளித் துள்ளி ஓடி வந்த முயல், மானையும், குட்டியையும் கண்டு அவற்றின் அருகே சென்றது.

"அக்கா! உன்னை எங்கெல்லாம் தேடி அலைகிறேன் தெரியுமா?" என்று மானைப் பார்த்துச் சொன்னது முயல்.

"ஏன் என்ன விஷயம்?" என்று கேட்டது மான்.

"இந்தக் காட்டில் சிங்கத்தின் கட்டளைப்படி மூன்று நாளைக்கு ஒருமான் என்கிறபடி ஒருவர் சிங்கத்திற்கு இரையாக வேண்டும். இல்லையென்றால் பசிக் கோபத்தில் பல மான்களைக் கடித்துக் கிழித்துக் குதறிவிடும். இன்று உன் முறையாம். அதுதான்..." என்று கவலையுடன் கூறியது முயல்.

"சிங்கம் அல்ல எமனே வந்து என்னைக் கூப்பிட்டாலும், நான் பெற்றெடுத்த என்னருமைக் குட்டியை அநாதரவாக விட்டுப் பிரிந்து, நான் வரவே மாட்டேன்", என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி விட்டு குட்டியுடன் தாவியோடியது தாய்மான்.

இதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த முயல் என்ன நினைத்ததோ தெரியவில்லை. குபீரெனத் திரும்பி சிங்கத்தின் குகையை நோக்கித் தாவி ஓடியது.

அங்கு,

"ஓ என் ராஜாவே!" என்று சிங்கத்தை அழைத்தது முயல்.

"யாரது முயலா? எங்கே அந்த மான்?" என்று கர்ஜனையுடன் கேட்டது சிங்கம்.

"அய்யோ! நான் என்னத்தைச் சொல்லுவேன்?" என்று நடுங்குவது போல நடித்தது முயல்.

"ஏய் பதரே! என்ன நடந்தது என்று விபரமாகச் சொல்!" என்றது சிங்கம்.

குகைக்கு வந்த வழியில் தான் பார்த்த ஒரு பாழுங்கிணற்றைப் பற்றிய சிந்தனையோடு, தேம்பலும், திணறலுமாக,

"தங்களுக்கென்று ஒரு கொழுத்த மானை



அழைத்து வந்தேன். வரும் வழியில் ஒரு பாழுங்கிணற்றில் பதுங்கிக் கிடந்த தங்களைப் போன்ற ஒரு சிங்கம் அந்த மானை அடித்துக் கொன்று தின்றுவிட்டது," என்று கூறியது முயல்.

"ஆ.. அப்படியா? வா என்னுடன். அந்தச் சிங்கம் எங்கே உள்ளது என்று சொல். அதை ஒரே அடியில் கொன்று போட்டு விடுகிறேன்!" என்று சொன்னது சிங்கம்.

பாழுங்கிணற்றடிக்கு சிங்கத்தைக் கூட்டி வந்த முயல்,

"ராஜாவே! தங்களுடைய இரையை அபகரித்த அந்தச் சிங்கம் இங்கே தான் பதுங்கியுள்ளது," என்று பரபரப்புடன் சொன்னது.

அகன்று, பரந்து சேறும் சகதியுமாய்க் காணும் சேற்று நீருள்ள அந்தப் பாழுங் கிணற்றைச் சிங்கம் எட்டிப்பார்த்தது.

மேலேயிருந்து எட்டிப்பார்க்கின்ற சிங்கத்தின் நிழல் பாழுங்கிணற்று நீரில் தெளிவாகத் தெரிந்தது. தண்ணீரில் தனது நிழலைக் கண்ட சிங்கம் கோபத்துடன் கர்ஜித்தது. கட்டுக்கடங்காத கோபத்துடன் மறு நொடியில் கிணற்றுக்குள் பாய்ந்தது சிங்கம்.

பாழுங்கிணற்றில் உள்ள சேற்றில் சிக்கி உயிரிழந்தது சிங்கம். சிறிய முயலின் புத்தி சாலித்தனத்தால் தமக்கு சிங்கத்திடமிருந்து விடுதலை கிடைத்தது என்று ஆரவாரித்தன மற்ற மிருகங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.04.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 188
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 186

பரிசுக்குரியவர்:
தி. ஹிரோன் மிதுஷன்,
இ/றை தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| தாமோதரம் பிரதீவன், பாண்டிருப்பு-01, கல்முனை. | சூ. மதுரன், வ/ த.ம.ம.வித்தியாலயம், வவுனியா. |
| செல்வி பாத்திமா முப்ராஸா உசைன், மா/ ஆமினா, ம.வி., மாத்தளை. | செல்வன் என்.எம். முஷ்தாக் அகமட், மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர்-06. |
| செல்வன் சிந்துஷன் சந்திரசேகர். அரியாலை, யாழ்ப்பாணம். | நர்மதா வேல்முருகு, வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு. |
| கே. பொனிபஸ், கோர்ட்டமுனை, கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. | செல்வன் வி. அருண்ஷாத், கோட்டைக் கல்லாறு மகாவித்தியாலயம், கோட்டைக்கல்லாறு. |
| செல்வி சாய்ப்பிரியா கணேஸ், சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. | செல்வி பாத்திமா பவ்ஸ், கேம்பிரிட்ஜ் தேசிய பாடசாலை, மாத்தளை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. விதையின்றி முளைக்கும்.
   வேரின்றி வளரும்.
   அது என்ன?
2. கைபட்டு மலரும் கால்பட்டு மறையும்.
   அது என்ன?
3. காற்றைக் குடித்தவன் கைகளிலே தவழுகிறான்.
   அவன் யார்?
4. புள்ளியிலே மயங்க வைத்தாள்,
   ஆட்டத்திலே கிறங்க வைத்தாள்.
   அவள் யார்?
5. தண்ணிக்கும் தரைக்குமாய் தாவிக்குதிக்கிறான்:
   அவன் யார்?
6. ஒலி கொடுத்து அழைப்பான், தகவல் கொடுப்பான்.
   அவன் யார்?
7. தாவித் தாவி வருவான், தரைக்கு வந்து திரும்புவான்.
   அவன் யார்?
8. காலில்லாதவனுக்குத் தரை பிடிக்காது.
   அது என்ன?
9. ஒற்றைக் காலனுக்கு முழுநீள வால்.
   அது என்ன?
10. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?

### விடைகள்

1. கொம்பு 2. கோலம்
3. பலூன் 4. மயில்
5. தவளை 6. தொலைபேசி
7. கடல் அலை 8. மீன்
9. ஊசிநூல் 10. தொலைபேசி.

தொகுப்பு: செல்வி ஏ.அகல்யா, நுவரெலியா.

## காந்தியின் பத்திரிகை

மகாத்மா காந்தியடிகள், ஆங்கிலேயர்களின் ஆட்சியால் அடிமையாக்கப்பட்ட இந்தியர்களுக்குச் சுதந்திர உணர்வை தாம் நடத்திய பத்திரிகைகளின் வாயிலாக ஊட்டினார். இவர் நான்கு பத்திரிகைகள் நடத்தினார் அவை:

1. இந்தியன் ஒப்பீனியன்
2. யங் இந்தியா
3. நவஜீவன்
4. ஹரிஜன்.

## வாரம் ஒரு நாடு

### டோங்கா



தலைநகர் – நுகு அலோஃபா
பரப்பு – 748 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை – 1.08 இலட்சம்
மொழி – ஆங்கிலம், டோங்கன்
எழுத்தறிவு – 99%
சமயம் – கிறிஸ்தவம்
நாணயம் – பாங்கா
தனிநபர் வருமானம்– 1350 டொலர்


அமைவிடம்:
தென்மேற்கு பசிபிக்கில் 169 தீவுகளையும், சிறு தீவுத் துண்டுகளையும் கொண்டது.

வரலாறு:
பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்டிருந்த டோங்கோ 1970 ஜூன் 4ல் சுதந்திரமடைந்தது. மன்னராட்சி நடைபெறுகின்றது.

பொருளாதாரம்:
டோங்கோ ஒரு விவசாய நாடு. காய்கறிகளும், பழவகைகளும் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தெங்குப் பொருட்கள், வாழைப்பழம் ஆகியன முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.

## அந்தமான் சிறைச்சாலை

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோது கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர். 1896ல் இச்சிறைச்சாலை கட்டப்பட்டது. நடுவில் கண்காணிப்புக் கோபுரத்துடன் ஏழு தொகுப்புக் கொண்ட மூன்று அடுக்குமாடிக்



கட்டடமே இந்தச் சிறைச்சாலை. ஒவ்வொன்றும் 13 1/2 நீளமும், 7 அடி அகலமுமான அளவுடைய தனிச் சிறைகள் மட்டும் 698 அமைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் சிறை வளாகம் முழுமையும் கைதிகளை மிகக் கொடூரமாக நடத்துவதற்கு வசதியாகவே கட்டப்பட்டது.

இந்தச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் கூடக் கிடையாது. உணவுப் பற்றாக்குறை. மிகக் கடுமையான உழைப்பு. எதிர்த்துப் பேசியவர்கள் கடும் சித்திரவதைக்கு ஆளாயினர். கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டவர்கள் பலர். சிலருக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. 1938ல் கைதிகளின் உண்ணாவிரதக் கிளர்ச்சிக்குப் பிறகு, இந்தியாவிலுள்ள தத்தம் மாநிலச் சிறைகளுக்கு அவர்கள் மாற்றப்பட்டனர். மிகக் கொடுமையான குற்றம் புரிந்தவர்கள் மட்டுமே அங்கு சிறை வைக்கப்பட்டனர்.

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து சிறைச்சாலை மூடப்பட்டது. 1979 பெப்பிரவரி 17ல் அந்தமான் சிறை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. தற்போது இது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு காட்சி மையமாக விளங்குகின்றது. சிறைச்சாலைக் காட்சியகத்தில், அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த தியாகிகளின் படங்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட உடைகள், சித்திரவதைக் காட்சிகள் போன்ற பலபொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## ஜோர்ஜ் ஸ்டீபன்சன்

உலகின் எல்லா நாடுகளிலும் துரித போக்குவரத்துக்கு பயன்படுவது ரயில் வண்டிகள்தான். பிரயாணிகளை மட்டுமல்ல, ஏராளமான பொருட்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் சுலபமாகவும் வேகமாகவும் ரயில் வண்டிகளே கொண்டு செல்கின்றன.

இன்று பல நாடுகளிலும் மின் சக்தி மற்றும் டீசல் எண்ணை போன்றவற்றைப் பயன்படுத்தி ரயில்கள் ஓடினாலும் ஆரம்பத்தில் நீராவியைப் பயன்படுத்தியே ரயில்கள் ஓட்டப்பட்டன. நீராவி மூலம் ரயிலை ஓட்டும் முறையினை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ஜோர்ஜ் ஸ்டீபன்சன் என்பவரே. இங்கிலாந்தில் ஓர் ஏழை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியின் மகனாக ஸ்டீபன்சன் 1781ல் பிறந்தார்.

சிறுவயதிலேயே தனது தந்தையாருடன் ஸ்டீபன்சன் நிலக்கரிச்சுரங்கத்துக்குச் சென்று சிறு சிறு தொழில்களைப் புரிந்துவந்தார். நிலமட்டத்துக்கு பல நூறு மீட்டர்கள் கீழே வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியை தொழிலாளர்கள் வண்டிகளில் ஏற்றி இழுத்துக் கொண்டு வெளிவருவார்கள். இவர்கள்



படும் துன்ப துயரங்கள் ஸ்டீபன்சனின் மனத்தை உலுக்கியது. சுரங்கத் தொழிலாளிகள் படும் துன்பத்தைக் குறைக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினார்.

ஸ்டீபன்சனின் சிந்தனைக்கு, கொதிக்கும் நீரிலிருந்து வெளியேறும் நீராவி நல்லதொரு விடையாகக் கிடைத்தது. நீராவியின் துணையுடன் கூடிய ஓர் இயந்திரத்தை கண்டு பிடித்தார். அந்த இயந்திரத்தின் மூலம் ஆழமான சுரங்கத்தின் கீழிருந்து வெட்டி எடுக்கப்படும் கரியை இலகுவாக மேலே கொண்டு வரக்கூடியதாக இருந்தது. அவருடைய 33வது வயதில்–1814ம் ஆண்டு ஸ்டீபன்சனின் கனவு நனவானது.

தனது சாதனையை ஆதாரமாக வைத்து மேலும் ஆய்வுகளைத் தொடர்ந்தார். வெற்றியும் பெற்றார். 1825ம் ஆண்டு பயணிகள் செல்லக்கூடிய ஒரு ரயிலை உருவாக்கினார். 33 தொடர் வண்டிகளில் 600 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, 25 கிலோமீட்டர் வேகத்தில் முதல் ரயில் வெற்றிகரமாக ஓடியது. இதனைத் தொடர்ந்து 1830ம் ஆண்டு லிவர்ப்பூல் மற்றும் மாஞ்செஸ்டர் நகர்களுக்கிடையில் ரயில் தண்டவாளங்கள் பதிக்கப்பட்டு வெற்றிகரமாக ரயில் ஓட ஆரம்பித்தது. இந்த ரயிலை ஜோர்ஜ் ஸ்டீபன்சனே வெற்றிகரமாகச் செலுத்தினார். 1848ல் தனது 67வது வயதில் ஸ்டீபன்சன் காலமானார்.

## மிகப் பெரிய தீவுகள்

உலகிலுள்ள மிகப்பெரிய தீவுகளும் அவற்றின் பரப்பளவும், அவை அமைந்துள்ள கடல் பகுதிகளும் வருமாறு:

| தீவு | கடல் | பரப்பு(ச.கி.மீ) |
|---|---|---|
| 1. கிறீன்லாந்து- | ஆர்க்டிக் | 21,75,590 |
| 2. பப்புவா நியூகினியா- | பசிபிக் | 7,89,946 |
| 3. போர்னியோ- | பசிபிக் | 7,51,097 |
| 4. மடகஸ்கார்- | இந்தியப்பெருங்கடல் | 5,87,039 |
| 5. பாபின்தீவு (கனடா)- | ஆர்க்டிக் | 5,07,451 |
| 6. சுமத்திரா- | இந்தியப் பெருங்கடல் | 4,22,158 |
| 7. ஹோன்சூ (ஜப்பான்)- | பசிபிக் | 2,30,092 |
| 8. பிரித்தானியா- | அட்லாண்டிக் | 2,29,848 |
| 9. விக்டோரியா- | ஆர்க்டிக் | 2,17,290 |
| 10. எல்லிஸ் மெர் (கனடா)- | ஆர்க்டிக் | 1,96,236. |



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**நடந்த கதை**

பழைய புத்தகக் கடையில் தற்செயலாய் ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பார்க்கிறார் அந்த எழுத்தாளர். கையெழுத்தில் தன் சொந்தக் கதையைப் அதில் எழுதியிருக்கிறாள் ஒரு பெண். கதையைப் படித்து விட்டு தன்னைக் காண அவசியம் வரவும் என எழுதியிருக்கிறாள்; அவள் பெயர் காயத்ரி. ரத்னா என்பவனை திருமணம் செய்கிறாள், ரத்னாவின் சில குணங்கள் புதிராக உள்ளன. ரத்னாவுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை தொடர்ந்து விபரிக்கிறாள்.

சரசு–ரத்னாவின் சகோதரி, சமையற்காரன் அய்யர், அவர் மகள் இந்திரா. அவர்கள் செயல்களும் சந்தேகமாக இருக்கின்றன.

**இனி....**

"அம்மா சொன்னதைக் கேளு!" என்கிறார் அய்யர். இந்திரா தயங்குகிறாள். நிற்க மறுக்கிறாள். "அய்யர் வாய்யா" என்றாள் சரஸு. ஏதோ முனி பிடித்த மாதிரி உடம்பு பதறுகிறது. அய்யர் வந்து அந்த சிகரெட் நுனியை இந்திராவின் உடம்பில் அம்மை குத்துவது போல வைத்து அழுத்தி அவளை அலற விடாமல் வாயைப் பொத்த அவள் நிற்கிறாள். நகைகள் ஒளிர்கின்றன. அவள் உடம்பில் இரண்டு மூன்று இடத்தில் கன்னிப் போயிருக்கிறது.

அய்யர் அந்த சிகரெட்டுக்கு உயிர் இருக்கிறதா என்று இழுத்துப் பார்க்கிறார்.

உயரமாகப் படுக்கை நடுவில் நிற்கிறாள் சரஸு, தான் வரைந்த படத்தை ஓவியர் பார்ப்பது போல் பார்க்கிறாள்.

"ஒட்டியாணத்தை எடு அய்யர்" என்கிறாள்.

-2-

எனக்கு மூச்சடைக்கிறது, ஒன்றும் புரியாமல் திக்கு திக்கு என்கிறது. என் தைரியம் எல்லாம் கரைந்து போய் நேராக வந்து ரூமுக்குள் கதவைச் சாத்திக்கொண்டு படுத்துவிட்டேன். கொஞ்சநேரம் கழித்துப் படபடப்பு அடங்கினதும் யோசிக்க வேண்டும். பெரிசு பெரிசாக மூச்சு விடுகிறேன். தண்ணீரை மடக்கு மடக்கு என்று குடிக்கிறேன். ரத்னாவுக்கு டெலிஃபோன் செய்கிறேன். ரத்னா எடுத்து, "ஹலோ ஹலோ" என்கிறார். எனக்குப் பேச வரவில்லை. பேச்சு எழவில்லை.

யார் இவர்கள்? எந்த மாதிரி Joint (இடம்) இது? வெளி உலகத்திற்கு எஜமானி, சமையற்காரன், சமையற்காரனின் பெண்! அந்த அறையில் எஜமானி சமையற்காரன் பெண்ணுக்குத் தன் சகல நகைகளையும்

**நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா**

அணிவித்து ஜோடிக்கிறாள். சமையற்காரன் சிகரெட்டை வைத்து பெண்ணின் உடம்பில் அழுத்துகிறான். What kind of perversion is this? (எத்தகைய முறைகேடானது இது?) அதைவிட ஆச்சரியம் அப்புறம் நடந்தது தான்....

நான் அறையில் படுத்திருக்கிறேன். கதவு தட்டப்படும் சப்தம். திடுக்கிடுகிறேன். தயங்குகிறேன்; திறக்கிறேன். அந்தப் பெண் இந்திரா நிற்கிறது.

"காயத்ரி அம்மா, நீங்க வந்துட்டீங்களா?"

கிட்ட வருகிறாள். நான் சுருங்குகிறேன். அவளைப் பார்க்கிறேன். அவள் உடலைப் பார்க்கிறேன். எப்போதும் போலத்தான் துவைத்த பாவாடை தாவணி, கையில் ப்ளாஸ்டிக் வளையல், காதில் ஈர்க்குச்சி, வளைந்து சரிந்து வெட்டிய ரவிக்கை- சற்று நேரம் முன்னே எத்தனை நகைகள்–

"காப்பி கொண்டாரட்டுமா? காயத்ரி அம்மா?"

"கொண்டாரட்டுமா?"– சத்தியமாக அய்யரின் பெண்ணில்லை அவள். பெற்ற தகப்பன் இப்படிச் செய்வானா? பின் யார் இவர்கள்?

"இந்திரா சரஸு எங்கே?"

"தெரியலை. காலையிலே கார் எடுத்துக்கிட்டு போனாங்க... இன்னும் வரல்லை. தோப்புக்குப் போயிருப்பாங்களோ என்னவோ!"

பொய். பத்து நிமிஷத்திற்கு முன்னால் பார்த்தேன்.

"அய்யர் எங்கே?" என்றேன்

"அப்பாவா? மார்க்கெட்டுக்குப் போயிருக்காங்க."


அப்பாவாம்!

அவள் சிகரெட் சுட்ட இடத்தைத் தடவிக் கொடுக்கிறாள்.

-3-

படபடப்பு அடங்கியதும் மாலை நிதானமாக யோசித்தேன். தீர்மானித்தேன். இந்த வீட்டில் நான் இனி ஒரு கணம்கூடத் தங்க மாட்டேன். நான் இங்கு பார்த்ததை ரத்னாவிடம் சொல்லலாமா? கூடாதா? என்று மிகவும் கடுமையாக யோசித்துக் கடைசியில் ரத்னாவிடம் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று முடிவு பண்ணிவிட்டேன். இந்தச் சம்பவத்தை மனதில் வைத்துக் கொண்டு முழுங்க முடியாமல், சீரணிக்க முடியாமல், தவித்துக் கொண்டிருக்க முடியாது. எனக்கும் ரத்னாவுக்கும் no nonsense ரகசியங்கள் கூடாது. ஒளிவு மறைவு கூடாது. சொல்லிவிடப் போகிறேன்.

மூன்று ஜென்மங்களையும் வீட்டைவிட்டு விரட்ட வேண்டும். சமையற்காரன் சமையற்காரனாக இல்லாமல்- சே! இது நடக்கவே நடக்காது. எத்தனை சுதந்திரமாக சரஸுவின்




முன் சிகரெட் பிடிக்கிறான். முன்னால் வரவே தயங்குவான் பூணூலையும் மாட்டிக் கொண்டு புஸ்ஸு புஸ்ஸு என்று புகைத்து அந்தப் பெண்ணின் உடம்பில்....அவள் யார்? அவளுக்கு நகை போட்டு ஜோடித்து பார்ப்பதில் சரஸுவுக்கு என்ன குரூர ஆசை? எனக்குப் புரியவில்லை. புரிகிறதோ புரியவில்லையோ, இந்த Gangஐ (கூட்டத்தை) விரட்ட வேண்டும். இல்லையென்றால் நானும் ரத்னாவும் தனியாக ஒரு சின்னவீட்டுக்குச்

சென்று விட வேண்டும். எனக்கு இந்த வீடு பிடிக்கவில்லை. Too Much of mysteries (மிகக்கூடுதலான மர்மங்கள்)

சரஸு எனக்கு நகைபோட்டு ஜோடிக்கப் போகிறாளா? உடம்பில் சுரீர் என்கிறது.

-4-

ரத்னா வருவதற்கு ராத்திரி ஏழு மணியாயிற்று. வந்த உடன், "சரஸு வந்தாச்சா?" என்று கேட்டார். தெரியாது என்றேன். டிபன் சாப்பிட்டுவிட்டுச் செய்தித்தாள் படித்துவிட்டு ரேடியோ பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்; நான் போய், "ரத்னா, உங்களிடம் ஒரு மிக முக்கியமான விஷயம் பற்றிப் பேச வேண்டும்!" என்றேன்.

"மறுபடி! சரஸுவைப் பற்றி கம்ப்ளெய்ண்ட்டா?" என்றார்.

"கம்ப்ளெய்ண்ட் ஒன்றுமே இல்லை. நான் இன்று பார்த்த ஒரு காட்சியைச் சொல்கிறேன் அவ்வளவுதான்!" என்றேன்.

"ராத்திரி வைத்துக் கொள்ளலாமே!" என்றார்.

"இல்லை, இப்போதே சொல்லியாக வேண்டும்."

"சரி, சொல்லு, சொல்லு!"

விவரித்தேன், ஒன்றுவிடாமல் விவரித்தேன்.

நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். நியூஸ்பேப்பரை மடக்கி வைத்தார். "காயத்ரி, கொஞ்சம் இப்படி வா!" என்றார். நான் அருகில் சென்றேன். நெஞ்சைத் தொட்டுப் பார்த்து, "ஜுரமா?" என்றார்.

"இல்லை. ஏன்?"

"ஏன் இப்படிப் பிதற்றுகிறாய்?"

"நான் பார்த்தது, பிதற்றலா?"

"பார்த்தாயா? என்ன விளையாடுகிறாய்? சரஸு இன்று காலையிலிருந்து வீட்டில் இல்லை. நான் தான் அவளை அனுப்பி வைத்தேன். இருபத்து ஐந்து மைல் காரில் போயிருக்கிறாள். தோப்புக்கு. அங்கே அவள் சொத்து விஷயமாக வக்கீலைப் பார்த்துப் பேசிவிட்டு இன்னும் வீட்டுக்குக் கூட வரவில்லை. என்ன் உளறுகிறாய்? சரஸுவாவது வீட்டில் இருப்பதாவது?"–

எனக்கு முதல் ஸ்தம்பிதம்.

"அப்புறம் கேள். போனவாரம்தான் சரஸு தன் நகைகள் அத்தனையும் கொண்டு போய் பாங்க்ல ஸேஃப் டிபாஸிட் வால்ட்டில் வைத்திருக்கிறாள்–"

இரண்டாவது ஸ்தம்பிதம்.

"காயத்ரி! உனக்கு உடம்பு சரியில்லையா?" நான் பார்த்தேன். ரத்னாவின் முகத்தில் கவலை ததும்பியது.

"ஏன் காயத்ரி! Why do you imagine things? (எதற்காக வீண் கற்பனை செய்கிறாய்?) போன தடவை சரஸு பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாள் என்றாய். இந்தத் தடவை வரம்புமீறி என்ன என்னவோ சொல்கிறாய். சரஸுவைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா? அவளை ஏன் இவ்வளவு வெறுக்கிறாய்? அவள் உன் வம்புக்கு வந்தாளா? அவள் ஒரு விதவை. சமீபத்தில் கணவனை இழந்தவள். துக்கம் நிறைந்தவள்- அனுதாபம் காட்டப்பட வேண்டியவள். அவளை ஏன் வெறுக்கிறாய்?"

பகுத்தறிவு அது இது என்று ரத்னா பேசினார். எனக்கு பற்றிக்கொண்டு வந்தது.

"இப்பொழுது நான் சொல்வது பொய் என்கிறீர்களா?"

**கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமான – இளமையான ஜில் ஜில் தொடர் இது! சுஜாதாவின் தொடர்களில் பரபரப்பான தொடர் இது!**

"பொய் இல்லை. கற்பனை காயத்ரி! சைக்காலஜி படி நீ அவள் மேல் இருக்கும் அதீத வெறுப்புக்களைக் கற்பனைக் காட்சிகளாக மாற்றி அதை ஏறக்குறைய நம்புகிறாய். you are jealous of her (நீ அவள் மீது பொறாமைப்படுகிறாய்.)

கார் சப்தம் கேட்கிறது. டிரைவர் பிரம்புக் கூடையையும் ஃப்ளாஸ்கையும் தூக்கி வருகிறான். பின்னால் சரஸு களைப்புடன் இறங்கி வருகிறாள்.

"ஹலோ காயத்ரி! ஹலோ ரத்னா! அப்பாடா? ராட்டன் ஜர்னி! மோசமான ரோடு!"

நான் அவளையே பார்த்துக்



கொண்டிருக்கிறேன்.

ரத்னா: சரஸு, நீ மத்தியானம் வீட்டுக்குத் திரும்பி வந்தாயா?

சரஸு: இல்லையே ஏன்?

ரத்னா: உன் நகைகள் எல்லாம் எங்கே?

சரஸு: எல்லாம் பாங்க்கில் இருக்கிறது, ஏன்?

ரத்னா என்னைப் பார்க்கிறார்.

சரஸு: என்ன காயத்ரி, மறுபடி ஏதாவது ஆரம்பிக்கப் போகிறாயா?

"முடிக்கப் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு எழுந்து வந்து விட்டேன்.

ரத்னா குருடாக இருக்கிறார். அவருக்கு நேரில் வைத்து முதிரிக்க வேண்டும். அப்போதுதான் அவருக்குப் புரியும். அக்கா ஒரு தேவதை என்று எண்ணம். காயத்ரி சரஸுவை ஒழித்துக்கட்டத் தீர்மானித்து விட்டாள். முதல் படலம்..... Sulk, (ஊடல்) ரத்னாவைக் கிட்ட அண்டவிடாதே இன்றிலிருந்து இன்றிலிருந்து.......

-5-

ஒருவாரம் சமாளித்து விட்டேன். ரத்னா நிச்சயமாகவே தவிக்கிறார். காயத்ரி மரக்கட்டை என்றால் மரக்கட்டைதான். உதடுகளை அப்படியே 'ப்' என்று வைத்துக் கொண்டு.....

"உனக்கு என்னதான் வேண்டும்? ஏன் அப்படி என்னை Tease (அலைக்கழிப்பு) பண்ணுகிறாய்?"

"இன்னும் ஒரு மாசத்தில் சரஸ்வதி இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டும்?"

"ஏன், அவள் எங்கே போவாள்?"

"எத்தனையோ ஹோட்டல் இருக்கிறது.

**அங்கம் — 04**

அய்யர், அந்தப்பெண், சரஸ்வதி மூன்று பேரும் ஒரே மாசத்திற்குள் Out" என்றேன்.

ரத்னா கையைப் பிசைந்து கொள்கிறார்.

"இல்லை, நானும் நீங்களும் இந்தப் பாடாவதி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டும். சரஸு தன் நகைகளைக் கண்ட கழிசடைகளுக்குப் போட்டுக் கொண்டு சமையற்காரனை வைத்துக் கொண்டு நிம்மதியாக இருக்கட்டும்."

"மறுபடி மறுபடி அதையே ஆரம்பிக்கிறாய்."

"நான் பார்த்தேனே! என் முட்டாள் கணவனே! பார்த்தேன்."

-6-

ராத்திரி பட்டென்று விளக்கைப் போட்டு சளக் சளக் என்று தண்ணீர் குடித்துவிட்டு என்னைப் புரட்டுகிறார் ரத்னா.

"காயத்ரி! நீ சொல்றதைக் கேட்கிறேன். இது நம் வீடு. சரஸ்வதியை இந்த வீட்டைவிட்டு வெளியே போகச் சொல்லி விடலாம். ஒரு மாதத்திற்குள்! வா!"

"நிஜமாகவா?"

"சத்தியமாக வா"

அவர் கை என் மேல் அலைகிறது. நான் கொஞ்சம் தளர்கிறேன். ஒரு வாரம் தேக்கப்பட்டிருந்த உற்சாகம்.

"எனக்கு வெட்கமாக இருக்கிறது."

"உனக்கு வெட்கமாக இருந்தால் கண்ணை மூடிக் கொண்டுவிடு!"

ஷேவ் பண்ணாத முகம் குத்துகிறது. நெஞ்சை அழுத்துகிறது. வியர்வைத் துளிகள் புருவத்தின் அருகில் அரும்ப.... எனக்குத் திடீர் என்று மயிர்க் கால்கள் எல்லாவற்றிலும் அந்த உணர்ச்சி, அந்த வெட்கம் உறுத்துகிறது. யாரோ பார்க்கிறார்கள்! யாரோ பார்க்கிறார்கள்! ரத்னாவைத் தள்ளப் பார்க்கிறேன்.

எதிரே திரை அசைகிறது. அப்படியே என் வெட்கத்தை மறந்து படுக்கையைவிட்டு எழுந்து ஓடிப்போய் திரையை விலக்குகிறேன்.

சரஸு வெளியே நிற்கிறாள்.

-7-

ரத்னா நிஜமாகவே அதிர்ந்து விட்டார்!

"என்ன சரஸு இது!"

"பாருங்கள், உங்கள் அக்காவின் பண்பை! எவ்வளவு Berverted Lady என்பது இப்போதாவது உங்களுக்குத் தெரிகிறதா? இவள் விபரீத ஆசையைப் பாருங்கள். திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்து...சே!"

"என்ன சரஸு அது?"

I become hysteric (மனநோயாளி போலாகிவிட்டேன்)

"என்ன சரஸு அது?"

"தூக்கம் வரவில்லை. பத்திரிகை பார்க்கலாம் என்று...." என்று மழுப்புகிறாள்!

"சே! நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. என்ன சரஸு இது? அவள் சொன்னதெல்லாம் நிஜம் போலிருக்கிறதே?"

திருதிருவென்று விழிக்கிறாள்.

"நாளைக்குக் காலை! ஆம்! நாளைக்குக் காலை சரஸு இந்த வீட்டை விட்டு வெளியே போக வேண்டும்!" என்கிறேன்.

ரத்னா சற்றுத் தயங்குகிறார்.....பின்பு தீர்மானமான குரலில்.... "சரஸு ! நீ கொஞ்ச நாள் எங்களை விட்டு விலகியிருப்பது நல்லதென்றே தோன்றுகிறது."

"கொஞ்சநாள் என்ன எப்போதுமே! எப்போதுமே!" என்கிறேன்.

"நீ நாளையே வீட்டை விட்டுப் போய்விடு சரஸு" என்கிறார்.

ராட்சசி! ஒரு வார்த்தைகூட வரவில்லை. உம்மென்று இருக்கிறாள். ஏதாவது கையில் கண்டதை எடுத்து அடிக்கலாம் போல வருகிறது.....

"பொழுது விடிந்ததும் புறப்பட வேண்டும்! காப்பி கூடக் கிடையாது." என்றேன்.

சரஸு ரத்னாவை முறைத்துப் பார்த்துவிட்டு செல்கிறாள்.

(தொடர்ந்து வரும்)

**அரங்கம்**













பெயர்: எஸ்.சரவணகுமார். வயது: 32 முகவரி: ஸ்ராட்டன் குறூப், ஈஸ்ட்டேர்ன் டிவிஷன், ஹட்டன். பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: எம். அஸ்லம். வயது: 19 முகவரி: 184,குரு கொடை, அக்குறணை. பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ரி.நாதன். வயது: 24 முகவரி: THALWIESEN STR-13, 8302 KLOTEN, SWITZERLAND. பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.பஸால். வயது: 27 முகவரி: 329, நாகலகம் வீதி, கொழும்பு-14. பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ்.சிரோமி. வயது: 23 முகவரி: 20.PALM GROVE AVENUE, SINGAPORE - 547319 பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்

பெயர்: எம்.அஷ்ரப். வயது: 23 முகவரி: P.O.BOX - 15339, AL AIN, U.A.E. பொழுது போக்கு: சினிமா.

பெயர்: எம்.ஜெமில். வயது: 21 முகவரி: 88/ஏ, காட் வீதி, நிந்தவூர்-03. பொழுதுபோக்கு: பேனாநட்பு.

பெயர்: எம்.சக்கூர் வயது: 23 முகவரி: P.O.BOX-59802, RIYADH-11535, K.S.A. பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.ராஜகுமார். வயது: 20 முகவரி: சி.ஜி.4,அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15. பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: ரி.ரவிக்குமார். வயது: 23 முகவரி: ஆரையம்பதி-1, ஆரையம்பதி. பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எம்.ரமேஷ். வயது: 28 முகவரி: P.O.BOX-1679, CONST. DEPT, BURAYDAH, K.S.A. பொழுது போக்கு: சினிமா, கதைப்புத்தகம்.

பெயர்: எல். உஸைன்டீன். வயது: 20 முகவரி: 20, பேரகஸ்வத்தை, வெலிமடை. பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

புதுமைத் தொடர்

அத்தியாயம் 06

பிரபஞ்சன்

**தமிழகத்தின் புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள்வெறும் ஜடமல்ல உணர்ச்சிகள் உள்ள மனுஷி என்பதை உணர்வுபூர்வமாக — அற்புதமான நடையில் தரும் படைப்பு இது!**

முகத்தில் பத்து நாள் தாடி மண்டியிருந்தது. குளுக்கோஸ் ஏற்றிய கம்பிப் பந்தல், ஏராளமான மருந்துக் குப்பிகள் சூழ அவன் படுத்திருந்தான்.

**இதுவரை**

**சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.**
**ஒருநாள் இரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.**
**பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள்.**
**கணேஷனும் தேடி வருகிறான்.**
**கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த் தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பிறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள். சுமதி பழையதை நினைக்கிறாள்.**

**இனி.....**

சுமதி அவன் அருகாகப் போய் நின்று, 'கணேஷ், என்ன திடீரென்று?' என்றாள். அவனைப் பார்க்கப்பரிதாபமும், அது நாள் வரை ஒரு நோயாளியை வந்து பார்க்காத குற்ற உணர்வுமாய் அவளை அலைக்கழித்தது. முதலில் அவனுக்கு லேசாக ஜுரம் இருந்திருக்கிறது. ஓர் இரவு அது கடுமையாகி விட்டிருந்தது. ஆகவே பக்கத்திலேயே இருந்த ஒரு டாக்டரிடம் சென்று மருந்து வாங்கி உண்டிருக்கிறான். எவ்வளவு மருந்தும் எந்த வகை மருந்தும் சாப்பிட வேண்டுமோ, அதற்கு மாறான மருந்தைக் கொடுத்திருக்கிறான் அந்த டாக்டர். விளைவு பயங்கரமாகி விட்டிருந்தது. இழுப்பு மாதிரி ஏற்பட்டிருக்கிறது. சுய நினைவை வேறு இழந்துவிட்டிருக்கிறான் அவன். அவன் நண்பர் ஒருவர் இந்த மருத்துவமனையில் சேர்த்து விட்டிருக்கிறார். கணேசன் சொன்னான்:

"நினைவு தெளிந்த பிறகு, ஒவ்வொரு நிமிஷமும் உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது சுமதி, அதே சமயம் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டி வருமோ என்று தயக்கமாகவும் இருந்தது. சரியென்று, இன்றைக்காவது சொல்லியனுப்பி விடலாம் என்று முடிவுக்கு வந்தேன். கடைசியாக வந்து சேர்ந்து விட்டீர்களே...!"

கணேசன் கண் கலங்கினான். சுமதிக்கும் அவ்வகை உணர்ச்சியே ஏற்பட்டது.

"இறந்து போய்விடுவேன் என்று கூடத் தோன்றியது. சுமதி.. இறக்குமுன், உங்களை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அப்பா வந்து விட்டீர்கள்!" என்றான் கணேசன் கண்களை மூடிக்கொண்டு.

"சூ... அப்படியெல்லாம் பேசாதீர்கள். இனி உங்களுக்கு ஒன்றும் இல்லை. உங்களுக்குக் குணமாகி வீடுசேரும் வரை, நான் உங்களுடனே இருக்கிறேன். நீங்கள் எதற்கும் கவலைப் படாதீர்கள்..." என்றாள் சுமதி.

தான் அதிகமாக உணர்சி வசப்படுகிறோம் என்றோ, அவனுடனே அவன் குணமாகும் வரை தங்கியிருப்பேன் என்றது சற்று அதிகம் என்றோ அவள் நினைக்கவில்லை. தான் செய்யத்தக்கது அதுவே என நிச்சயம் நம்பினாள் அவள். கணேசனுடன் தங்கி, அவனுக்கு உதவியாய் இருந்த மாணவனை அனுப்பி வைத்தாள். அடுத்து மிகத் துரிதமாகச் செயல்பட்டாள் அவள். நர்சிடம் சென்று அவன் நோய்த் தன்மையை அறிய முயன்றாள்: அந்த நர்ஸ், ஒரு நடு வயதுக்காரி; கரிய தோற்றமும் மிகப் பெரிய உடம்பையும் கொண்டவளாக இருந்தாள்.

"ஒன்றும் சீரியஸான வியாதி இல்லையே...?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. இன்னும் ரெண்டு மூன்று நாளில் சரியாகிவிடும்."

"இப்போது நன்றாகத்தானே இருக்கிறார்?"

"களைப்பு இருக்கத்தான் இருக்கும். ரெண்டு மூன்று நாட்களாப்க் கண்ணைத் திறக்காதபடிக்குக் கிடந்தார் அல்லவா? இந்தப் புடவை என்ன விலை?"

சங்கடத்துடன் அதன் விலையைச் சொன்னாள் சுமதி.

"எங்கே வாங்கினீர்கள்?"

"மலையூரில்."

"நீங்கள் மலையூர்ப் பக்கமா?"

"உம்.."

"அவருக்கும் உங்களுக்கும் என்ன உறவு?"

எந்த இடத்துக்கு ஆகக் கடைசியில் தமிழர்கள் வந்து சேர்வார்களோ, அந்த இடத்துக்கே அவளும் வந்து சேர்ந்தாள். உறவு இன்றி. நட்பு முகாந்திரத்தால், அறிமுகம் காரணமாய், மனிதாபிமானம் காரணமாய், ஒருவர்க்கொருவர் உதவியாய், அனுசரணையாய் இருக்க முடியாது என்று நம்புவார்கள் தமிழர்கள். அதிலும் சம்பந்தப்பட்டவர்கள் ஆணாகவும், பெண்ணாகவும் இருந்துவிட்டால், அவர்கள் இருவர்க்கும் இடையே, வேறு வகைப்பட்ட உறவு இருக்க முடியாது என்று எண்ணுபவர்கள் தமிழர்கள்.

சுமதி அந்த நர்சைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்பே, அவளுக்குப் பதிலாய் இருக்கவேண்டும். சுமதி அங்கிருந்து புறப்பட்டு, போன் இருக்கும் 'ரிசப்ஷனுக்குச் சென்றாள். வீட்டுக்குப் போன் செய்தாள். அந்தக் கணம் வரை, அப்பாவிடம் பொய் சொல்ல வேண்டும் என்று தோன்றியதில்லை அவளுக்கு. முதல் முறையாக அப்பாவிடம் அவள் பொய் சொன்னாள்.

"அப்பா.. திடீரென்று ஆபீசில் 'டூர் போகச் சொல்லிவிட்டார்கள். கோவைக்குப் போக வேண்டியிருந்தது. இப்படியே, ஆபிசிலிருந்தே கிளம்ப வேண்டியிருக்கு. வர, இன்னும் ரெண்டு நாளாகும்...."

"அதுக்கென்ன செய்வது? ஆபிஸ் வழக்கம் அது என்றால், செய்ய வேண்டியது தானே! துணி மணிக்கு என்ன செய்வாய்? மாற்றுக்கு வேண்டாமா?"

"சூட் கேஸில் ஒரு ஜதை துணி இருக்குப்பா... அது போதும்.."

"வேண்டுமென்றால், ஒரு ஜதை எடுத்துக்கொண்டு வரட்டுமா? அபீசுக்கு வந்து தருகிறேன்."

"உங்களுக்கெதுக்கப்பா சிரமம்?"

"சிரமம் என்ன? நான் சும்மாதானே இருக்கிறேன்... என் பொண்ணுக்கு நான் இது கூடச் செய்யமாட்டேனா?"

மனசு வலித்தது. அன்பு, வலி ஏற்படுத்தும் ஒன்று என்பதை மீண்டும் உணர்ந்தாள் சுமதி.

"வேணாம்பா... நான், இதோ உடனே புறப்பட வேண்டியிருக்கிறது..."

"சுபம். நல்லபடியாப் போய் வா. முடிந்தால், போனில் பேசு. கண்ட இடத்தில் தண்ணீர் குடிக்காதே! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்..."

"சரிப்பா."

சுமதி போனை வைத்தாள். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதைக் குறித்து மகிழ்ந்தாள். மீண்டும், கணேசனின் அறைக்குத் திரும்பினாள். அவன் எதையோ மிகத் தீவிரமாக யோசிப்பதாய் அவளுக்குப்பட்டது.

"என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை..."

"என்னிடம் சொல்ல என்ன தயக்கம்? சும்மா சொல்லுங்கள்.."

"இந்த ரூம் ஒரு நாள் வாடகை நூற்றைம்பது ரூபாயாம். மருந்து, மற்ற செலவுகள் எல்லாம் சேர்ந்து எப்படியும் ஐயாயிரமாவது வரும்."

சுமதிக்கு, என்னவோ போல் இருந்தது.

"இந்த நேரத்தில், அது பற்றியா ஒருத்தர் கவலைப்படுவது? உடம்பு தேறி குணமாமிற்றே என்று சந்தோஷப்படுங்கள்; பணத்துக்கு என்ன? சம்பாதிப்பது இது போன்ற அவசியத்துக்குச் செலவிடத்தானே?"

"அந்த அயோக்கியன் என்னை இங்கு கொண்டு வந்து சேர்ப்பான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் 'சீப்'பான இடத்தில் சேர்த்து இருக்கலாம்."

"யாரைச் சொல்கிறீர்கள்?"

"என் அறையில் தங்கியிருக்கிறானே... அந்தப் பேராசிரியர் சங்கரன்தான்."

சுமதிக்கு, முதல் முறையாகக் கசப்புணர்வு ஏற்பட்டது. ஜுர வேகத்தில், பிரக்ஞை இன்றிக் கிடந்தவனை, டாக்சி எடுத்து, இங்கு கொண்டு வந்து சேர்த்துப் பிழைக்க வைத்தவனுக்கு, அவன் தரும் பட்டம் 'அயோக்கியன்' என்பதை நினைக்கையில் ஏற்பட்ட கசப்பு அது!

அறையை விட்டு வெளியே வந்து காற்றாட நின்றாள். இரண்டாம் மாடி, ஆகையால் காற்று ரம்யமாக இருந்தது. மரங்கள் அடர்ந்த அப்பகுதியின் காட்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயன்றாள்.

விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தது.

அந்த நர்ஸ், ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து சுமதியின் முன் நின்றாள்.

"நோயாளியுடன் நீங்கள் தங்கப் போகிறீர்களா?"

"ஏன்?"

"அந்த விவரத்தை நான் குறித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது."

"ஆம்."

"பெயர்?"

சொன்னாள். முகவரி சொன்னாள்.

"நோயாளிக்கு நீங்கள் என்ன உறவு?"

சுமதி அவளைப் பார்த்தாள்.

"அப்படி ஒரு 'காலம்' இதில் இருக்கிறது."

ஏதோ ஒரு அதீத உணர்வில், எந்த அர்த்தத்தையும் சிந்திக்காமல் சுமதி சொன்னாள்.

"மனைவி."

நர்ஸ் அப்படியே எழுதிக் கொண்டாள்.

எப்படி வந்தது அந்த வார்த்தை?

சுமதியே திடுக்கிட்டுத்தான் போனாள். அப்படித் தன்னைச் சொல்லத் தூண்டியது எது என அவளுக்கே புதிராக இருந்தது. தனக்கும் கணேசனுக்கும் என்ன உறவு எனத் தோண்டித் தோண்டிக் கேள்வி கேட்டுத் துளைத்த அந்த நர்சின் மேல் இருந்த எரிச்சலில் அப்படிச் சொன்னோமா என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள். அதுவும் ஒரு காரணம்தான். ஆயினும், தனக்கும் கணேசனுக்கும் இடையே அவ்வகையான உறவுதான் இருக்கவேண்டும் என்று அவளது ஆழ்மனம் எண்ணியதின் வெளிப்பாடுதான் அது என்று கொஞ்சம் சிந்தித்திருந்தால், விளங்கிக் கொண்டு இருந்திருப்பாள். ஆனால், சுமதி அதை வேறுமாதிரி விளங்கிக்கொண்டாள். தன்னை இவ்வாறுதான் வாழச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்த விதியே, அப்படிப் பேசவும் வைத்திருக்கிறது என்று அவள் தப்பாகப் புரிந்து கொண்டாள்.

இரவுப் பணிக்கு ஒரு புது நர்ஸ் வந்திருந்தாள். பார்க்க ஒரு பெரிய சாமந்திப் பூ மாதிரி மஞ்சளாய் இருந்தாள். உள்ளங்கையில் ரேகை உறைவது போல ஒரு புன்சிரிப்பு சதா அவள் முகத்தில் உறைந்தது. சில முகங்கள், வா என்னிடம் வந்து பேசு என்று கூப்பிடும், கை தட்டி. சில முகங்களைப் பார்த்தால், வெட்டிக் கொண்டு ஓடலாம் போல இருக்கும். இது மனித வெறுப்பன்று, இயற்கை என்றே சுமதிக்குத் தோன்றியது. சுமதியே தன்னை அந்த நர்ஸிடம் சென்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஓ" என்று அவள் விழிகள் உயர்ந்தன. இதழ்கள் அழகாய்க் குவிந்தன.

"அந்தப் பேஷண்ட்டின் சிநேகிதரா நீங்கள்? உங்களுக்குத் தாமதமாகச் செய்தி கிடைத்தது, அவருடைய துரதிருஷ்டம்தான் என்று நினைக்கிறேன். என் பெயர் வசந்தி" என்றாள் அவள்.

"உங்களைச் சந்தித்ததில் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். ஆமாம், மிஸ்..."

"மிஸ்தான்... சொல்லுங்கள்!"

"அவருடைய துரதிருஷ்டம் என்நீர்களே, அது எப்படி?"

"இப்படி ஒரு சிநேகிதி பக்கத்தில் நின்று பார்த்துக்கொள்கிறார்.. என்றால், எந்த நோயும் பறந்துவிடுமே, அதற்காகச் சொன்னேன்."

சிரிப்பு பொங்கிக் கொண்டு வருகையில், வாயைப் பொத்திக் கொள்வது, சுமதியின் வழக்கம். வசந்தியைச் சந்தித்த இரண்டாவது நிமிஷமே காலம் காலமாக அவர்கள் சிநேகிதிகளாக இருந்த உணர்வு சுமதிக்கு ஏற்பட்டது. அதே உணர்வு, வசந்திக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

"மிஸஸ் கணேசன்?"

"இன்னும் இல்லை!"

"சாரி.. மிஸ் சுமதி. நாம் யுகம் யுகாந்திரமாகப் பழகியது மாதிரி தோணலை?"

"இப்பத்தான், இந்த நிமிஷம்தான், நானும் அப்படித்தான் நினைத்தேன்? வசந்தி."

மனசின், விசித்திர இலக்கணத்தை யார் அறியக் கூடும்? சிநேகமென்னும் சுயம்வரத்தில், அது யாரை நிராகரிக்கும் என்று யார் அறியக்கூடும்?

நர்சுகள் அமரும் தனி அறைக்கு சுமதியை அழைத்துச் சென்றாள் வசந்தி.

"உங்களுக்கு என்னுடன் பேசிக் கொண்டிருப்பதில் சங்கடம் இல்லையே...?"

"சேச்சே? அவரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்."

வசந்தி, ஒரு சாதாரண, கீழ் மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அப்பா இல்லை. அம்மா, டீச்சராக இருக்கிறாள், அண்ணன் ஒருவன் உண்டு. திருமணம் செய்து கொண்டு தனிக் குடித்தனம் சென்று விட்டான்.

(தொடர்ந்து வரும்)



# ஒப்பந்தம்

**"என் உயிர் வள்ளியம்மைக்கு! உன் நீண்ட கரு இமைகள் என் கனவில் வந்துபோகும்....!"**
**— சுப்பையா**

இரவு தன் மூன்றில் ஒரு பகுதியைப் பூர்த்திசெய்திருந்தது. அந்தக் கும்மிருட்டை குறுட்டு லாம்பு குசலம் விசாரித்துக் கொண்டிருந்தது. லாம்பை சிறிது தூண்டிவிட்ட சுப்பையா, பேனாவையும் வெற்றுத்தாளையும் எடுத்துக் கொண்டு அந்த அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்தான்–கண்கள் மெல்லக் கசிய ஆரம்பித்தது. பேனாவில் இருந்த மையும் கூடவே கசியத் தொடங்கியது.

1ம் கொலனி,
குன்றூர்,
தமிழ் நாடு.

*என்றும் என் உயிர் வள்ளியம்மைக்கு,*
*நான் நலம்.*

கண்ணீர்த் துளியொன்று தாளில் வீழ்ந்து தெறித்தது.

சுப்பையாவுக்கு அப்போது வயது இருபத்திரெண்டு இருக்கும். "ரோசல" தேயிலைத் தோட்டத்தில் அவனும் ஒரு கூலி. கருங்கறுப்பு நிறமுடையவன். உழைப்பின் சின்னமாய் அமைந்த உடல்வாகு. அகன்ற மார்பு.

அதே தோட்டத்தில் அவன் இருந்த லயத்திற்கு எதிர்ப்புறத்தில் இருந்தவள் வள்ளியம்மை. அவனை ஒத்தநிறமுடையவள். இருவரும் சிறுவயதில் இருந்தே ஒருவருக்கொருவர் இனம்புரியாத பாசத்தால் பிணைக்கப்பட்டவர்கள்.

இப்போது நினைத்தாலும் சுப்பையாவுக்கு உடல் சிலிர்க்கும். ஒரு நாள் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது, வள்ளியம்மை கேட்டாள்.

"டேய், இந்த சவுக்காரத்தை தாவேன்டா!"

"போடி, உனக்கு எந்த சவுக்காரம் போட்டாலும் சிவக்க மாட்டாய்!" சொன்னான் சுப்பையா.

"இவர் பெரிய வெளளைத்துறையாக்கும்!" என்றவாறே மூக்கைச் சுழித்தாள் வள்ளியம்மை.

வள்ளியம்மைக்கு வயது பதினான்கு இருக்கும். ஒருநாள் லயம் முழுவதும் அந்தச் செய்தி அடிபட்டது. "வள்ளியம்மை பெரியவளாகிட்டாளாம்." அன்றிலிருந்து வள்ளியம்மை சுப்பையாவோடு கதைப்பதில்லை. ஒரு புன்சிரிப்பு மட்டும் உதிர்ந்து விழும். சுப்பையா எத்தனை தடவைகள் முயற்சித்தும் தோற்றுப் போனான்.

ஆனாலும் அந்த லயத்தின் முழுப்பகுதியும் சுப்பையாவையும் வள்ளியம்மையையும் இணைத்தே பார்த்தனர். சுப்பையாவின் நண்பர்கள் அவனைக் கிண்டல செய்தனர். அதே போன்றே கொழுந்து பறிக்கும் வேளையில் வள்ளியம்மையின மனதைப் பறிப்பது போல் கதையளப்பார்கள் அவளின் நண்பிகள். வள்ளியம்மைக்கு வேலை வேகமாக ஓடாது. காதில் அவர்கள் வேதம் மட்டும் தேனாய்ப் பாயும். சிரிப்பாள். அந்தச் சிரிப்பொன்று போதாதா சுப்பையாவை



யாழ் —ஞானகணேசன்

சிறைப்பிடிப்பதற்கு!

ஒரு மாலை நேரம், கொழுந்து பறித்துவிட்டு வீடு திரும்பிய வள்ளியம்மையை மலைமுகடுகளின் மறைவில் இருந்து இழுத்துப் பிடித்தான் சுப்பையா. ஒரு கணம் திகைத்தாள் வள்ளியம்மை. மறு கணம்...

"வள்ளியம்மை...!" மெல்ல அழைத்தான் சுப்பையா.

"உம்..." வள்ளியம்மையின் சத்தம் சலனப்பட்டது.

"என்னோட கதைக்கமாட்டியா?"

"கதைப்பேன்."

"எப்போ?"

"பிறகு"

"பிறகென்றால்?"

"பிறகுதான்." பறித்துக் கொண்டு தாவிப் பாய்ந்தது அந்தக் கவரிமான்.

அப்போதுதான் மலையகத் தமிழர்களுக்கு இடியாக வந்தது சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்.

மலையக தமிழர்கள் மூச்சுவாங்கி நிற்க, இருவரின் கையொப்பத்தால் இருட்டடிக்கப்பட்டது மனித நேயம். "பிழை" என்று கூறவோ அன்றி தடுக்கவோ எந்த மனிதனோ, நாடோ வாய் திறக்கவில்லை.

ஆறுமாதகால அவகாசத்துக்குள் விரட்டப்பட்டனர் 'பிரஜை உரிமையற்றவர்கள்.' பிள்ளைகளைவிட்டுப் பிரிந்த தாய்; தந்தையர், மனைவியை விட்டுப் பிரிந்த கணவர்கள், காதலனை விட்டுப் பிரிந்த காதலிகள் என பிரிவுத் துயரின் கண்ணீரும் கலந்து மலையக ஆறுகள் பெருக்கெடுத்தோடின.

"புதுவாழ்வு" எனும் புதுப்பெயருடன் இந்தியாவின் இராமேஸ்வரக் கரையை அண்மித்தவர்களுக்கு, தாங்கள் ஏமாற்றப் பட்டுவிட்டோம் என்ற செய்தி மனத்தை பிழிந்தெடுத்தது. கரையில் இறங்கியோர் கதிகலங்கினர். முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டனர்.

இன்றும் அவர்கள் கண்களின் வெறித்த பார்வையில், தங்கள் பிறந்த மண்ணும், உற்றார் உறவினரும், வஞ்சிக்கப்பட்ட தங்கள் தலைவிதியும் அடிக்கடி வந்துபோகும்.

சுப்பையா கடிதத்தைத் தொடர்ந்தான்;

*நீ நலமாய் இருக்க எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மேலும், என்றோ ஒருநாள் உன்னைச் சந்திப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. உன் நீண்ட கரு இமைகள் என் கனவில் அடிக்கடி வந்துபோகும். வஞ்சிக்கப்பட்ட எங்களுக்கு என்றும் ஆண்டவன் துணையிருப்பான் என்ற நம்பிக்கையில் இக் கடிதத்தை முடிக்கிறேன்.*

*இப்படிக்கு,*
*உன் பாசமிகு,*
*சுப்பையா.*

கடிதத்தை உறையில் இட்ட சுப்பையா நிமிர்ந்து பார்த்தான். நேரம் நடுச்சாமம் பன்னிரெண்டைத் தாண்டிவிட்டது. அமைதியான அந்தச்சூழலை ஓர் ஆந்தையின் அலறல் மட்டும் அலங்கோலப்படுத்திக் கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# சாருலதா ரீச்சர்

"ஏன் இந்த முடிவுக்கு வந்தே பாலா....?"
"எனக்கு வேறு வழி தெரியலை!"
"நான் வழி சொல்லட்டுமா பாலா?"



மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

**1988** எமது ஊர் கலவன் பாடசாலையில்,

உயர்தர வர்த்தகப் பிரிவில் முதல்வருட மாணவனாய் நான் காலடியெடுத்து வைத்த நேரம்தான், எனது தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்திருந்தார்.

கொஞ்சம் கஷ்டமான, வறுமைப்பட்ட குடும்பம் எங்களுடையது.

சாதாரண தரத்தில் நான் திறமையாக சித்தியெய்தியிருந்தும்... விதிவசத்தால்- தந்தையின் உடல்நிலை மோசமானதால்... உயர் வகுப்புத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் என்னால் பாடசாலை போக முடியவில்லை.

ஒருநாள் இரு நாள் எனத் தொடர்ந்து பத்து நாட்களாயிற்று....

பதினாறாவது நாள்!

நான் எனது தந்தைக்குக் கஷாயம் (ஆயுர்வேத ஔடதம்) ஊட்டிக் கொண்டிருந்த ஒரு மாலைவேளையில் நண்பன் கிருஷ் என்னைத் தேடி வீடு வந்தான்.

வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கதைக்க ஆரம்பித்தோம்.

"பாலா....(எனது பெயர்- பாலகுமாரனின் சுருக்கம்) என்னடா ஸ்கூல கட்பண்ணிட்டே வர்றே....என்னா ஜாலி தெரியுமா? புதுசு புதுசா கலர் கலரா ஃபிகருங்க வருது. ராக்கிங் நடக்குது.....நம்ம முருகேஷ்கூட எங்கேயோ தூரத்தேயிருந்து வந்திருக்கிற புது மாணவியொருத்தியை சைட் அடிச்சு நேற்றைக்கு லெட்டரும் கொடுத்தாச்சு.... என்னா ஜமாய் ஜமாய்க்கிறாண்டா.....ஒரே ஜாலிதான்...நீ எப்போ வருவே...?"

"இப்போதைக்குச் சொல்ல முடியாதுடா....."

"ஏன்?"

"அப்பாவுக்கு சுகமாகனும்.... அல்சர் முத்திடுச்சு"

"அப்போ இப்போதைக்கு வரமாட்டேங்கிறியா?"

"தெரியல!"

"சரி...உனக்கு ஒன்னு தெரியுமா....? அக்கௌண்ட்ஸ் பாடமெடுக்க புதுசா ஒரு ரீச்சர் வந்திருக்காங்க....இளம் ரீச்சர்டா... நமக்கென்ன பதினெட்டு வயசா....ரீச்சருக்கு 25 இருக்கும்டா... என்னா அழகு.... நிறம் மாறாத பூக்கள் ரதி மாதிரி. நீ பார்க்கணுமே.....! வகுப்புல ஒருத்தன் குறையுது என்று உன்னை விசாரிச்சுப் பார்த்தாங்கடா... ரொம்ப நல்ல ரீச்சர். இன்னும் கல்யாணம்கூட ஆகலையோ...என்னமோ....!"

"பெயர் என்னடா?" என்றேன் என்னையறியாமல்-

"சாருலதா ரீச்சர்டா," என்றவன் போய் விட்டான்.

அடுத்த வாரம் மூன்றாம் நாள் பாடசாலை போனேன்.

முதல் பாடமே அக்கௌண்ட்ஸ் பாடமாதலால்....மணியடித்து ஓயும் முன்னரே சாருலதா ரீச்சர் வகுப்புக்கு வர....முதல் முறையாகப் பார்த்தேன். பார்வை நிலைத்தது.

மனசு படபடத்தது.

மனதுக்குள் ஏதோவொரு இனம்புரியாத உணர்வு படர்ந்தது.

ரீச்சர் என்னையெழுப்பி பெயர், விபரம், தந்தையின் தேக நிலைமை எல்லாம் சேர்த்து அன்பாய்- ஆதரவாய் விசாரித்துவிட்டு பாடத்தை ஆரம்பிக்க-

சாருலதா ரீச்சரின் அன்பில்- அழகில்- ஆளுமையில் நான் மெய்மறந்துபோய்... எதையும் கிரகிக்காமல் ரீச்சரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

நண்பன் கிருஷ் சொன்னதுமாதிரி, ரீச்சர்- நிறம்மாறாத பூக்கள் ரதியேதான்.

அடுத்த நாள் மறுபடியும் பாடசாலை போகவில்லை.

தந்தையை அழைத்துக்கொண்டு வைத்தியரிடம் போய்வந்து-

மாலை மயங்கும் வேளையில் கடைத் தெருவுக்குப் போய்க்கொண்டிருந்தேன்.

எனது வீட்டிலிருந்து ஒரு நூறுயார் தாண்டியிருப்பேன்- எனது வீட்டிலிருந்து நான்காவது வீடு சேதுராம் என்பவருடையது. அங்கிருந்து "பாலகுமாரா" என்று குரல் கேட்டு நின்று- நிமிர்ந்து- பார்த்தேன். ரீ....ச்.....ச...ர்!

சாருலதா ரீச்சர்!

எளிமையான கொட்டன் சாரியணிந்து....

அப்போதுதான் குளித்து தலையில் பூ வைத்து.....

தேவதை மாதிரி.....

நான் அதிசயமாகப் பார்த்தேன். "என்ன ரீச்சர்...நீங்க எப்படி?" திணறினேன்.

"நான் இங்கே....மிஸ்டர் சேதுராம் வீட்லதான் இருக்கேன். தூரத்து சொந்தம்... எங்க ஊர்லயிருந்து மாற்றல் கெடச்சு இங்கே வந்துட்டேன்...."

"ஏன் ரீச்சர் கூப்பிட்டீங்க?"

"இல்ல எனக்கு கவிதைகள்னா ரொம்பப் பிடிக்கும். உன்கிட்ட நிறையக் கவிதைப் புத்தகங்கள் இருக்குன்னு கேள்விப்பட்டேன்.... எனக்கு ரெண்டு மூன்று புத்தகங்கள் தந்தின்னா படிச்சிட்டுத் தர்றேன் பாலகுமாரா...."

"தர்றேன் ரீச்சர்"

என்று திரும்பி வந்து, வீட்டில் இருந்த, நான் நேசித்து வந்த மு. மேத்தா, வைரமுத்து ஆகியோரின் கண்ணீர்ப்பூக்கள், வெளிச்சம் வெளியேயில்லை, நந்தவன நாட்கள், ஒரு வானம் இரு சிறகுகள், நடந்து முடிந்த நாடகங்கள், என்று எல்லாப் புத்தகங்களையும் அள்ளிக்கொண்டு போய்க் கொடுத்தேன். ரீச்சர் முகம் மலர 'தாங்ஸ்' சொன்னார்.

இதுபோன்ற நிறைய 'தாங்ஸ்'களை ரீச்சரிடம் எதிர்பார்க்க மனசு ஏங்கிற்று.

சாருலதா ரீச்சர் சிரிக்கும்போது அவரது வலக் கன்னத்தில் விழும் அந்தச்சிறுகுழி மட்டும் என் மனசுக்குள்- கண்களுக்குள் சதாவும் இருந்துகொண்டேயிருந்தது.

நான் ரீச்சருக்கு மருதாணிக் கோலமிட புதுடிசைன் சொல்லிக்கொடுத்தேன். ரீச்சர் எனக்கு புதுக்கவிதை விளக்கம் தந்தார். நான் எமது தோட்டத்து இளநீரை வெயில் காலத்தில் வெட்டி வெட்டிக் கொடுப்பேன். ரீச்சர் இரசித்து சுவைத்துக் குடிப்பார். நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். ரீச்சர் எனது ரீ சேர்ட்டில் பெப்ரிக் பெயிண்டால் ஓவியம் தீட்டித் தருவார். எங்கள் வீட்டுக்கு வருவார்.

**1989**

நான் உயர்தர வகுப்பில் இரண்டாம் வருட மாணவனாயிருந்த நேரம்-

எனக்கு வயது பத்தொன்பதாகியிருந்தது.

எனது வகுப்பு இதர நண்பர்கள் 'டீன்ஏஜ்' காதலில் விழுந்த நேரம்-

முருகேசன் சக வகுப்புத் தோழியான ராணியின் பின்னால் அலைந்த நேரம்; ஜவாஹிர் நூர்ஜஹானைச் சுற்றிய நேரம்; மைக்கல் மேரியோடு கிசுகிசுக்கப்பட்ட நேரம்; பார்த்திபன் நீரஜாவின் பாராமுகத்தினால் சிகரட் புகைக்கப் பழகிய நேரம்.... இப்படியாக பருவக் கிளர்ச்சியில் ஆரம்பக் காதலுக்குள் எல்லோரும் மூழ்கியிருந்த நேரம்....

என் மனசுக்குள் மட்டும் சாருலதா ரீச்சர் இருந்தார்.

**1990**

இரவு சிம்னி விளக்கொளியில்- எமது வீட்டில் வைத்து சாருலதா ரீச்சரிடம் கேட்டேன். "ரீச்சர் நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல்ல?"

ரீச்சர் திடுதிப்பென நிமிர்ந்தார்.

நான் யதார்த்தமாய் பயந்துதான் போனேன்.

பின்பு, ரீச்சர் சிரித்தபடியே கேட்டார். "ஏன் பாலகுமாரா?"

"சும்மா ரீச்சர்...இல்ல நீங்க யாரை யாவது காதலிக்கிறீங்களா ரீச்சர்?"

ரீச்சரின் முகம் குங்குமமாய்ச் சிவந்து போனதை உணர்ந்தேன். கோபமா? நாணமா? எதுவுமே புரியாதபோது ரீச்சரே சொன்னார்.

"எல்லாம் முடிஞ்சு போச்சு பாலா....!"

"எது... என்னவெல்லாம் முடிஞ்சு போச்சு?"

"காதல், கல்யாணம் எல்லாம் முடிஞ்சு போச்சு பாலா!"

நான் பொட்டென நெற்றியில் வியர்த்தேன். "புரியலை ரீச்சர்!"

சாருலதா ரீச்சர் கொஞ்சம் தாமதித்து பின் சொன்னார்.

"நான் இந்த ஊருக்கு வர்றதுக்கு ஒரு வருஷத்துக்கு முன்னாடிதான் எனக்குக் கல்யாணமாச்சு. பாலா... காதலிச்சுத்தான் கல்யாணம் செய்துகொண்டேன். ஆனா விதி.... பதினைஞ்சு நாளிலேயே என் மாங்கல்யம் பறிபோச்சு.... தாலி அறுந்துட்டுது. ஏன்...கல்யாணம் பண்ணாமலேயே, காதல் பண்ணாமலேயே இருந்திருக்கலாம்... என்னைக் கல்யாணம் பண்ணின நேரம் சரியில்லாததாலதானாம் அவர் செத்துப் போயிட்டாராம். ஆமா பாலா...லாரி விபத்துல என் கணவர்- கல்யாணமாகி பதினைஞ்சு நாளிலேயே செத்துப் போயிட்டார். ஊரே ஏன் உறவுகள் கூட என்னைத்தான் காறித்துப்புது பாலா....என் தலையெழுத்து அப்படி... அதான் பழிவாக்குப் பொறுக்காம இங்க வந்துட்டேன்...." ரீச்சர் மெல்லமாய் அழ ஆரம்பிக்க-

நானும் உடைந்துபோனேன். மனதுக்குள் அழுதேன்.

**1991**

நான் க.பொ.த. உயர்தர அரசாங்கப் பெறுபேற்றுக்காகக் காத்திருந்த நேரம் அல்சர் முற்றி எனது தந்தை இறந்துபோக, அது என்னைப் பொறுத்து ஒரு பேரிழப்பாகிப் போனது.

மனதுக்குள் எரிமலை வெடிக்க நான் அழுதேன். அழுகையை அடக்கமுடியவில்லை. சுவரோரமாய் ஏதோ மனச்சுமை தீர நான் அழுதுகொண்டிருந்த நேரம்தான் சாருலதா ரீச்சர் வந்தார்.

என்னருகே உட்கார்ந்தார்.

ஆறுதலாய் தலையைத் தடவி....அவரது மடிமீது என்னைப் படுக்கவைத்து முதுகில் தட்டிக்கொடுத்தார். என் மனதுக்குள் பெரும் சூறாவளியாக துக்கம் பிரவாகித்தது. என்றாலும்... மனச்சுமை குறைவதை உணர்ந்தேன்.

தொடர்ந்து இந்த ஆறுதலும் சுகமும் நீடிக்கவேண்டும் என்று மனதுக்குள் ஒரு பிரார்த்தனை இருந்துகொண்டேயிருந்தது.

**1992**

எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துவிட்டிருந்த நேரம், குடும்பத்தில் வறுமையும் கஷ்டமும் அதிகரித்திருந்தது. முகாமைத்துவத்தில் உயர்படிப்புப் படிக்க ஆசையிருந்தும் குடும்பக் கஷ்டம் உணர்ந்து 'ஆர்மி'க்கு அப்ளை செய்தேன். நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்திருக்க, 'அழைப்பை' எடுத்துக்கொண்டு சாருலதா ரீச்சரிடம் போனேன்.

ரீச்சர் கண்ணீரோடு பார்த்தார். சொன்னார்:

"ஏன் இந்த முடிவுக்கு வந்தே பாலா....?"

"வேறு வழி தெரியல...."

"நான் வழி சொல்லட்டுமா பாலா....?"

மௌனமாயிருந்தேன்.

"நானும் சம்பாதிக்கிறேன் பாலா...ஆனா எனக்கு யாரிருக்கா பாலா....? நீ தொடர்ந்து படிக்கணும் பாலா...எனது ஆசையும் அது தான். உனக்கு, உங்கம்மாவுக்கு அத்தனை செலவுகளையும் நான்தான் செய்யுறேன்று விதியிருந்தா மாற்றமுடியுமா....? சொல்லு நீ உயர்படிப்புப் படிக்கணும், நானிருக்கேன்... அத்தனை செலவுகளையும் நான் கவனிச்சுக்கிறேன்....!"

எனது உடம்பு சில்லிட்டு-

சடாரென அழுகை வெடிக்க...

சாருலதா ரீச்சர் எனக்கு அந்தக்கணம் தெய்வமாகத் தோன்றினார்.

அவர் பாதங்களை பூஜிக்கவேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது.

நான் சாருலதா ரீச்சரின் காலடியில் வீழ்ந்தேன்.

இப்போது எனது மனம் மிக மிக சுத்தமாக இருந்தது.

# என்னத்தைக் கண்டேன்!

எம்.சுரேஷ்

**சிலவேளை இதுதான் வாழ்க்கையோ....?**



கல்லூரிக் காலத்தில்-என்
கண்ணசைவுகள்கூட
உனக்குக் கவிதை சொல்லியிருக்கும்.
**
அதனால்தானே
என் கண்களை-நீ
அதிகபட்சம் நேசித்தாய்?
**
அப்போது எனக்கு
மீசைகூட
முளைத்திருக்கவில்லை!
இருந்தும்
நீ எனக்குப்
பச்சைக் கொடி காட்டினாயே...
எதனால்?
**
காதல் கடிதம்...
ஓ.....
அது என் மாமாவின்
பழைய கடிதத்தைப்
பார்த்து எழுதியது!
அப்போது எனக்குச்
சுயமாகக் கடிதம் கூட
எழுதத்தெரியாது!
**
சும்மா
பரீட்சார்த்த முயற்சியாய்
உனக்குக் கொடுத்தேன்.
இப்படியாகுமென்று
யார் கண்டது...?
**
அதன் பின்
நான் என்ன செய்தேன்?
எல்லாமே நீதானே...?
**
அப்போதெல்லாம்
உனக்கு என்னைப் பிடிக்கும்;
என் புலம்பல் பிடிக்கும்;
புரியாமல் நான் பேசும்
வசனம் பிடிக்கும்;
நண்பர்கள் உபயத்தில்
நான் சொல்லும்
கவிதைகள்கூட உனக்குப் பிடிக்கும்!
**
இப்போது மட்டும்
உனக்கு என்ன நடந்தது?
**
எத்தனை தடவை
என் 'செந்தில்' முகத்தைத் தடவி
'கமல்' என்று புகழ்ந்திருக்கிறாய்...?
எத்தனை தடவை
'நீங்கள் இல்லாவிட்டால்
வாழ்க்கையே இல்லை' என்று
புலம்பியிருக்கிறாய்...?
**
அப்போது உண்மையில்
'வாழ்க்கை' என்றால்
என்னவென்று
எனக்கும் தெரியாது;
உனக்கும் தெரியாது!
**
இருப்பினும்
வாழ்க்கை பற்றி-நீ
நிறையப் பேசுவாய்!
நான் சொல்லும்
அர்த்தமற்ற தத்துவங்களை
அப்படியே நம்புவாய்!
அதிகமேன்....
தொடர்ச்சியாய்
ஆறு வருடம்
"நீ குஷ்பு மாதிரி இருக்கிறாய்" என்று
நான் சொன்ன பொய்யை
நீ கடைசி வரை நம்பினாயே!
அப்போதெல்லாம்
எனக்குள்
எதைக் கண்டாய்?
**
சொர்க்கத்திற்கான "விசா"
என்னிடம் இருப்பதாக
யார் உனக்குச் சொன்னது?
**
இப்போது
கொஞ்ச நாட்களாய்த்தான்
உன்னிடம் இந்த மாற்றம்!
**
"உங்களைக் கட்டிக்கிட்டு-நான்
என்ன சுகத்தைக் கண்டேன்?" என்று
நீ அடிக்கடி புலம்புவதின்
அர்த்தம் எனக்குப் புரியவில்லை!
**
சிலவேளை
இதுதான் வாழ்க்கையோ?!
**
என்னது...?
நான் பேசுவது
கழுதை கத்துவதுபோல்
இருக்கிறதா?
**
ஐயோ.. ப்ளீஸ்...
தயவு செய்து மெதுவாகக் கத்து!
நமது மூன்றாவது மகன்
நம்மை முறைத்துப் பார்க்கிறான்!!
**

# அவன்தான் வேணும்!



ஆர்.உமா

கல்லூரியில் இருந்து வீடு திரும்பிய லதா... வீடே வெறிச்சென்றிருக்க... அவள் மனமும் இருளால் சூழ்ந்து கொண்டது. தனியாய்ச் சாப்பிடப் பிடிக்காமல் அப்படியே சோபாவில் தன்னைச் சரித்துக் கொண்டாள். வாசலில் காலடி ஓசை கேட்க நிமிர்ந்தவளின் எதிரே...

ட்ரைவர் ரமேஷ். படித்து முடித்து வேலை கிடைக்காமல் இவள் வீட்டு ட்ரைவராய் வந்து சேர்ந்தவன். அழகானவன். லதாவிற்கு அவனை ரொம்பப் பிடிக்கும். சாவியைக் கொடுத்து விட்டுச் சென்ற ரமேஷை இமைக்காமல் பார்த்தாள்.

அவள் தூங்கிய பின்னர்தான் பெற்றோர்கள் வந்தனர். அவள் எழும் முன்னர் அவர்கள் வெளியே சென்றிருந்தனர். மகளைக் கண்டு அவளிடம் ஒரு வார்த்தை பேசக்கூட நேரமில்லாமைக்குக் காரணம்...

பணம்... பணம்... பணம்...

"ஏய் லதா... என்னோட பிஸினெஸ் பாட்னரோட சன் ரவிக்கு உன்னைக் கல்யாணம் பண்ண பேசிக்கிட்டு இருக்கோம்... நீ... ஒரு ட்ரைவரைப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிக்கிறியே..? என்ன திமிர்!"-அப்பா.

"என்னோட குழந்தையையும் என்னை மாதிரி... பெற்றோர் இருந்தும் அநாதையா வளர்க்க விரும்பலை. நீங்க உங்க பணத்தால் ஒரு பெண்ணை வாங்க முடிஞ்சா வாங்கிக்குங்க... நான் போறேன்...!" என்றவாறு ரமேஷின் கரம்பிடித்து நடந்தாள் லதா.

# புரிகின்றதா....?



ஜே.புளோரன்ஸ்

தேவியின் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் மினி பஸ்ஸில் ஏறி அமர்கிறாள் கீதா. கூட்டமின்மையால் பஸ் புறப்படுவதில் ஆர்வம் காட்டவில்லை.

முன்னால் அமர்ந்திருந்த ராஜும் சேகரும் பேசுவது அவள் காதில் விழுந்தது.

"னுமதியைபா ரும்புகிறேன்வி. டிதம்க டுக்கொ ளைத்தேன்நி யமாகப ருக்கி றதுஇ...." என்று ராஜ் கூறுகிறான்.

"டுகொ, டுகொ ஞ்சகொ ள்தானேநா றகுபி றந்திடும"- இது சேகரின் பதில்...

"மலாக.. பர்சு"... என்கிறான் ராஜ்

"ம்மந க்கத்தில்ப ர்பா.. ஸ்றை கர்பி ல்லையாஇ?"- சேகர்.

"ளங்குமாவி ம்மந ஷையா?"-ராஜ்.

"யர்பெ ன்னஎ? ல்லுவாங் களாசொ?"- சேகர்-

பஸ்ஸில் கூட்டம் நிரம்ப, ராஜும் சேகரும் எழும்பி இடம் கொடுக்கின்றனர். பஸ்ஸில் ஏறிய பெண்ணுடன் ராஜ் சிரித்துப் பேசுகிறான்- அவள் பெயர் பிரபாலினி என அவர்கள் உரையாடலிலிருந்து அறிந்து கொள்கிறாள். பஸ் புறப்படுகின்றது. அவர்களின் கேலிப் பேச்சு மட்டும் நின்றபாடில்லை.... கீதா இறங்குமிடம் வர எழுந்து இறங்கத் தயாராகிறாள்.

"நீங்களாபோ.. யர்பெ.. ல்லிசொ ங்கபோ" என்கிறான் ராஜ்-

பஸ் நிற்கிறது. "ரியானச றுக்கிபொ சங்கப" என்று சத்தமாக கூறியவாறு இறங்கிச் செல்கிறாள் கீதா. பாஷை தெரிந்த அனைவரும் சிரிக்க.. இவளுக்கு பாஷை தெரியாது! என கதைத்த ராஜும் சேகரும் அசடு வழிய நிற்கின்றனர்.

(உங்களுக்கு பாஷை புரிகின்றதா? இல்லையெனின் கடைசி எழுத்தை முன்னால் போட்டு வாசியுங்கள்.)

'றகுபி ருங்கள்வா' என்றால் பிறகு வாருங்கள்...

பி.கு: காதலரின் தேசிய பாஷைகளில் இதுவும் ஒன்று. அதற்காக உத்தியோக மொழி அந்தஸ்த்து வேண்டாம்: உள்ளதும் கெட்டுப் போய்விடும்!


படிப்பகம்


www.padippakam.com

# இலக்கிய நயம்

# கண்டது காணாதது

தருவது

ரசிகன்



தனித்திருந்தாள்-தவித்திருந்தாள்
கண்கள் இரண்டும் பனித்திருந்தாள்!

பஞ்சணையும் பழுதாகிப் பாழாச்சு.
நெஞ்சினிலும் சோகம் தழும்பாச்சு.
கொஞ்சவரும் முகம் கனவாய் போயாச்சு!
கொல்ல வரும் பொழுதாக இரவாச்சு!

வானில் நிலா புறத்தினிலே
வெளிச்சம் தரலாம்!
அவனில்லா அகத்தினிலே
வெளிச்சம் வருமா?

எண்ணெய் இல்லா விளக்கினிலே
ஒளியும் தோன்றுமா?
என்னவன் இல்லா உள்ளத்திலே
களிப்பும் தோன்றுமா?

கண்ணை விற்றுச் சித்திரத்தை
வாங்குதல்போல-
கண்ணான என்னை விட்டு
பொருள் தேடி நாடு கடந்தார்!

முறித்து போட்ட கிளையாக
தனித்துக் கிடக்கிறேன்.
ஒடித்துப் போட்ட
மதயானை எங்கே போனது?

பாதிக்கதைதானே
நீ சொல்லித் தந்தது?
மீதிக் கதை அறியாமல்
என் மேனி துடிக்குது!

இழுத்துவந்த இன்பத்தேரை
நடு வீதியில் விட்டாய்!
உழுதுவந்த உன் நிலத்தை
ஏன் பாதியில் விட்டாய்?

தொழுது நின்றேன்- தொழுது நிற்பேன்
தெய்வத்தையெல்லாம்!
பொழுது புலரும் முன்பே
உன் முகத்தை காண்பதற்காக!

பழுது காணா அன்பினையே
உன்னிலே வைத்தேன்
விழுதுவிட்ட காதலிலே
நிழலினைக் கண்டேன்!

போர்க்களமாய் ஆனது நம் பஞ்சணையன்றோ
புதுச் சுவைகள் அறிந்தன நம் நெஞ்சுகளன்றோ

இதழ்களிலே நீ வடித்த காவியம்
இடையினிலே நீ வரைந்த ஓவியம்
கனவினிலும் மறக்காத சாகசம்
நனைவதெப்போ மறுபடியும் நாமதில்?

வெள்ளிநிலா வானத்திலே முளைத்திடும்
கள்ள உலா உன் முகத்தில் தெரிந்திடும்
கொள்ளையிட நீ வருவாய் பள்ளிக்கு!
தொல்லைகளை நீ தருவாய் கள்ளிக்கு!

விடியும்வரை புதிர் அறியும் போரிலே
விடிந்தபின்னும் புதிர் தெரியா போகுமே!

நினைத்தாள்- நெகிழ்ந்தாள்
இனித்ததை நினைத்தாள்!

"ஒரு கொடியில்
இரு குலைகள் அற்புதம்!
ஒரு சிலையில்
பல கலைகள் அதிசயம்!

நானறிய வேண்டுமடி
நடமாடும் சிலையே உன் இரகசியம்!"

மறைக்க முடியாமல்
புன்னகை சிதறும்!

"இதழில் பாயும் புன்னகை வெள்ளம்
எதிரே நின்றவன் கவிழ்ந்து போனேன்
பூவே- எந்தன் புன்னகை ராணி
கைகொடு தாயே கரைசேர வேண்டும்!"

கையை நடிப்பாய் நீட்டிப் பார்க்க
மெய்யாய் கையை பற்றிக் கொண்டு
செவ்வாய்மீது தன் வாய் பதித்து
கொய்வான் சுகங்கள் கொய்வானே!

நெடுமூச்சொன்று கிளர்ந்தது
நெஞ்சில் சோகம் உயர்ந்தது!

எல்லாம் கனவாய் போயாச்சு
வெல்ல நினைவுகள் கரைந்தாச்சு
பொல்லாப் பழியாய் பிரிவாச்சு
சொல்லா சோகம் மலையாச்சு!

நினைத்தாள்- நெகிழ்ந்தாள்
நீள்விழிகளை நீரில் நனைத்தாள்!

வரட்டும் ஒருநாள் வரட்டும்
புகட்டும் பாடத்தை புகட்டுகிறேன்
வாட்டும் தனிமையில் போடுகிறேன்.
மனதில் உறுதி பிறந்தது.


மெல்ல பொழுதும் கரைந்துபோக
"காலையில் யாரது கதவருகில்?"
கோபத்தில் திறந்தாள்
அட....அவன்தான்!

நெஞ்சு முழுக்க நீர்வீழ்ச்சி
கெஞ்சு முகம் கண்ட பெரு மகிழ்ச்சி

கட்டிக்கொண்டான் கரும்பென்று
பற்றிக் கொண்டாள் மரமென்று
கொட்டித் தீர்த்தான் கடன் எல்லாம்
வாங்கிக் கொண்டாள் வட்டியுடன்!

"மனமே! மனமே!
உறுதி எங்கே?
சூரியன் கண்ட பனிபோலே
காதலர் கண்டதும் கரைந்தனையோ?"
புன்னகையுடனே வினா தொடுத்தாள்.

மை இன்றி இருந்த
கண்களுக்கு
மை தீட்டி பார்த்தாள்
களிப்புடனே!



மைதீட்டும் போதுதான்
மெய் உணர்ந்தாள்!

கண்ணுக்கு மை
தீட்டும்போது
மை தீட்டும் கோல்
கண்ணில் தெரிவதுண்டோ?

இல்லையன்றோ?
அதுபோல
காதலர் முன்னே வந்துவிட்டால்
அவர் குற்றம்
எதுவும் தெரிவதில்லை!

கோல் காணா விழிபோல
பழுது காணாது மனதும்!

விடையைக் கண்டாள்
களிப்புற்றாள்!
மனதில் இன்பம்
பெருக்குண்டாள்!

*"எழுதுங்கால் கோல்காணாக்-*
*கண்ணேபோல் கொண்கன்*
*பழிகாணேன் கண்ட விடத்து"*
குறள்: 1285, அதிகாரம்: 129.

## சிந்தியா பதில்கள்

* தற்காலத் தமிழ் சினிமாவில் சிறந்த வில்லன் என்று யாரைக் கருதுகிறீர்கள்?

ஏ. பாலா, கலஹா.

*அறுவையான திரைக்கதையை!*

—●●—

* டியர் சிந்தியா! தீராத மனநோய் எது?

ஏ.ஜே.எம். ஜ.ஃபர், கொழும்பு-15.

*சந்தேகம்!*

—●●—

* யாழ் மக்கள் ஆயுதக் கலாசாரத்தை வெறுப்பதாக ஏனைய இயக்கத்தினர் கூறுகிறார்களே?

ஆர். ரங்கன், திருமலை.

*அவலை நினைத்து உரலை இடிப்பது போல, யாரையோ தாக்குவதாக நினைத்துக் கொண்டு தங்களையே தரம்தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.*

—●●—

* மூட நம்பிக்கைகளால் பலன் இருக்கிறதா?

எம்.என். முஸம்மில், புத்தளம்.

*சில சந்தர்ப்பங்களில் இருக்கலாம். உதாரணமாக ஒரு கதை: ஒரு ராஜா இருந்தார். நல்லவர். வல்லவர். ஆனால் ஒரே ஒரு பலவீனம் அவரிடம் இருந்தது; அது முன்கோபம்.*

*முன்கோபம் காரணமாக நல்ல நண்பர்களையும் பகைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறதே என்று வருத்தப்பட்டார்.*

*தன்னுடைய குலதெய்வத்தை நினைத்து வேண்டுதல் செய்தார். குலதெய்வம் அவர் முன் தோன்றியது. ஒரு தங்கக் குவளையைக் கொடுத்தது.*

*"உனக்கு எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ, அப்போதெல்லாம் இந்த மந்திரக் குவளையால் மூன்று முறை தண்ணீர் குடி. கோபம் பறந்து போய்விடும்," என்று கூறிவிட்டுப் போனது.*

*ராஜாவும் கோபம் வரும்போதெல்லாம் அப்படியே செய்தார். படிப்படியாக அவரது முன்கோபம் மறைந்தது. இனிமேல் இந்த மந்திரக் குவளை எதற்கு என்று நினைத்தார் ராஜா. குலதெய்வத்தை அழைத்தார்.*

*"இந்தாருங்கள் குவளை. இனி இது எனக்குத் தேவையில்லை. தேவை உள்ளவர்களுக்கு கொடுங்கள்!" என்றார்.*

*குலதெய்வம் நகைத்துவிட்டு ராஜாவிடம் சொன்னது: "ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேள். இது சாதாரணக் குவளைதான். நீ குடித்த தண்ணீரில்தான் விஷயம் இருக்கிறது. ஒருவனுக்கு கோபம் வந்தால் யோசிக்க நேரம் இருக்காது. மூன்று தம்ளர் தண்ணீர் குடித்தால் யோசிக்க அவகாசம் கிடைக்கும். உணர்ச்சிகள் அடங்கி கோபமும் தணிந்துவிடும்!"*

—●●—

* பாகிஸ்தான் அணி வீரர் சயீட் அன்வரை சார்ஜா போட்டியில் காணவில்லையே?

எல். அமீன், கொழும்பு-09.

*நோய் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார். இன்னும் சில காலத்திற்கு விளையாடமாட்டார் என்று சொல்கிறார்கள். அவுஸ்திரேலியாவில் நடுவருடன் மல்லுக் கட்டியதால் அமீர் சோகைல் தற்காலிகத் தடையில் இருக்கிறார்.*

—●●—

* சார்ஜாவில் இலங்கை அணியின் ஆட்டம் எப்படி இருந்தது?

ம. ஜெகசோதி, கொழும்பு-06.

*அரவிந்தா அபாரம். ஜெயசூரியா நிதானம்.*

—●●—

* இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐ.தே.கட்சி ஒத்துழைக்குமா?

ஏ. தேவதாஸ், திருக்கோணமலை.

*"தீர்வுக்கு ஒத்துழைப்போம்" என்று சொல்லியிருக்கிறதே தவிர, எப்படியான தீர்வுக்கு என்று சொல்லவில்லையே! அதைத்தான் கவனிக்க வேண்டும் தேவதாஸ்.*

—●●—

* ரஜினியின் 'அருணாச்சல'த்தில் ஏதாவது திருப்பமான அம்சங்கள் இருக்குமா?

செல்வி எம். உமா, கண்டி.

*அரசியல் ரீதியாக இருக்காது. சினிமாத்தனமாகப் பார்த்தால் வி.கே. ராமசாமி பக்கா வில்லனாக வருகிறார், வடிவுக்கரசி கூன்விழுந்த கிழவியாக வருகிறார் என்று ரஜினி சொல்லியிருக்கிறார். ஏனைய செய்திகளை முன்னரே சினிவிசிட் தந்துவிட்டதே!*



'அருணாச்சலம்' படத்தின் பின்பு ரஜினி-மீசையில்லாம

—●●—

* டியர் சிந்தியா! நம்ம தலைவர் ரஜினி எப்போதுதான் அரசியலில் குதிக்கப் போகிறார்?

கே. பெரோஸ், மன்னார்.

*அவர் எப்போது குதிக்கப்போகிறாரோ தெரியாது, அவர் வீட்டில் திருடன் குதித்து ஒரு இலட்சம் ரூபாய் நகைகளைச் சுருட்டிக் கொண்டு போய்விட்டான். அப்போது ரஜினி எங்கிருந்தார் என்கிறீர்கள்? நிம்மதியாக குறட்டை விட்டு உறங்கிக்கொண்டிருந்தார். லதாதான் திருடனைக் கண்டு கூச்சல் போட்டாராம். தப்பிவிட்டான் அந்தச் சூப்பர் திருடன்!*

* இந்தியப் பிரதமர் தேவகவுடாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

எஸ். சயந்தன், நீர்கொழும்பு.

*'தேவகவுடாவே பிரதமரான பின்னர் நாமெல்லாம் ஏன் பிரதமராகக்கூடாது?' என்று குட்டித் தலைவர்கள் முதல் காங்கிரஸ் தலைவர் கேசரிவரை நினைக்கத் தொடங்கி விட்டார்கள். அதனால் தேவகவுடாவுக்கு நித்திய கண்டம்தான்!*

—●●—

* புலிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கவில்லை என்று யாசீர் அரபாத் கூறியுள்ளாரே?

ஆர். மகேஸ்வரன், மட்டக்களப்பு.

*உண்மையைத் தான் சொல்லியிருக்கிறார். அரபாத் அவர்களின் இயக்கத்தின் பெயர் 'அல்ஃபட்டா'. ஈரோஸ் இயக்கத்தினருக்குத்தான் அவர்கள் பயிற்சி கொடுத்தனர். புலிகள் இயக்கத்தில் இருந்து உமா மகேஸ்வரன், விக்கினேஸ்வரன் போன்றோர் ஈரோஸ் பட்டியலில்தான் பயிற்சிக்குப் போனார்கள்!*

—●●—

* மலையகத்தில் தொண்டமான் கட்சிக்கு கிடைத்துள்ள அடி எதைக் காட்டுகிறது?

எஸ்.எம். குமார், கொழும்பு-11.

*யானைக்கு மட்டுமல்ல, சேவலுக்கும் அடி சறுக்கும்.*

—●●—

* டியர் சிந்தியா! தற்போதெல்லாம் பேய், பிசாசுகள் எத்தனை மணிக்கு துயில் எழும்புகின்றன?

ஆர்.எம். வண்ணன், செங்கலடி.

*நீங்கள் எப்போதெல்லாம் துயில் எழுகிறீர்களோ, அப்போது! பேய், பிசாசு என்பதெல்லாம் அவரவர் மனதில் இருக்கும் பிரமைகள்தானே!*

—●●—

* டியர் சிந்தியா! காதலிக்கும் பெண்ணின் கைகள் தொட்டு நீட்டினால் துண்டுத் தகரமும் தங்கமாகுமாமே? அதை அடகுவைக்கலாமா?

தி. சுபாஷ், தலவாக்கலை.

*உம்மைப் போன்ற புத்தியுடைய காதலனின் கைகள் தொட்டு வாங்கினால் அந்தத் தங்கம்கூட மறுபடி தகரமாகிவிடுமய்யா: தகரமாகிவிடும்!*

—●●—





## ஸ்போர்ட்ஸ்

### ஷேன் வோர்ண் ஓய்வு பெறுவாரா?



உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ண், ஓரிரு வருடங்களில் தான் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணியில் விளையாடிவரும் ஷேன் வோர்ண், கேப்டவுனில் நிருபர்களிடம் கூறியதாவது:

"இங்கிலாந்து- அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இந்த ஆண்டு நடைபெறும் 'ஆஷஸ் கிண்ணப்' போட்டித் தொடர்தான் எனது கடைசி இங்கிலாந்துப் பயணமாக இருக்கும். அடுத்த 'ஆஷஸ் கிண்ணத்' தொடர் 2001ல் வரும் போது எனக்கு 32 வயதாகி விடும். 35 அல்லது 40 வயது வரை விளையாடும் தெம்பு என்னிடம் இல்லை.

இரசிகர்களும், எனது அணியும் என்னிடம் அதிக எதிர்பார்ப்பு வைத்துள்ளார்கள். இதனால் எனது மனச்சுமை அதிகரித்துள்ளது. இப்படியே எவ்வளவு நாள் தாக்குப்பிடிக்க முடியும் என்று தெரியவில்லை.

கிரிக்கெட் வாழ்வில் என்னுடைய ஓய்வுக்கு காயங்கள் காரணமாக இருக்காது. மன அழுத்தம்தான் முக்கிய காரணமாக இருக்கும். என்னால் விளையாட முடியவில்லை என்ற நிலை வரும்போது உடனடியாக விலகி விடுவேன்.

அளவுக்கு அதிகமான டெஸ்ட் போட்டிகள் காரணமாக நான் ஓரிரு வருடங்களில் ஓய்வு பெற்று விடுவேன்." இவ்வாறு அவர் கூறினார்.

## ஈசுர வருடப் பிறப்பு

தாத்ரு வருடம் முடிந்து, இந்து வருடச் சுற்றில் 11வது வருடமான ஈசுர வருடம் ஏப்ரல் 13ம் திகதி முன் இரவில் பிறக்கிறது. அன்றைய தினம் சூரியன் மீன இராசியில் தன் பயணத்தை முடித்துக்கொண்டு மேட இராசிக்குள் பிரவேசிக்கிறார்.

***நக்க னெனுமீச் சுரவருஷ நாமமதின் மிக்க பதினெட்டு வகை வேளாண்மை-தக்க விளைவுண்டு மாரியுண்டு மேதினியின் மாக்கள் தளர்வின்றி வாழ்வார் தழைத்து.***

இப்புதுவருடத்திற்கான இப்பழம்பாடலில் பொதுவாக நல்ல பலன்களையே சுட்டிக் காட்டப்படுகிறது. இருப்பினும் பொதுவாக மழை மத்திமமாகவே பெய்யும். காற்றுக் குழப்பங்கள்; வேலையில்லாத் திண்டாட்டம்: ஆயுதங்களின் அதிகரிப்பு; நாணயம் பெறுமதி குறைதல்; அரசியல் குழப்பம் போன்ற தீமைகளும் உண்டு என்று பொதுப்பலன் கூறுகிறது.

**வாக்கிய பஞ்சாங்கப்படி** ஈசுர வருடம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 8.37க்கு விருட்சிக லக்கினத்தில் திருவாதிரை நட்சத்திரம் நான்காம் பாகையில் பிறக்கிறது.

**விஷு புண்ணியகாலம்:-**
பிற்பகல் **4.37** முதல் நள்ளிரவு கடந்து (14ம் திகதி) அதிகாலை **2.37** வரையாகும்.

**திருக்கணித பஞ்சாங்கப்படி** ஞாயிற்றுக்கிழமை இரவு **10.51**க்கு தனுலக்கின திருவாதிரை நட்சத்திரத்தில் பிறக்கிறது.

**விஷு புண்ணிய காலம்:** ஞாயிறு மாலை **6.51** முதல், நள்ளிரவு கடந்து (**14**ம் திகதி) அதிகாலை **2.51** வரையாகும்.

இப்புண்ணிய காலத்தில் மருத்து நீர் வைத்துக் குளித்து அடுத்த நாள் உதயத்தின் முன்னர் குளித்து புத்தாடை புனைந்து கதிரவனுக்குப் பொங்கலிட்டு பூசை செய்து ஆலயதரிசனம் செய்து, பெரியோரைக் கனம் பண்ணி, உறவினர்களுடன் விருந்துண்டு தான தருமங்கள் செய்து நற்பயனடைவீர்களாக.

**ஆடை:** சிவப்பு அல்லது சிவப்புக் கரை வைத்த ஆடைகளை அணியலாம்.

**கை விசேஷம்:** திங்கட்கிழமை காலை
6.04. முதல் 7.16 வரை
9.04 முதல் 9.40 வரை


**மருத்து நீர்:**
தலைக்கு இலவம் இலை காலுக்கு விளாவிலை.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 78

இராமபிரான் வானரப் படைகளுடன் இலங்கையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்ற தகவலை இராவணன் அறிந்து கொண்டான். இராவணனால் ஏவப்பட்ட அசுர உளவாளிகள் கடலுக்கப்பால் சென்று தகவல்களைத் திரட்டிக் கொண்டு அன்றுதான் வந்து சேர்ந்தனர். அன்று நடைபெற்ற மந்திராலோசனைக் கூட்டத்தில் தனது படைத்தளபதிகளும் பிரதானிகளும் கூறிய ஆலோசனைகளை இராவணன் கேட்டுக்கொண்டிருந்த போதுதான் அந்தரங்க ஒற்றன் வந்து, இராவணனைக்காண உளவுப் படைப்பிரிவின் தலைவன் வந்திருப்பதாக சைகை மூலம் தெரிவித்தான். உடனடியாக இராவணன் கூட்டத்தை அடுத்த நாள் வரை ஒத்திவைத்துவிட்டு ஒற்றர்படைத்தலைவனைக் காணச் சென்றான்.

## கும்பகர்ணனின் கூற்று



எண்ணற்ற வானர சேனையுடன் மகேந்திரமலை அருகே-கடற்கரையில் இராமபிரானும் இலக்குவனும் சுக்கிரீவன், அனுமன் மற்றும் வாலிமகன் அங்கதன் ஆகியோரும் வந்திருப்பதாக தனக்குக் கிடைத்த தகவல்களையெல்லாம் ஒற்றர் படைத் தலைவன் இராவணனிடம் விபரித்தான். ஒற்றர் படைத் தலைவன் தெரிவித்த விபரங்கள், எதற்கும் கலங்காத இராவணனைச் சற்று உலுப்பி விட்டது.

சாதாரண ஒரு வானரம்-உச்சக்கட்டப் பாதுகாப்புடன் கூடிய தனது நகருள் புகுந்து நாசம் விளைவித்தது. கைது செய்யப்பட்டு-வாலில் தீ மூட்டப்பட்டும், அத்தீயாலேயே நகரின் பெரும் பகுதியை எரியூட்டியது. படையினர் பல்லாயிரக்கணக்கானோரையும் தனது மகனையும் பிரதானிகள் ஐவரையும் கொன்றுவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக வெளியார் எவரும் அறியாமல், அரக்கிய வீராங்கனைகளின் கடும்காவலில் வைக்கப்பட்டிருந்த சீதையையும் கண்டு பேசியிருக்கிறது. இத்தனையையும் துணிகரமாகச் செய்துவிட்டு, தனது அரியாசனத்தை விட உயரமான ஓர் இருக்கையை-தனது வாலினாலேயே அமைத்து அதில் ஏறியிருந்து சவாலும் விட்டுள்ளது. இவ்வளவு அடாவடித்தனங்களையும் செய்த அந்த வானரத்தை, தான் நினைத்ததைப் போல கொன்று விட்டிருக்கலாம். ஆனால் தம்பி விபீடணன் தடுத்து விட்டான். அது தப்பிச் சென்றுவிட்டது.

### இராவணன் கலக்கம்

இவற்றையெல்லாம், ஒன்றன் பின் ஒன்றாக இராவணன் எண்ணிப் பார்த்தான். மூன்று உலகங்களிலும் தன்னோடு நேருக்கு நேர் நின்று எதிர்வார்த்தை பேசுவதற்குக் கூட எவருக்கும் துணிவில்லை என்றே இராவணன் துணிந்திருந்தான். ஆனால் ஓர் அற்ப பிராணி எவ்வளவோ அனர்த்தங்களைச் செய்துவிட்டுத் தப்பி ஓடிவிட்டது. இவற்றினால் இராவணன் உண்மையில் கலக்கமடைந்துதான் காணப்பட்டான்.

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் மந்திராலோசனை மண்டபம் சுறுசுறுப்படைந்தது. அழைக்கப்பட்ட அனைவரும் வந்து சேர்ந்துவிட்டனர்.

ஒரு வருடத்தில் ஆறு மாதங்களை தூங்கியே கழிக்கும் இராவணனின் மற்றுமொரு தம்பி கும்பகர்ணனையும் எப்படியாவது மந்திராலோசனைக்கு அழைத்து வருமாறு இராவணன் பணித்திருந்தான். முதல் நாள் இரவிலிருந்தே கும்பகர்ணனைத் துயிலெழுப்பும் படலம் தொடங்கியது. தாரை தப்பட்டைகள், சங்கு, சேகண்டி, பறை, குழல் அத்தனை வாத்தியங்களையும் கும்பகர்ணன் படுக்கையைச் சுற்றி நின்றவர்கள் முழங்கினர். அவ்வாறும் எழுந்திருக்கவில்லை. நல்ல வாசனை பொருந்திய புலால் உணவினையும் வண்டி வண்டியாகக் கொண்டுவந்து குவித்தனர். அதன் பின்னர் தான் சிறிதளவு கண்விழித்தான்.

எப்படியோ அரைகுறைத் தூக்கத்துடன் அங்கு வந்து சேர்ந்த கும்பகர்ணனுக்கு நாட்டில் அப்பொழுது எழுந்திருந்த நிலமையை அமைச்சர்கள் விளக்கிக் கூறினார்கள். உண்மையில், சீதாப்பிராட்டியார் இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்டு அசோகவனத்தில் வைக்கப்பட்ட தகவலும்கூட அப்போது தான் கும்பகர்ணன் காதுகளுக்கு எட்டியது. இருப்பினும் நிலமையை அவனால் பூரணமாக நிதானித்து அறிய முடியவில்லை.

இராவணன் மண்டபத்தை அடைந்து இருக்கையில் அமர்ந்த வண்ணம், ஒற்றர்கள் கொண்டு வந்திருந்த தகவல்களைத் தெரி

இராஜகுமாரன்

வித்தான். இதனால் சபையோர் மத்தியில் சற்றுச் சலசலப்பு ஏற்பட்டது. வானரம் வந்து விட்டுச் சென்றதைத் தொடர்ந்து யுத்தமே மூளக்கூடிய அபாயம் அண்மித்து விட்டதை இராவணன் உரை மூலம் அறிந்து அரக்கர் குழுவினர் திகைப்படைந்தனர். திக்கெங்கும் தன் புகழை நிலை நிறுத்திய நிகரில்லாத வீரனான தமது தலைவனை எதிர்த்து படை நடத்த எவருக்குத் துணிவு வரும், என்பதனாலேயே திகைப்புற்றனர். தவிர, அசுரர்கள் எவரும் போருக்கு அஞ்சியவர்களல்ல; அது மட்டுமல்லாமல் பெருவீரர்களான அவர்களில் பலர் போர்ப் பயிற்சிகள் பெற்றிருந்த போதிலும் போர்க்களம் காணாதவர்களே!

சபையிலிருந்தோரில் ஒருவனான தூமிராட்சன் என்ற பிரதானி தன் கருத்தைக் கூறத் தலைப்பட்டான்: "குரங்குப் படையுடன் சில மனிதர்கள் போர்க்கோலம் பூண்டு வருகின்றனர் என்பதற்காக அவர்களை எதிர்கொள்ள எமது வீரர்கள் போக வேண்டியதில்லை. எமது வீரத்துக்கு அது இழுக்காகும். ஆகவே, அவர்கள் படையுடன் வரட்டும். அப்போது அவர்களைப் புறமுதுகிட்டோடச் செய்வோம்! அல்லது அவர்களனைவரையும் கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பி வைப்போம்!" என்று கூறினான்.

### கும்பகர்ணனும் மகனும்

கும்பகர்ணனின் மகன் நிகும்பன் எழுந்தான். வயதில் மிக இளையவனானாலும் தந்தையைப் போன்று புஜபல பராக்கிரமம் உடையவனைப்போல் காணப்பட்டான். அங்கிருந்த அனைவரையும் வீரமே இல்லாத கோழைகள் என்று அவன் கருதினான் போலும். "நீங்கள் எல்லோரும் அற்ப மனிதர்களுக்கும் வானரங்களுக்கும் பயந்து நடுங்க ஆரம்பித்து விட்டீர்கள்! எனக்கு அனுமதி தாருங்கள். நான் போய் தந்திரோபாயங்களைக் கையாண்டு இராமனையும் அவன் படையினையும் வெற்றிகண்டு வருகிறேன்!" என்று கர்ஜித்தான்.

தனது மகன் நிகும்பனின் வீராவேசப் பேச்சால் கவரப்பட்ட கும்பகர்ணன் சற்றுப் பெருமையுடன் மகனை ஒரு தடவை பார்த்துவிட்டு, "மகனே! நீ வயதில் சிறியவன்: இத்தகைய பெரியோர் கூடும் இடத்தில் அதிகப்படி பேசுவது முறையல்ல," என்றான், தொடர்ந்து "அண்ணா! உன் தம்பியாகிய நான் கூறுவதைக் கேட்பாயாக", என்று கூறி விட்டு, "இராமபிரானிடமிருந்து சீதையைச் சிறை பிடித்த செயல் தருமநெறிகளுக்கு அப்பாற்பட்ட செயலாகும். பிரம்ம தேவன் வழித்தோன்றல்களான அரக்கர் குலத்தில் வேதத்தை நன்குணர்ந்தவன் நீ! நீதி நெறிகளை முறையாகக் கற்றுத் தேர்ந்தவனும் நீயே! அவ்வாறிருக்க மாற்றான் மனைவியை விரும்புவது உன் நிலைக்கு ஏற்புடையதல்ல. நம் நாடு பல வளங்களைக் கொண்டது, அண்மையில் பல அனர்த்தங்கள் நம் நாட்டில் நடந்துவிட்டதாக அறிந்தேன். அவை எனக்கு நல்ல சகுனமாகப்படவில்லை."

இவ்வாறு கும்பகர்ணன் கூற்றாக கம்பநாட்டாழ்வார் கூறும் செய்யுளைப் பார்ப்போம்:

**அயன் முதல் குலம் இதற்கு**
**ஒருவனாய் நின்றாய்!**
**ஆயிரம் மறைப் பொருள்**
**உணர்ந்தறிவு அமைந்தாய்!**
**தீவினை நயப்புறுதல்**
**செய்தனை தெரிந்தாய்!**
**ஏயின உறத்தகைய**
**இத்துணை யவேயோ?**

*(யுத்த காண்டம்-59)*

**பொருள்:**

***பிரம்ம தேவனுடைய வழித்தோன்றல்களாகிய எமது அரக்கர் குலத்தில் ஒப்பற்றவனாக நீ மட்டுமே நிலைத்து நிற்கிறாய்! பற்பல வேதங்களின் பொருளை அறியும் தகுதி படைத்தவனாகவும் திகழ்கிறாய்! தீவினை அணைத்துக் கொண்டால் அது சுட்டுவிடும் தன்மை உடையது என்பதனையும் தெரிந்து வைத்துள்ளாய்! அவ்வாறிருந்தும் அத்தீயின் செந்நிறத்தை மட்டுமே கண்டு அதன் மீது மோகம் கொண்டாய்! இது வினைப்பயனன்றி வேறு எதுவுமில்லை.***

அறங்களைப் பற்றி அரக்கர் தலைவனிடம் கூறிக்கொண்டிருந்த கும்பகர்ணன், பொதுவாகச் சபையோரைத் திரும்பிப் பார்த்த வண்ணம் தான் உரையாற்றினான். இடையில் தனது அண்ணனின் முகங்களைப் பார்த்தவன் அதிர்ச்சியுற்றான். இராவணனின் கண்கள் இருபதும் கொடும் தணலை அள்ளி வீசின; மீசைகள் துடித்தன. வாய்களிலுள்ள பற்கள் நறநறவெனக் கடிக்கப்படுவதனால் ஏற்பட்ட சப்தத்தையும் கும்பகர்ணனால் கேட்கமுடிந்தது. தான் கூறுவது தன் அண்ணனான இராவணனுக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை என்பதனை உணர்ந்து கொண்டான். அதே ஒரு கணத்தில் தன் நிலையை உணர்ந்து கொண்டான்!

இராவணனின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவன் கும்பகர்ணன், அவனுடைய ஒரேவேளை உணவு நூறு பேருடைய ஒரு நாள் உணவுக்குச் சமமானது. இராவணனைப் பகைத்துக் கொண்டால் ஒரு வேளை உணவுதானும் அவனுக்குக் கிடைக்கப் போவதில்லை. இதனை உணர்ந்ததும் உடனடியாகத் தன் பேச்சின் கருத்துக்களை திசை மாற்றிவிட்டான்.

"இராமனிடமும் அவனுடன் வருவோரிடமும் வீரம் நிறைந்திருக்கலாம். எம்முடன் போர் புரிந்து வெல்லும் ஆற்றலை அவர்கள் பெருக்கிக்கொள்வதற்கு முன்பாக பெருங்கடலைப் போன்ற எமது வீரர்களைத் திரட்டிச் சென்று அவர்களைச் செயலிழக்கச் செய்வதே சரியெனப்படுகிறது!" என்றவாறு தனது உரையை முடித்தான்.

அப்போது இராவணனின் முகத்தில்-சற்று முன்னதாகத் தோன்றிய கடுகடுப்பு நீங்கிவிட்டதைக் கண்டு தெளிவடைந்தான் கும்பகர்ணன்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 76**

**சரியானவிடை:- ததிமுகன்.**

1. **எஸ்.பீ. தேவராஜா,** பிரதான வீதி, கொம்மாதுறை.
2. **எஸ். சிவாந்தினி,** செம்புக்குளி, முந்தல்.
3. **இ. கஜேந்தினி,** 1/17, கூளாவடி 8ம் குறுக்கு, மட்டக்களப்பு.
4. **ஜெ. ஜெயரூபன்,** 107/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு-06.
5. **சுந்தரி,** 63/4, வெலியமுன வீதி, ஹெந்தளை, வத்தளை.

**போட்டி இல. 78** கேள்வி:- **இராவணன் தம்பிமார் இருவரின் பெயர்கள் தருக?**

**ஏப்ரல் 19 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**இராமாயணப் போட்டி–இல.78, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

## காதிலை பூ கந்தசாமி

# தந்தையின் விஜயம்

**தந்தை செல்வாவும்- தளபதி அமுதரும் வானத்தில் இருந்து ஆவியாக இறங்கி வருகின்றனர்.**

(பாடல் ஒலிக்கிறது)

*யுத்த வானம்: யுத்த பூமி–எங்கும்*
*போர் மழை பொழிகிறது!– நாம்*
*வருகையிலே–எம்மை*
*வரவேற்க–ரெண்டு*
*பீரங்கி எழுகிறது!*

**தந்தை:** தம்பி அமுதா! நாம்தான் அகிம்சை வாதிகளாச்சே! நமக்கேன் பீரங்கி வரவேற்பு? யுத்த கமுதாவ பாதுகாப்பு?

**அமுதர்:** அகிம்சைவாதிகளுக்கும் ஆயுதப் பாதுகாப்புத்தான் தேவைப்படுகிறது!

**தந்தை:** அண்ணல் காந்திக்கு ஆங்கிலேயர்கள் எப்போதடா தம்பி பாதுகாப்புக் கொடுத்தார்கள்?

**அமுதர்:** அவர் கேட்கவில்லை, அதனால் அவர்கள் கொடுக்கவில்லை.

**தந்தை:** கேவலம் என்பதால்தானேயடா தம்பி அவர் கேட்கவில்லை. அறவழியே நம் வழி என்றுவிட்டு ஆயுதத்துடன் உறவை வைக்கலாமோ?

**அமுதர்:** தலைவரே! உங்கள் காலம் வேறு. இக்காலம் நேர்மாறு!

**தந்தை:** அதே மக்கள்! அதே மண்! மாற்றம் என்ன கண்டாய் தம்பி?

**அமுதர்:** அன்று தங்களுக்கு ஒரு ஊறு நேர்ந்தால் தம்பிகள் உயிர் கொடுக்கவும் தயாராக இருந்தனர். இன்று தம்பிமார்களால் தம் உயிர்களுக்கு ஊறு நேருமோ என்று எம்மவர்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.



**தந்தை:** (இருமுகிறார்) இதெல்லாம் யாரால் வந்த வினையடா தம்பி?

**அமுதர்:** வாயால் வந்த வினை!

**தந்தை:** புரியும்படியாகச் சொல் அமுதா?

**அமுதர்:**

பத்துத்தடவை பாடை வராது
பதுங்கிப் பாயும் புலியே தமிழா
செத்து மடிதல் ஒரு தரமன்றோ
சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா

என்று மேடையிலே முழங்கினோம். கேட்டோமா, போனோமா, வாக்குப் போட்டோமா என்றில்லாமல், சாகத் தயார் என்று புறப்பட்டு வந்து தொலைப்பார்கள் என்று கண்டோமா? அவர்கள் சிரித்துக்கொண்டே செருக்களம் வந்தனர். நாங்கள் பிளேன் ரிக்கற் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டுக்கு ஓடிவிட்டோம்.

**தந்தை:** (மென்மையாக புன்னகைக்கிறார்) அப்போதே சொன்னேன். கூட்டத்தைக் கண்டதும் கூவவேண்டாம். உணர்ச்சியை மண்ணில் தூவ வேண்டாம். தம்பிமாரை உசுப்பேத்த வேண்டாம் என்று படிச்சுப் படிச்சு சொன்னேனே தம்பி. யார்தான் கேட்டீர்கள். நீ கேட்டியா? சிங்கம் சிதம்பரம் கேட்டாரா? வங்கக் கடலாக வாயை விரித்தீர்கள். அதனால்தானே பங்கம் வந்தது.

**அமுதர்:** நீங்கள் மெல்லப் பேசியது எங்களுக்கு எங்கே கேட்டது?

**தந்தை:** கேட்டாலும் கேட்காததுபோல கூவிக்கொண்டு திரிந்தீர்கள். எத்தனை பட்டம், எத்தனை கூட்டம். கண்மண் தெரியவில்லையப்பா உங்களுக்கு.

தந்தை சொல்ல, தளபதி அமிரின் நினைவுக் குதிரை டொக் டொக் டொக் என்று பின்னோக்கிப் பறக்கிறது.

**1977**

மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. இளைஞர்கள் கியூ வரிசையில் காத்திருக்கிறார்கள். மேடையில் தளபதி அமிர், உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரம் என்று ஒரே தலைவர்கள் பட்டாளம்.

'வாழ்க ஈழத் தமிழகம் வாழ்க வாழ்க வாழ்கவே' என்னும் பாடலை மங்கையக்கரசி பாடுகிறார். கியூவில் நின்ற இளைஞர்கள் உணர்ச்சி கொப்பளிக்க தங்கள் கைகளை பிளேட்டுக்களால் கீறிக் கிழிக்கிறார்கள். அகிம்சைவாதிகளான தலைவர்கள் மெய்சிலிர்த்தபடி அதனை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமுதருக்கும்-சிவசிதம்பரத்தாருக்கும் இரத்தத் திலகங்கள் சூட்டப்படுகின்றன.

சிவசிதம்பரத்தாருக்கு இரத்தத் திலகமிடும் ஒரு இளைஞர் உணர்ச்சி கொப்பளிக்க கேள்வி தொடுக்கிறார்;

"எங்கள் உடுப்பிட்டிச் சிங்கமே! எப்போது வரும் தமிழீழம்?"
"அடுத்த தேர்தலுக்கு முன்பு கிடைத்து விடுமடா தம்பி!"
"வாழ்க எங்கள் சிங்கத் தலைவன்!"
"வாழ்க வாழ்க!"
"தமிழீழ முதல்வர்: தளபதி அமிர்.."
"வாழ்க வாழ்க!"
"துரோகிகள்!"
"ஒழிக!"
"துரோகிகளை!"
"ஒழிப்போம்!"

அகிம்சைவாதிகளான தளபதி அமுதர் முகத்திலும்-சிங்கம் சிவா முகத்திலும் வெள்ளிப் புன்னகை பளீரடிக்கிறது.

### சிவசிதம்பரம் உரையாற்றுகிறார்

பெரியோர்களே! தாய்மார்களே! தம்பிமாரே!

தமிழ் ஈழ தனியரசை நிறுவ உங்கள் முன் ஆணை கேட்டு வந்திருக்கிறோம். சமஷ்டி கேட்டோம், சம உரிமை கேட்டோம், இனிமேல் சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் வாழ முடியாது என்பதால் தமிழீழமே முடிந்த முடிவு என்று உங்கள் முன் வந்திருக்கிறோம். மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் தமிழீழ இலட்சியத்தை நம்மிடம் விட்டுச் சென்றுள்ளார்கள். அவரது சமாதியிலே நின்று நாங்கள் சத்தியப்பிரமாணம் செய்திருக்கிறோம்.

அந்த சத்தியப்பிரமாணத்தை நிறைவேற்ற சுதந்திர சோசலிச தமிழீழக் குடியரசை நிறுவ ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். சிங்களக் கட்சிகளுக்கோ, அவர்களின் எஜெண்டுக்களுக்கோ உங்கள் வாக்குகளை வீணாக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(கரகோசம் வானைப் பிளக்கிறது. பட்டாசுகள் முழங்குகின்றன)

அமுதரைத் தொட்டு உலுப்புகிறார் தந்தை செல்வா. பழைய நினைவுகளை உதறுகிறார் அமுதர்.

**தந்தை:** என்ன தம்பி அமுதா! திடீரென்று பேச்சு மூச்சையே காணோமே?

**அமுதர்:** பழைய நினைவுகள், பசுமையான நினைவுகள். பேசிப் பேசித் திரிந்த காலங்கள். மரணப்படுக்கையிலும் மறக்க முடியாத காலங்கள் தந்தையே!

பேசிக்கொண்டே கொழும்பு பம்பலப்பிட்டி அருகே இருவரும் வந்துவிட்டனர். கதிரேசன் மண்டபத்தில் சனநடமாட்டம் தெரிகிறது. தந்தை முகத்தில் ஆச்சரியம்!

**தந்தை:** தம்பி அமுதா! அதோ பார் என் படம்போல தெரிகிறதே. யாரப்பா அது?

**அமுதர்:** உங்கள் படமேதான் தலைவரே! உங்களுக்கு நூற்றாண்டுவிழா நடத்துகிறார்களே!

**தந்தை:** அதிசயம் அமுதா ஆனால் உண்மை. என்னையும் நினைவில் வைத்திருக்கிறார்களா!

**அமுதர்:** சோழியன் குடுமி சும்மா ஆடாது தலைவரே.

**தந்தை:** என்னப்பா தம்பி சொல்கிறாய்?

**அமுதர்:** உங்கள் பெயரைச் சொல்லி தாங்கள் இருப்பதை நினைவூட்டத்தான் இந்த விழாக்கள்!

**தந்தை:** ஏனடா தம்பி உனக்கு மட்டும் இவர்கள் விழா நடத்துவதில்லை?

**அமுதர்:** அடுத்த தேர்தலுக்கு முன்னர் அமரராக அவர்கள் விரும்பவில்லை தலைவரே!

**தந்தை:** பொறு அமுதா! சிவா என்ன பேசுகிறார் என்று கேள்!

### சிவா பேசுகிறார்

தமிழ் மக்களின் பிரச்சனைக்கு சமஷ்டி தான் ஒரே தீர்வு என்றுதான் தந்தை செல்வா சொல்லியிருந்தார். நாம் யாரையும் ஆயுதம் ஏந்தச் சொன்னதில்லை. அகிம்சை வழியே எம் வழி. தந்தை செல்வா இன்றிருந்தால் அவரும் அரசியல் தீர்வுப் பொதியை ஆராய்ந்து கொண்டுதான் இருந்திருப்பார் என்பதை சொல்லிவைக்க கடமைப்பட்டுள்ளேன்.

தந்தை செல்வா அவர்கள் விட்டுச் சென்ற சமஷ்டிக் கோட்பாட்டைத்தான் நாம் பொதிக்குள் தேடிக்கொண்டிருக்கிறோம். பொது ஜன முன்னணிக்கு நாம் வாக்களிக்கச் சொன்னவுடன் ஒன்று திரண்டு வாக்களித்து கொழும்பில் அதனைத் தோற்கடித்த தமிழ் பெரும் குடி மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் மட்டும் பொதுஜன முன்னணியை கொழும்பில் ஆதரித்திருக்காவிட்டால் அதன் வெற்றி உறுதியாகியிருக்கும் என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

சிவா தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அமுதர் திரும்பி தந்தையைப் பார்க்கிறார்.

அந்தோ தந்தை செல்வா மூச்சில்லாமல் விழுந்து கிடக்கிறார்.

தந்தை செல்வா இரண்டாவது தடவையாகச் செத்துப்போனார்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06
580230


# நயமுணர்ந்து தரமறிந்து தீஞ்சுவை கலந்து வாழ்த்தனுப்பிய வாசக நெஞ்சங்கள் அனைவரையும் ஆரத்தழுவுகிறது முரசு!



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


## முதலிடத்தில்...



← சர்வதேச ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக விளையாடும் வீரர்களில் முதலிடத்தில் இருக்கிறார் வாசிம் அக்ரம். சமீபகால போட்டிகளின் அடிப்படையில் செய்யப்பட்ட தர நிர்ணயப்படி வாசிம் அக்ரமுக்கு முதல் மரியாதை கிடைத்திருக்கிறது.

உலகக் கிண்ணப் போட்டியில் கோட்டை விட்டாலும்கூட, இன்று உலகில் முதலிடத்தில் உள்ள அணி என்ற பெருமையை தட்டிக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான் அணி. சிறந்த கப்டன் என்ற பெயரையும் தேடிக் கொண்டார் வாசிம் அக்ரம்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 300 விக்கெட்டுக்களுக்கு மேல் சரித்து அதிக விக்கெட்டுக்களை சரித்த முதல்வீரராக சாதனைச் சிகரத்தில் இருக்கிறார் வாசிம் அக்ரம்.

சார்ஜாவில் தற்போது நடைபெற்று வரும் போட்டிகளில் வாசிம் அக்ரம் தாடியுடன் காணப்படுகிறார். அவரது குரு இம்ரான்கானின் தோல்வியால் ஏற்பட்ட சோகமோ?

இம்ரான்கான் குருவாக இருந்தாலும் அவரைப்போல விளையாட்டுப் பிள்ளையாக பெயரெடுக்க வாசிம் அக்ரமுக்கு ஆசையில்லை. அதேபோல் அரசியலிலும் மூக்கை நீட்டவில்லை. கிரிக்கெட்டில் மட்டும்தான் இம்ரான் குரு! ■

## பறக்கும் தாத்தா



## விண்ணிலிருந்து மண்ணுக்கு...



↑ விமான விபத்துக்கள் ஏற்பட விமானிகளின் அனுபவக் குறைவும் ஒரு காரணம். கறுப்பாக ஏதோ எதிரே வந்தது. பொத்தென்று குதித்துவிட்டேன் என்று நம் நாட்டில் அன்ரனோ விமானி ஒருவர் சொன்னது நினைவிருக்கலாம். மேலே படத்தில் இருக்கும் தாத்தாவைப் பாருங்கள். 96 வயது. இந்த வயதிலும் கம்பு மாதிரி நிற்கிறார். விமானம் ஓட்டுகிறார். ஒரு விபத்துக் கூட நேர்ந்தது கிடையாதாம். மிகக் கூடிய வயதில் விமானம் ஓட்டும் விமானி என்ற உலக சாதனையாளர் இவர்தான். இவரது பெயர் கிளரென்ஸ் ரோனிஸ். அமெரிக்காவை சேர்ந்தவர்.

முதன் முதலில் மே.6.1918ல் விமானம் ஓட்ட ஆரம்பித்தாராம். இன்றுவரை அசராமல் பதறாமல் ஓட்டிக்கொண்டிருக்கிறார் இந்த சாதனைத் தாத்தா ஓல்ட் இஸ் கோல்ட். ■

← வானத்திலிருந்து பரசூட்டுடன் குதிக்கும் விளையாட்டு 'பரசூட்டிங்' என அழைக்கப்படுகிறது.

முதன் முதலில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த பவுஸ்ரஸ் ஹெரான்க்சின் 1617ல் மலையிலிருந்து பரசூட்டுடன் குதித்தார். அப்போது சதுர விதானம் போன்று அமைத்து அதில் துணி இணைத்து அதனைக் கொண்டுதான் குதித்தார். இப்போது பல நவீன பரசூட்டுகள் வந்துவிட்டன. விமானத்திலிருந்து குதித்தல், பலூனிலிருந்து குதித்தல் என குதித்தலிலும் பல இரகங்கள் உள்ளன. காற்றழுத்தம் குறைவான உயரமான வெளிகளில் குதித்து ஆடி ஆடி மெதுவாக விழுவதும் ஒரு விளையாட்டு.

படத்தில் விமானத்திலிருந்து குதிப்பவர் லெப்டினன்ட் கேர்ணல் வில்லியம் எச்.ரான்கின். மொத்தமாக 40 நிமிடங்கள் சென்றன இவர் தரையை வந்தடைய. 26-ஜூலை, 1956ல் அமெரிக்காவின் வட கலிபோர்னியாவில் இடம்பெற்ற இந்தக் குதித்தல்தான் நீண்ட நேரக் குதிப்பு என்ற உலக சாதனையுடன் கின்னஸில் பதிவாகியுள்ளது.

விமான விபத்துக்கள் நடக்கும் வேகத்தைப் பார்த்தால் விமானிகள் அனைவரும் இப்பயிற்சியில் கைதேர்ந்திருப்பது நல்லது போல் தோன்றுகிறது. ■

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி சோபினி ஜோதிராஜா


K-2/4, மாளிகாவத்தை தொடர் மாடியைச் சேர்ந்த ஜோதிராஜா- குமுதினி தம்பதியின் செல்வப்புதல்வி சோபினி தனது முதலாவது பிறந்த நாளை 17-04-97 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அம்மா; அப்பா, அம்மம்மா, தாத்தா, சித்திமார், மாமாமார், நாவலப்பிட்டியைச் சேர்ந்த அப்பம்மா, தாத்தா, காலியைச் சேர்ந்த பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பா மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும்-பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் ஸ்ரீதேவி- கருமாரி அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*பிரமிளா சித்தி*

↓ இதுதான் உலகிலேயே மிகப் பெரிய்ய்ய ஆமை. ஆமையிலும் பல இனங்கள் உண்டு. இது நட்சத்திர ஆமை இனத்தைச் சேர்ந்தது.

1994ல் இதன் எடை 385 கிலோ. (849 இறாத்தல்). தொடர்ந்து பெருத்துக் கொண்டே இருக்கிறது என்று கின்னஸ் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளனர். இப்போது ஆயிரம் இறாத்தலை எட்டியிருக்கலாம்.

வயிறும் ரொம்பப் பெரிசு. தர்பூசணிகள் கிடைத்தால் ஒரு பிடி பிடித்து விடும்.




அமெரிக்காவில் உள்ள ஃபுளொரிடா மாநிலத்தில் லைஃப் ஃபெலோசிப் பறவைகள் சரணாலயத்தில்தான் இதனை வளர்க்கிறார்கள். இதன் பூர்வீகம் தெற்கு இசபெல்லா.

1960ல் அங்கிருந்து இரண்டு நட்சத்திர ஆமைக்குட்டிகளை சரணாலயத்துக்கு கொண்டுவந்தனர். அதில் ஒன்றுதான் இது. 1960ல் இதன் எடை ஆக இரண்டு இறாத்தல் மட்டும்தான்.

இதற்கு 'கோலைய்யா' என்று பெயரும் சூட்டியிருக்கிறார்கள்.



படிப்பகம்